ஸஞ்சிகை 13

ஸ்ரீ வாணீ விலாஸினீ.

பராபவ௵

சித்திரை௴

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 MAR 1907
MADRAS.

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1906.

Copyright Registered.

THE MADRAS LAW TIMES.

A Cheap, ILLUSTRATED "Multum in Parvo" Legal Periodical.

Published **Fortnightly** in Four Separate Parts.

"Well conducted" and "Ably Edited" with the co-operation of eminent Editorial and regular Reporting Committees.

Warmly welcomed by the PROFESSION.
Proudly patronized by the PUBLIC.
Eminently extolled by the PRESS.

Main Features:—

(1) Biographical sketches of the Bench and the Bar.
(2) Beautiful Portraits of Judges and Lawyers.
(3) Contributions by eminent Lawyers and Jurists.
(4) Cream of Contemporary Legal Literature.
(5) Notes and Discussions on Current Legal topics.
(6) Verbatim Reports of all Privy Council cases.
(7) Prompt publication of important decisions of all the Indian High Courts.
(8) "Well arranged" Digest of every one of the cases reported and noted in all the Indian Law Reports and Journals, official and private.
(9) Summary of all interesting English and American Cases, and notes of Privy Council Cases.
(10) Free supply of all Acts, Regulations, Rules and Circulars passed and issued by the Government of India, the Local Governments and the Indian High Courts, and Boards of Revenue.
(11) A consolidated Digest and a periodical abridgment and Current Index.
(12) High-class printing and neat get-up.

Annual Subscription:— Rupees Twelve. (*Post Free*).

A good Advertising Medium.

Address all orders and communications to,

"THE MADRAS LAW TIMES OFFICE,"
HIGH COURT BUILDINGS,
MADRAS

விஷயங்கள்.

1. விபீஷண சரணாகதி. பி. ஆர். கிருஷ்ணமாசாரியார். 1.
2. மல்லிகாமாருதம். மோ. க. சடகோபாசாரியார். 17.
3. ஸ்ரீராமாநுஜ சரிதம்.
ஸ்ரீ ச்யாமதேசிக திருமலைதாதாசாரியசர். 34.
4. சிறுபிழை பெருந்துயராதல். மூன்று நண்பர்களின் கடிதங்கள். சருக்கை. இராமசாமி ஐயங்கார் பீ. ஏ. 40.
5. மைசூர். (படத்துடன் கூடியது). 50.
6. பெண்மணி. தி. வெங்கட்டராமய்யங்கார். 61.
7. கீழ்நாடு, மேல்நாடு. (ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள் வங்காளி பாஷையில் செய்திருக்கும் உபந்யாஸத்தின் மொழிபெயர்ப்பு). 66.
8. கம்பன். வி. வி. ஸ்ரீனிவாஸாசாரியன் பீ.ஏ., பீ.எல்., 76.
9. விகடஸஞ்சீவினி. 87.
10. சென்ற மாதம். 92.
11. சிறுவர்க்கான பக்கங்கள்.
மூடபக்தியானாலும் பக்தி சிறந்தது. பார்வதி. 97.
12. தேசாபிமானம். ம. கோபாலகிருஷ்ணையர். 104.

Action Songs, Songs on Object Lessons

AND

Kindergarden Stories.

(IN TAMIL)

BY

C. K. NARAYANASWAMI AIYAR, *Head Master Government Girls, School, Madura.*

SECOND EDITION REVISED AND ENLARGED.

Price Annas 6 Postage Exclusive.

Apply to THE MANAGER,
Bookselling Department,
SRI VANI VILAS PRESS, ***Srirangam.***

Messrs. Spencer & Co., Ltd.

TRICHINOPOLY DEPOT.

ÆRATED WATERS.

FRESH,

COOL

&

REFRESHING.

Prices Greatly Reduced.

SODA, LARGE	0=10=0 per doz.
Do. SPLIT	0=6=0 Do.
SWEET DRINKS.	1=4=0 Do.
Do. SPLIT	0=12=0 Do.

SPENCER & Co., Ld.

கிருஷ்ணராஜ உடையார்—மைசூர் மஹாராஜா.

வா. 3. பராபவஞூ சித்திரைமீ ந. 13.

விபீஷண சரணாகதி.

ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் படைகூட்டிக் கடற்கரையிற் குறுக வந்து விட்டார்களென்ற செய்திகேட்டதும், இலங்கை வேந்தனான இராவணன் தனது சுற்றத்தார்களையும் அமாத்திய புரோகிதவர்க்கத்தையுந் திரட்டிக் குறுக விருந்து "இனிச் செய்யலாவதென்ன?" என்று காரிய விசாரம் பண்ண வாரம்பித்தான். அப்போது, அங்கே சூழவிருந்த பிரஹஸ்தன், மஹாபார்சுவன், இந்திரஜித்து முதலான பிரமுகர்கள் அவன் சோற்றையுண்டு வளர்ந்தவர்களாகையால், மேல்வருவதொன்றையுமே யுணராதவர்

களாய், அவனுக்கு அபிமதமானவற்றையே சொன்னார்கள். இராவணனுமவற்றைச் செவிக்கினியனவாகக் கேட்டுமகிழ்ந்து தனது தோள்களையும் மார்பையும் பார்த்து இறுமாந்திருந்தான். இந்நிலையில், விபீஷணன், அதிக்கிரமத்திலே கைவளர்ந்திருக்கிற இராவணனுக்குந் தனக்குமுள்ள விடவொண்ணாத ஸகோதர ஸம்பந்தத்தை நோக்கி, யிவனுடைய வனர்த்தந் தன்னுடையதாகக்கொண்டு சடக்கெனவிதனைப் பரிகரிக்கவேண்டுமென்ற நினைவால், "மைதிலியாரைத் தாசரதியார் பக்கல் விட்டுவிடுவதே நலம்; இன்றேல் அவ்வாண்டகையாரது அதிவிசித்திரமான பாணங்கள் அரக்கர்குலம் அடியோடு அழிந்தவியும்படி நம்மெல்லோருடைய சிரங்களையும் அறுத்துக் கீழேதள்ளிவிடும்; இது நிச்சயம்." என்று கார்ய சௌகர்யத்தையும், செய்யாவிடில் நேரப்போகுங் கொடிய விபத்தையும் முன்பிறந்தவனை இராவணன் மனத்திலே பசுமரத்தாணிபோற் பதியும்படி நன்றாக எடுத்துச் சொன்னான். இவ்வார்த்தையைக்கேட்ட இந்திரஜித்தானவன் குலுங்க நகைத்து "இளையவர் சொன்னவார்த்தை யிருந்தபடியென்! காரியத்திலும் இளமை தோற்றியிருந்தது; இக்குலத்திற் புகுந்தவர்களு மிவ்வார்த்தை சொல்லுவார்களோ?" என்று நெகிழ வுரையாடினான். விபீஷணன், இவ்வாறு தன்னிலை தெரியாமற் பிதற்றுகின்ற பேதைப்பிள்ளையைப் பார்த்து, "அட, கெடுவாய்! இராவணனுக்கு ஸ்ரீராமனோ சத்துரு; பசுமுகங்கொண்ட புலியேறுபோல மகனென்று பேரையிட்டு உள்ளே நின்று கழுத்தறுக்கின்ற நீயன்றோ சத்துரு; சத்துருக்களைத் தலையறுக்கப் பார்க்கில் முதலிலுன்னையன்றோ தலையறுக்க வடுப்பது." என்று சிலவார்த்தைகளைச் சொல்ல, இவற்றைக் கேட்டுத் தரியாத இராவணன் குபிதனாய் மகனுக்குப்பரிந்து "உன்னையொழிய வேறொருவன்

இந்த வார்த்தை சொன்னாகில், இப்போதே வேலின் முனையிலோ, யானையின் கொம்பிலோ, கழுவின் தலையிலோ மாய்ந்திருப்பான். உடன்பிறந்து கொல்லும் வியாதியென்னும்படி இக்குலத்திற்கு இழுக்காய்ப் பிறந்தாய்; உன்னை நாம் வேண்டோம்; என் கண்முகப்பினின்றும் ஓடிப்போ." என்ன, இவனும் தமயனாரது வசனத்தை யதிலங்கனம் பண்ணலாகாதென்று உட்கொண்டு, ஸம்ஸார ஸாகரத்தைக் கடப்பதற்கு ஒரு தெப்பம்போலே யிருக்கிற கதாயுதத்தைக் கையிலேந்திக் கரசரணாதி யவயவங்களைப் போன்றவர்களான நான்கு இராக்ஷஸர்களையுங் கூட்டிக்கொண்டு, இராவணனை விட்டபோதே யெல்லாருக்கும் மேலானனென்று தோற்றும்படி கிளம்பி மேல்பெறப்போகிற லங்கைசுவர்யத்துக்கு அடியுண்டாம்படி விஷ்ணுபதத்தைப் பற்றி "எல்லை நீ போதாய்" என்று பிறருபதேசிக்க வேண்டாதவனாய்த் தாய்நாடுங் கன்றுபோலச் சீக்கிரத்தில் ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருக்குமிடத்திற்கு வந்தான்.

மேருபர்வதத்தின் கொடுமுடியையொத்த கம்பீரமான தோற்றத்தையும், மின்னற்கொடியை யொத்த பிரகாசத்தையுமுடைய விபீஷணன், இலங்கையினின்றுங் கால்வாங்கி யாகாசத்திற் கிளம்பினபோதே (பூமியிலே காவலுக்கு ஏற்பட்டவர்களாயினும் தாங்கள் அதிகரியாத ககனரக்ஷணத்திலும் அவஹிதர்களான) வானர சிரேஷ்டர்களெல்லோரும் ஒரே காலத்தில் தாங்களிருந்த விடத்திலிருந்தே கண்டார்கள். ஸுக்ரீவன், ஆகாசத்திற்கிளம்பின விபீஷணனையும், அவனுடைய நான்கு மந்திரிகளையுங் கண்டு, தான் பலவானாயினும் தன் சேனைக்கூட்டத்திற்கு என்ன விளையுமோ என்று பயந்து, தூதனோ, ஆர்த்தனோ, பகைவனோ இவன் யாரோவென்று கலங்கித், தன் குசலபுத்தி

யால் மற்றைய வானரர்களோடுஞ் சிந்தித்து, வருகிற அரக்கர்களைச் சத்துருக்களென்றே சீக்கிரத்தில் நிச்சயித்து, ஆஞ்சனேயர் முதலான எல்லாரையும் நோக்கி "பிறப்பாலுங் கர்மத்தாலுங் குரூரனான இந்த ராக்ஷஸன் நம்மைக்கொல்ல எல்லா ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு மற்றும் நான்கு ராக்ஷஸர்களோடும் வருகின்றான்; இதிற் சந்தேகமில்லை; பாருங்கள்." என்று இந்த உத்தமமான வார்த்தைகளைச் சொன்னான். சமஸ்தமான வானரோத்தமர்களும் சுக்கிரீவன் மொழிந்த வசனத்தைக் கேட்டுத் தங்கள் கைகளுக்கெட்டினமரங்களையும், சைலங்களையும் பிடுங்கிக்கொண்டு 'ஓ, ராஜனே? இந்தத் துராத்மாக்களைக் கொலைசெய்யும்படி யெங்களுக்குக் கட்டளையிட்டருள வேண்டும். அற்ப பலமுடைய இவர்களெல்லோரையும் நாங்கள் யானைவாய்க் கீரையாக அடித்துக்கொன்று பூமியில் தள்ளிவிடுகின்றோம்.' என்று மொழிந்தார்கள்.

இப்படி யிவர்கள் தன்னைக்கொல்லுவதாக ஒருவர்க்கொருவர் சம்பாஷித்துக்கொண்டிருப்பதை யனுதரித்து, நல்ல புத்திமானான கம்பீர ஸ்வபாவத்தையுடைய விபீஷணன், "நாகணைமிசை நம்பிரான் சரணே சரணமக்கு" என்றபடி ஸ்ரீராகவன் திருவடிகளே தஞ்சமென்றெண்ணி, வடகரையில் வந்து ஆகாசத்திலேயே நின்றுகொண்டு தன்னைநலிய வந்தவர்களான சுக்கிரீவ மஹாராஜனையும் மற்றைய வானர வீரர்களையும் நோக்கி, "மரங்களுமிரங்கும் வகை மணிவண்ணா வென்று கூவுமால்" என்கிறபடி யவர்களெடுத்த மரங்களும், "வாஸுதேவதரு" என்றும், "பிர்ம்மதரு" என்றும், "நிவாஸவிருக்ஷம்" என்றும் சொல்லுகிற பெரியமரமும் கேட்டிரங்கும்படி பெரிய சப்தத்தோடு ஒரு வார்த்தை சொன்னான். அதாவது:—"தீய ஒழுக்கந்தையுடைய வரக்கர் குலத்திலே பிறந்து அவ்வர

க்கங்களுக்கே தலைவனாய் ஒருவரையும்மதியாமல் எல்லாரையும் தன் துர்நயத்தால் நோவப்பண்ணிக்கொண்டு பிரஸித்தனாகவிருக்கிற இராவணனுக்கு நான் தம்பி, எனக்கு விபீஷணன் என்று பெயர்; அந்த இராவணன் (கர்ப்பவாஸ முதலான கிலேசங்கள் ஒன்றுமேயில்லாமற் சௌகுமார்யங் குலையாதபடி பிறந்தவளான) சீதாதேவியை (திருவயோத்தியிலிருப்பது சிறையென்னும்படி பூக்கொய்தல் நீர் விளையாடல் முதலிய போகங்களுக்கு ஏகாந்தமான) ஜனஸ்தானத்திலிருந்தும் எடுத்துக்கொண்டு வரும்போது சண்டைக்குவந்த ஜடாயுவைக்கொன்று தன்னசோகவனிகையில் "இட்டகாலிட்ட கைகளாய்" என்னும்படி பராதீனையாய் சந்தோஷமில்லாதவளாயிருக்கும்படி வைத்து, எங்கும் போகவொட்டாமல் தடைசெய்து, ஏகாக்ஷீ, ஏககர்ணீ தொடக்கமான இராக்ஷஸிகளைக் காவலாய் வைத்தான். இப்படியிவன் பண்ணின அபராதத்தைக் கண்டபோதே நெருப்புப்பட்ட வகத்தினின்றும் புறப்படுவாரைப்போல அப்போதே புறப்படப் பிராப்தமாயிருக்க, அவனுக்கும் இதஞ்சொல்லி மீட்டு உய்விக்க வெண்ணி, நான், "நீ கொண்டுவந்த ஸீதையை ஸ்ரீராமனுக்குக் கொடுத்துவிடு" என்று அனேகந்தடவை யனேகம் விதமாகச்சொன்னேன். "அவ்வாறு செய்யாவிடில் நீ பிழைக்கமாட்டாய்" என்று பல உதாஹரணமுங்காட்டினேன். வியாதி அதிகரித்துச் சாகக்கிடக்கிறவன் மருந்தை யெவ்விதம் சுவீகரிப்பனோ அப்படியே நான் சொன்ன (அவனுடைய உஜ்ஜீவனமே பிரயோஜனமான) வாக்கியங்களை யவன் காலனுக்கு வசப்பட்டிருந்ததனால் செவிதாழ்த்து அங்கீகரிக்கவில்லை. அவனுக்கு ஹிதந்தேடினவென்னை அவனும் அவன் பரிஜனங்களும் உச்சிஷ்ட போஜிகளான அடியாரிற்கடையனைக் கருதிப் பரிபவம் பண்ண, நான் தாயபுத்தி

ரர்களைவிட்டு "ஹ்ராதா ஹத்லாவ ஸுஹ்ருஷ்ஹ விதாவ ஜஜ நாவவ:" என்கிறபடி, விட்ட எல்லாவுறவுந் தாமாக வல்லவரான ரகுகுலத்திலவதரித்த ஸ்ரீராமனைச் சரணமாகப்பற்றினேன். எல்லாவுலகங்களுக்கும் ரக்ஷகனாய் அப்படி ரக்ஷிப்பதே ஸ்வபாவமாகவுடையவனாய், அந்தஸ்வபாவமுடைய குலத்திலவதரித்தவனாயுள்ள ஸ்ரீராமனுக்கு இங்கு வந்தவென்னைச் சீக்கிரத்திலறிவியுங்கள்." என்பதாம். சுக்கிரீவமஹாராஜன் விபீஷணனுடைய இச்சொல்லைக் கேட்டுச் சீக்கிரம் எழுந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்களிடஞ் சென்று "ஏ, பரந்தாமா! தேவரீர் முன்போலிருக்கக்கூடாது. தூதனால் பகைவரது பலத்தைத் தெரிந்து, மந்திரிகளோடும் யோஜித்துச் சேனையை வியூகமாக வகுத்து, நான்கு உபாயங்களையுஞ் செலுத்தி ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். தேவரீர்க்கும் வானரர்களுக்கும் மற்றையோர்க்கும் மங்கள முண்டாகட்டும். இந்த அரக்கர்கள் தங்களுக்கு இஷ்டமான சரீரத்தை யெடுத்துக்கொண்டு மறைந்திருந்து பிறரை வஞ்சிக்கும் உபாயத்தையறிந்த சூரர்களாகையால், இவர்களிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது. சரணம்புகுந்த இவன் இராவணனாலேவப்பட்டு இங்கே வந்தவனாவான்; பிரதிகூலனான இவன் நம்பக்கலில் அநுகூல வேஷத்தோடே பிரவேசித்துச், சுகதுக்கங்களை யொன்றுய்க்கலந்து அநுபவிக்கும் நம்மிலொருவர்க்கொருவர் பகை கொள்ளும்படி பேதித்து உபத்திரவஞ் செய்வான். இதிற் சிறிது ஸம்சயமில்லை. இல்லாவிட்டால், கூர்மையான புத்தியையுடைய இந்த விபீஷணன், இராவணன், முன்பு சந்நியாசி வேஷங்கொண்டு நலிந்தாற்போல, சரணாகத வேஷத்தைக்கொண்டு நம்முடனே யொரு நீராகக்கலந்து, நம்பிக்கையுடையவனாகவே நடந்து இடம்பெற்றபோதிலே, நலியவந்தானாகவுங்கூடும். மேலும், சிநேகிதர்கள், வே

டர்கள், குலபரம்பரையில் வந்த தாஸர்கள், கூலியாட்கள் என்கிற இவர்களுடைய பலத்தை யேற்றுக்கொண்டு சத்துரு பலத்தைவிட்டு விடவேண்டுமென்று நீதியுமிருக்கின்றது. இந்த விபீஷணன் பிறப்பிலோ ராக்ஷஸன்; நமக்குப் பகைவனான இராவணனுக்கு உடன் பிறந்தவன்; வந்ததோ அமித்திரனது ஒலக்கத்திலிருந்து; இப்படியாக இவனை யெப்படி நம்பலாம்? ஸ்வாமி! தேவரீர் யோஜித்துப் பார்த்தருளவேண்டும். யுக்தமறிவார்க்குத் தலைவரான பெருமானே! தேவரீர் அநுகூலனென்று பிரமிக்கிற இந்த நிசாசரன் நம்பலத்தை யறிகைக்காக, இராவணனால் தூதாக விடப்பட்டவனென்றே யறியத்தக்கவன். பகவத்விரோதமுண்டான விடத்தில் வதமே கர்த்தவ்ய மென்பது சாஸ்திர சித்தமாகையால், நான் இவனைக்கொல்வதே யுக்தமென்று நினைக்கிறேன். அனகனே! தேவரீர் தோஷமறியாதவராகையால் இராவணன் தன் குடிலபுத்தியால் இவனை யனுப்பினனென்று இவன் தோஷத்தை யறியவில்லை. கபடோக்தியால் தன் வடிவத்தை மறைத்து, நம்மெல்லோருக்கும் நம்பிக்கையைப் பிறப்பித்துப் பின்னர் நன்றாய் நம்மை நலிவதற்குச் சமீபத்தில் வந்திருக்கின்றான். வந்துள்ள சத்துருவினது குணாகுணங்களைப் பரிசீலனம் பண்ணாவிடில், அவன் சத்துருசேனையில் நுழைந்து அவர்களுக்கு அந்தரங்கமுடையவன்போலிருந்து, தன்னிடத்தில் விசுவாசம் வரச்செய்துகொண்டு, எதிரிகள் பராக்காயிருக்குங் காலத்தில் வாயசமானது பகலில் கண்தெரியாத உலூகங்களை நலிவதுபோல, ஒருவனாயிருந்தே, அந்தச்சேனையைக் கொல்லுவன். இந்த விபீஷணன், கொடுஞ்செயல்களைப் புரிந்துலோககத்திற்குக் கண்டகனாகவிருக்கிற இராவணனது சகோதரனாகையாலே, நம்சேனையிற் புகுவதற்கு முன்னமே இவனோடு கூட்டுப்படையாய் வந்த இராக்ஷஸர்களை

யிவன்முன்னே சித்திரவதஞ்செய்து, பின்பு இவனையும் துண்டு துண்டாய் அறுத்துக்கொன்று விடுவோம்." என்று சொன்னான். பிறரால் மறுக்கவொண்ணாதபடி சொல்ல வல்ல வாஹிநீபதியான ஸுக்ரீவன், முதலிகளுக்கெல்லா மிஷ்டமான இந்த வார்த்தையைப் பரபரப்புடன், தன் மதமே ஸித்தாந்தமாம்படி வார்த்தை சொல்ல வல்லவனான ஸ்ரீராமனைக்குறித்துச் சொல்லிப், பின்பு அவன் அருளிச்செய்யும் வார்த்தையைக் கேட்போமென்று மௌனமாயிருந்தான். மிகுந்த கீர்த்தியை யுடையவனான ஸ்ரீராமன் சுக்கிரீவன் இவ்வாறு சொன்ன வார்த்தையைக்கேட்டு, நாம் நேரிற் சொன்னாற் கேட்கமாட்டானென்றறிந்து, அங்கிருந்த ஆஞ்சனேயரைப் பிரதானமாகவுடைய வானரர்களை நோக்கி "விபீஷணன் நமக்குச் சத்துருவான இராவணன் தம்பியென்று இவனை நம் கோஷ்டியில் சேர்க்காமைக்குத்தகுந்த யுக்தி யுக்தமாயும், எல்லாருமாசை கொள்ளும்படி மதுரமாயுஞ் சொன்ன சுக்கிரீவன் வார்த்தைகளை நீங்களும் கேட்டீர்களல்லவா? ஒன்றுக்கொன்று விருத்தங்களான இரண்டையுஞ் செய்தே யாகவேண்டியிருக்கிற சங்கடமான காரிய காலத்தில், யுக்தாயுக்தமறியத்தக்க புத்திமானையும், நினைத்தபடி நடத்த ஸமர்த்தனையும், நச்வரத்தில் கண்வையாமல் அழிவில்லாமலிருக்கிற ஸம்பத்தையே யிச்சிக்கிறவனையும், நொந்தாரைக்கண்டால் பொறுக்கமாட்டாத மனமுடையவனையுமிருக்கிற உத்தமனான சிநேகிதனுக்கு, வந்த ஸங்கடம் நீங்கும்படியாகச் செவ்வையாய் விசாரித்துச் சொல்லுகை யுக்தமன்றோ?" என்று திருவாய் மலர்ந்தருளினான். இவ்விதம் ஸ்ரீராமன், ஆசாரியனை சிஷ்யர்கள் கேட்பதுபோல வானரர்களை நயமாகக்கேட்க, அவர்களும் ஸ்ரீராகவனுக்கு ஹிதத்தையே நினைந்து, ஜாக்கிரதை யுடையவர்களாய்ப் பெருமானை

ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு தங்கள் தங்கள் மதத்தை யறிவித்தார்கள். "ரகுகுலதிலகமே! அனுகூலரென்றும், பிரதிகூலரென்றும், மத்திபஸ்தரென்றும் மூன்று விதமாயிருக்கிற சேதனர்களின் தன்மையும் தேவரீருக்கு நன்றாகத் தெரியும்; அஞ்ஞாதமான அம்சம் கொஞ்சமும் இல்லை. எனினும், "பத்துடை யடியவர்க்கெளியவன்" என்னும் தேவரீர் மஹாகுணத்தை லோகத்தாருக்கு அறிவிக்கைக்காக, எங்களை யாலோசனை கேட்பதாகத் தோன்றுகிறது. தேவரீர், சரணாகதரக்ஷணமே பரம பிரயோஜனமாக வெண்ணி, அது ஸபலமாம்படி ஸங்கல்பித்து, அதற்கு வந்த விரோதங்களைப்போக்கி, அந்த வியாபாரம் ஒருவராலுஞ் சலிப்பிக்க வொண்ணாதபடி செவ்வையாயாலோசித்துச் செய்து, முன்பு பண்ணின பிரதிஜ்ஞையை மறவாமல் அடியார்க்கு எளியராக விளங்குகின்றீர்; ஆகையால், காரியா காரிய நிரூபணத்தில் குசலபுத்தியுடையவர்களாய், நிச்சயித்தபடியே சொல்லவும் வல்லவர்களாயுள்ள அங்கதன் முதலியவர்கள் இந்தக் காரியத்தைத் தகுந்த காரணங்களைக்கொண்டு நிர்ணயித்துத் தனித்தனியே தங்கள் கருத்துக்களை விண்ணப்பஞ் செய்யக்கடவர்கள்; அது எங்களுக்கெல்லாங் கருத்தாகக்கடவது." என்றிவ்வாறு சொன்னவளவில் இளையராஜாவான அங்கதன், புத்திமானாகையால் எல்லாருக்கு முன்னே, விபீஷணனுடைய சோதனத்தையே பிரயோஜனமாகவுடைய வார்த்தையைச் சொல்லத் தொடங்கினான்:—"இவன், விரோதியான இராவணனிடத்திலிருந்து வந்தவனாகையால் எவ்விதத்திலுஞ் சங்கிக்கத் தக்கவனாகவே யிருக்கின்றான். விசாரியாமல் இவனை நம்பக்கூடாது; ஏனெனில், சர்வலோக பயங்கரனானவனென்று பிரசித்தமான பேரையுடையவனாய் வந்தான். துஷ்டபுத்தியுடையவர்கள், பரஹிம்ஸை

செய்வதினுலுண்டான தங்களபிப்ராயத்தை வெளியிடா மல் உள்ளே வைத்துக்கொண்டு காலத்தைக் கருதிக்கொண்டிருப்பார்கள். காலம் வாய்த்தபோது செவ்வையாய்த் துன்பத்தைச்செய்து தங்கள் நினைவை நிறைவேற்றிக்கொள்வார்கள். இவ்வித அனர்த்தம் ஆராயாமல் உடனே நம்பினவனுடைய பயனுகவிருக்கும். வந்தவன் நல்ல எண்ண முடையவனே கெட்ட எண்ண முடையவனே வென்பதைத் தெரிந்து பிற்பாடு காரியங்களில் இறங்கவேண்டும். அதாவது, நாம் செய்யுங் காரியங்களில் அனுகூலனுகில் நம்மோடு சேர்த்துக் கொள்ளவேண்டியது. கெடுதிசெய்வானுகில் விட்டுவிட வேண்டியதாம். இவ்விதம் தர்மசாஸ்திரத்தில் சொல்லப்படுகின்றது. இது தேவரீர் அறியாததோ? புரவலர் பெருமானே! எல்லாரிடத்திலுங் குண தோஷங்கள் இரண்டுங்கலந்தேயிருக்கும்; என்ருலும், எவன்பால் தோஷமதிகமாயிருக்கின்றதோ அவனுடைய அற்பமான குணம் பிரகாசியாதாகையால் அவனை யோஜியாமல் விட்டுவிடவேண்டும்; எவன்பால் குணமதிகமாயிருக்கின்றதோ அவனுடைய அற்பமான தோஷங்கள் காரியகரமாகாவாகையால் அவனைச் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.'' இவ்வாறு அங்கதப்பெருமான் சொன்னபிற்பாடு சரபன் இன்னது செய்யவேண்டுவதென்பதைத் தான் முன்னம் நிச்சயித்துக்கொண்டு பெருமானைப்பார்த்து "புருஷோத்தமனே! இவன் நடத்தை நமக்குத்தெரியாதாகையால் அதை யறிவதற்காக முந்துறச் சாரனை (சாரன்-ஒற்றன்) விடவேண்டும்; இவன் தாழ்மையைப்பாராமல் பிரவர்த்திக்கக் கூடாது; நாமனுப்பின சாரன் சத்துருவோடு கலந்திருந்து இங்கிதங்களாலும் வேறு சேஷ்டைகளாலும் இவனுடைய நடத்தையை யறிந்துவந்தால், பின்பு நாமாலோசித்து அனுகூலனுகில் இவ

ஜை நியாயமா யங்கீகரிப்பது யோக்கியம்." என்று சொன்னான்.

சரபன் சொன்னதும், நீதி சாஸ்திரத்தில் நிபுணனான ஜாம்பவா னென்பவன் சாஸ்திர வசியமான தன்புத்தியைக் கொண்டு செய்யவேண்டுமதை நிருணயித்து இரண்டுபக்ஷத்திறகும் பொதுவாய், "வந்த விபீஷணன் நமக்குக் காரிய சத்துருவும் வஞ்சகனுமான இராவணன் பக்கத்திலிருந்து வந்தான்; மேலும், இவன் சுத்தனானால் பிராட்டியைப்பிரிந்த ரிசியமுக கிரியிலே வரவேண்டும்; இவன் வரவேண்டுமிடமதுவே. அங்ஙனமின்றி இலங்கைக்குப் பிரத்தியாஸந்நமான கடற்கரையிலே வந்தான். பகலிலே வரலாயிருக்க அகாலமான இராத்திரியில் வந்ததும் சரியன்று; ஆகையால் தேசகாலங்கள் தப்பிவந்த இவன் விஷயத்தில் நன்றாயாலோசிக்கவேண்டும்." என்று தோஷவர்ஜிதமான குணமுள்ள வாக்கியங்களைச் சொன்னான்.

ஜாம்பவான் சொன்னபின்பு, நியாயம் இது, அநியாயம் இது என்று நிரூபிக்கையில் குசலனும் நிரூபித்தபடி விளங்க வுரைக்கவல்லவனுமான மயிந்தன் எழுந்திருந்து:- "நரபதி தலைவனே! இந்த விபீஷணனை நம்மோடு சேர்த்துக்கொண்டு நம்மைச் சந்தேகியாதபடி பொறுத்திருந்து, இனிமையான சொல்லாலே, நம் சத்துருவான இராவணன் நம்மைக் குறித்து என்ன சொல்லிக்கொண்டிருக்கின்றான் என்று கேட்கவேண்டும்; பின்பு, இவன் நல்லவனோ கெட்டவனோ வென்பதை யுள்ளபடி யறிந்து தேவரீர் திருவுள்ளத்தில் தோன்றுகிறபடி செய்யலாம்." என்று சொன்னான்.

இப்படி நால்வருஞ் சொன்ன பிற்பாடு இராஜகாரிய நிர்வாஹகரில் உத்க்ருஷ்டதமராயும், சாஸ்திரங்களிலும் ராஜகுலத்திலும் பரிசயம் பண்ணினவராகையால், லௌகிக

வைதிக காரியங்களிலுண்டான நைபுண்யத்தை யுடையவருமான திருவடி முன்பின் விரோதமில்லாமலும், காரிய ஸாதகமாயும், செவிக்கினிமையாயுமுள்ள வாக்கியங்களைச் சுருக்கமாகச் சொல்லத்தொடங்கி, "தேவரீர், காரியங்களைப் பரிசீலித்து நல்லன இவை தீயன இவை யென்று நிருணயிக்கையில் ப்ரசஸ்த புத்தியுடையவர்; நிஷ்கர்ஷித்த அர்த்தத்திற்கு இடையூறுகள் நேரிடினும், அவற்றைப் போக்கி நிறைவேற்றும்படியான வல்லமையுடையவர்; செய்தவற்றையெல்லார் நெஞ்சிலும் படும்படி யுரைக்கவல்லவர்; இத்தகைய தேவரீருடைய நினைவை மாற்றுவதற்கு வக்தாவான ப்ருஹஸ்பதியும் சக்தனல்லன்." என்று ஸ்ரீராமனைக்குறித்துச் சொல்லிப் பின்பு ஸுக்கிரீவனைப் பார்த்து, "மகாராஜனே! நான் என் வாத ஸாமர்த்திய பிரகாசனார்த்தமாக ஒருவரை ஜயிக்கவேண்டுமென்றாவது, நம் முன்னே சிலர் வார்த்தை சொல்லுகையாவதென்? என்கிற அஸூயையினாலாவது, நான் பெரியனென்ற வபிமானத்தாலாவது, ஒரு பிரயோஜனத்தைக் கணிசித்துப் பக்ஷபாதத்தினாலாவது சொல்லப்போகிறேனில்லை. பெருமாளுடைய குணங்களைப்பார்த்து முன் சொன்ன பக்ஷங்களிலுள்ள குணதோஷங்களை யுள்ளபடி சொல்லுகிறேன். என்று சொல்லி மீட்டும் பெருமாளை நோக்கி, 'விபீஷணனிடத்தில் குணாகுணங்களைப் பார்த்துப் பின்பு சேர்த்துக் கொள்ளுகையாவது விட்டு விடுகையாவது செய்யலாம்' என்று சொன்ன அங்கதப்பெருமானது பக்ஷத்தில் எனக்குத் தோஷந்தோற்றுகிறது. குணாகுணங்களைப் பரீக்ஷை பண்ணுதலென்பது ஒருபோதும் முடியாத காரியம். ஏனென்றால், இவனால் பிரயோஜனமுண்டென்றறியாமல் ஒரு காரியத்தில் நியோகித்தால் காரியத்திற்கு அனர்த்தமாமென்று தோற்றாநின்றது; பிரயோஜனமுண்டென்றறி

ந்தாலல்லது எவவொண்ணாது, ஏவினாலல்லது பிரயோஜனமறியவொண்ணாது. ஆகையால் பரீக்ஷை செய்யக்கடவதன்று. 'சாரனைவிட்டு இவன் நன்மை தீமைகளையறிந்து பின்பு யுக்தமானபடி செய்யலாம்,' என்று சரபன் சொன்னதும் சரியன்று. ஏனெனின், இவன் எதிரே நிற்கையால் சாரன் போய்ச் செய்யவேண்டும் வியாபாரம் ஒன்றுமில்லை. 'இந்த விபீஷணன் வரவேண்டுமிடம் தவிர்ந்து இலங்கைக்குச் சமீபத்தில் நாமிருக்க இப்போது வந்தவனாகையால் நம்பிக்கைக்கு யோக்கியனல்லன்' என்று சொன்ன ஜாம்பவ மகாராஜா மதத்திலும் எனக்கு ஒருவிஷயம் சொல்லவேண்டுமென்று விருப்பமிருக்கின்றது. தெரிந்தவரையிற் சொல்லுகிறேன்; கேட்டருளவேண்டும். நீசனான இராவணனிடத்தில் தௌராத்மயத்தையும் உத்தம தார்மிகரான தேவரீரிடத்தில் துஷ்ட நிக்ரஹ விக்கிரமத்தையும் நன்றாகத் தெரிந்த இந்த விபீஷணனுக்கு இத்தேசத்தில் இக்காலத்தில் வருகையே யுக்தம். 'தன்னபிப்பிராயத்தை மறைத்துச் சத்துருவின் அபிப்பிராயத்தை யறியவல்ல புருஷர்களால் இவனபிப்பிராயத்தை யறியவேண்டும்,' என்ற மதத்திலும் எனக்குச் சொல்லவேண்டிய ஒரு அபாதிதமான யுக்தியுண்டு. தன்னைச்சுவீகரிப்பதற்கு முன்னாகவே இராவணனைப்பற்றிய வசனத்தை வினவினால், இது சுவீகாரத்திற்குப்பின்பு காரிய விசார சமயத்திலே கேட்கத்தருவது, என்று அறியவல்ல புத்தியோகத்தையுடையவன், இவர்கள் சரணம்புக்க நம் பக்கலிலே சத்துருபுத்தி பண்ணினர்களென்று சீக்கிரத்திலேயே சந்தேஹிப்பன். அவன் அப்படி ஸந்தேகித்தால் இருகையுமுடவன் தலையிலே கங்கை குதித்தாற்போல், அநாயாஸமாய் வந்த மித்திரனை யிழக்கும்படி வரும். மேலும் வந்தவன் தன் காரியத்தில் நிபுணனானால் தன்னினைவை வெளியிடா

தபடி நாம் கேட்டதற்கு உத்தரம் சொல்லுவன். ஆகை யால், சீக்கிரத்தில் அவன் அபிப்பிராயத்தை யறிய முடி யாது. இந்த விபீஷணன் வார்த்தை சொல்லும்போதெ ல்லாம் துஷ்ட சேஷ்டைகள் கொஞ்சமும் தெரியவில்லை. வழியடியுண்டவன் தாய் முகத்தில் விழித்தாற்போல இவ னுடைய முகமும் பிரஸந்நமாகவே குளிர்ந்து தோன்றுகி ன்றது. மனத்தில் கௌடில்யமிருந்தால் அது முகத்திற் றோற்றுமலிராது. ஆகையால் இவனிடத்திலெனக்கு ஒரு சம்சயமுங்கிடையாது. இவன் துஷ்டனுகில், இவனுக்குப் பிரதிகூலத்தைப்பண்ண யத்தனித்த நம் சேனையில் பிரதி கூல புத்தியில்லாமலும் பயமில்லாமலும் வரமாட்டான். சொல்லும்போது தழதழத்தல்லது சொல்லான். இவனிட த்திலிக்குணங்களில்லாமையால் இவனைச் சந்தேகிக்க வே ண்டுவதில்லை. ஒருவனுக்குக் கெடுதி நினைவிருந்தால், அது அவன் சரீரத்தில் காணும் விகாரத்தால் தெரி யும். அந்த விகாரம் இவன் மறைக்க யத்தனித்தா லும் மறைபடாமல் உள்ளிருக்கு மபிப்பிராயத்தை வெளிப்படுத்திவிடும். காரிய விமரிசையுள்ளவன், தேச காலங்களுக்குசிதமாகக் காரியத்தை யனுஷ்டித்து அதன் பலத்தை படைவன்; காரிய விமர்சிகளில் தலைவரான தேவரீர் அதையுபேக்ஷிக்கலாமோ? கரதூஷண திரிசிராக்கள் முதலான பதினாலாயிரம் ராக்ஷஸரையும் மூன்றேமுக்கால் நாழிகையிலே தனியே அழியச்செய்த தேவரீர் வெளி நிலமான கடற்கரையிலே ஸபரிகரமாக இட்டுக்கொண்டிருக்கிற உத்தியோகத்தையும், இராவண னுடைய மாயா வியாபாரத்தையும் பார்த்து, இராவணனி லும் அதிக பிரபலனான வாலியை ஓரம்பாலே யழியச்செ ய்து அவன் இராஜ்யத்தை அடைக்கலம் புகுந்த தம்பிக் குக் கொடுத்தீரென்று கேட்டு, அப்படியே, தன் தமயனை

க் கொன்று தனக்கு, ராஜ்யத்தைக் கொடுப்பீரென்றெண்ணி இங்கே வந்தான். இவ்வளவை முன்னிட்டாவது இவனை யங்கீகரிக்கவேண்டும்; முதலிகள் இவன் ஜாதி மாத்திரத்தைப்பார்த்து இவனைத் துஷ்டனென்கிறார்கள். நான், ஸ்வபாவத்தினால் இவன் துஷ்டனல்லன் அநுகூலனென்று என் புத்தியுள்ளவரையில் யோஜித்துச் சொன்னேன். இவனுடைய குணாதிக்யமென்ன, ஸ்வரூபமென்ன, சுவீகாரமென்ன, இவற்றை நான் விண்ணப்பஞ்செய்யக் கேட்டாலும் அவை யெல்லாவற்றிற்கும் நிர்ணயகர் தேவரீர் தாம்; ஆகையால் இவையெல்லாவற்றையும் தேவரீரே நிச்சயிக்கவேண்டும்.'' என்று விண்ணப்பஞ்செய்தார்.

அங்கதன் முதலானோர், தன்னபிப்பிராயத்துக்கு விரோதமாய் உபந்யஸித்த யுக்திகளுக்குக் கலங்காமல் உறுதியைக் கொண்டிருந்தவனும், வசிஷ்டாதி பெரியோர்களிடத்தில் சரணாகத ஸம்ரக்ஷணமே பரமதர்மமென்று உபாக்கியான முகங்களால் கேட்டறிந்தவனுமான ஸ்ரீராமன், வாயுஸூதனான அநுமான் சொன்ன வார்த்தையைக் கேட்டுப் பின்பு, நிர்மலமான மனத்தையுடையவனாய்த் தன் திருவுள்ளத்திருந்த வார்த்தையைத் தன் முதலிகளுக்கு உத்தரமாகச்சொல்லியருளினான்:-"விபீஷணன் விஷயமாக எனக்கும் ஒன்று சொல்லவேண்டுமென்று தோற்றுகிறது. நீங்கள் என் அபிவிருத்தியைக் கோருகின்றவர்களாகையால், உங்களுடன் யோஜித்துச் செய்யவேண்டுமென்று இச்சிக்கின்றேன். இதை நீங்கள் கேட்கவேண்டும். இந்த விபீஷணன் கபட சரணாகதி பண்ணினாலும், சரணாகதன் சொல்லவேண்டிய சரணமென்னு முக்தியைச்சொல்லி நாமிருந்த விடந்தேடி வந்தவனாகையால், இவனிடத்தில் தோஷமிருந்தாலும், இவன் சுவீகாரத்தால் முன்புள்ள பந்துமித்திராதிகளை யிழக்க வருமானாலும், நான் இவனை

விட்டுவிட மனத்தாலுஞ் சிந்திக்கவில்லை. நீங்களிவனைத் துஷ்டனென்றெண்ணினாலும், வாஸ்தவத்தில் தோஷமிருந்தாலும், ஸத்புருஷர்களுக்கு இது நிந்திக்கும்படியாயிராது. சரணாகதனிடத்தில் தோஷம், சரணாகதரக்ஷணத்தில் தீக்ஷையுடையவர்களுக்கு அதிசயத்தை விளைவிப்பதாகையால் பிரார்த்திக்கவேண்டியே யிருக்கும். இவனால் பிரயோஜனமொன்று மில்லாவிடினும், இவனைக் கைவிடுவது ஸத்கோஷ்டியில் நிந்தியமாகையால் அங்கீகரிப்பதே யுக்தம்.

(இன்னும் வரும்.)

பி. ஆர். கிருஷ்ணமாசாரியார்.

மல்லிகாமாருதம்.

கேளாய் குழந்தாய் மாருதனே, தென்திசையில் சந்தனமரங்களடர்ந்து மந்தமாருதம் வீசப்பெற்ற மலயமெனும் ஓர் மால் வரை யுண்டு. அம்மலைமீது வஸந்தகாலத்திலோர் நாள் அநங்கதேவனது அன்பனாகிய அநிலபகவானானவர் மரகதத்தைப் பழிக்கும் மூர்த்தியுடன் வேடிக்கையா யுலாவிக்கொண்டிருந்தனர். அவ்வேளை மணிதான் எனும் பெயரிய நாகராஜன் மந்திரியினது ஏககுமாரியும் மதனனது ஜயக்கொடியென்றுரைக்கத்தக்க வனப்பு வாய்ந்தவளுமான மஞ்சுளை யென்னும் மாதசிரோமணி யங்குத் தன் பாங்கிமாருடன் பந்தடித்து விளையாடிக்கொண்டிருந்தனள். மயிற்றோகைபோல் துலங்கும் மேனியையுடைய மாருததேவனைக் கண்ணுற்ற வம்மடமங்கையும் அவர்மாட்டு மையல்கொண்டு மனத்தினில் அவருடன் மருவிக்கலந்ததாக வெண்ணின மாத்திரத்தில் கர்ப்பந்தரித்து அக்கணமே அங்ஙனே அதிக ஸௌந்தரியமுள்ள வோராண்குழந்தையை யீன்றனள். தேவர்களுக்குள் இங்ஙனம் மானஸிக ஸங்கத்தினால் கர்ப்பந்தரிப்பதும் உடனே பிரஸவிப்பதும் ஸஹஜமன்றோ? கன்னிப்பருவத்திலேயே கற்பழிந்து கர்ப்பந்தரித்துக் கான்முளையை யீன்றதனால் அச்சமு மவமானமுமுற்று மனந்தளரும் அம்மடமயிலைக் கண்ட ஸமீரனும் அவள் கற்புநிலை குலை

யாது கன்னிகைப்பருவம் சிதையாதிருக்குமாறு அநுக்கிரஹித்து உடனே அந்தர்த்தானமாயினன். மஞ்சுளமேனி வாய்ந்த மஞ்சுளேயும் கொஞ்சும் செஞ்சொற்களையுடைய மைந்தனை விட்டுப்பிரிய மனமிலளேனும் தன் தந்தை தாயர்களுக்கஞ்சி அக்குழவியை அங்கனே இளந்தளிர்ப்படுக்கையில் இட்டு அதனைப் பாதுகாக்குமாறு அங்குள்ள வநதேவதைகளைப் பிரார்த்தித்துக்கொண்டு காலந்தாழ்க்காது தன்னில்லம் சேர்ந்தனள்.

பின்னர் அணித்தாகவிருக்கும் அகத்தியமுனி யாசிரமத்தினின்று ஓமவிறகுகளை யோர்ந்து சென்ற முனி குமாரர்கள் அண்டையில் யாருமிலாது அழுதுகொண்டிருந்த அச்சிசுவை யெடுத்துக்கொண்டுபோய் அக்குறுமுனி கரத்திலீந்தனர். அக்கும்பஸம்பவரும் அக்குழந்தையை அதிக வன்புடனேற்றுக்கொண்டு தனது பத்னிதியாகிய லோபாமுத்திரை யிடமீந்து தம் தநயனைப்போல் தக்கவுபசாரத்துடன் போஷித்து வரச்செய்து அவ்வவ்காலங்களில் அவனுக்குப் புரியவேண்டிய சடங்குகளனைத்தையும் செவ்வனே செய்வித்தனர். அவனது தந்தையாகிய வாயுபகவானும் ரூபம், குணம், சீலம், வயது, வித்தை, பலம் தைரியம் ஆகிய இவையெல்லாவற்றிலும் அவனுக்குச் சமானமான இரண்டு பிரிய நண்பர்களை யெப்பொழுதும் அவனைவிட்டுப் பிரியாது அவனுடன் விளையாடிக்கொண்டிருக்கும்படி யளித்தனன். அவர்களோடும் ஏனைய முனிகுமாரர்களோடும் அவன் விளையாடிக்கொண்டிருக்கையில் சிறுகுழந்தைகட்கு இயல்பாயுண்டாகும் அச்சம் பயம் என்பது அணுவேனுமில்லாமல் அவன் மிக்க மனோதைரியத்துடன் அக்கானனத்திலுள்ள களிறு புலி சிங்கக்குட்டிகளின் காதுகளையும் பிடரிமயிர்களையும் பிடித்திழுத்துப் பீடித்து வந்தனன். பின்னர் அவன் யௌவனப்பருவமடைந்து தன்னிரு நண்பர்களுடன் இனிது விளையாடி வருகையில் வேனிற்காலத்திலோர் நாள் தனது நண்பர்களால் பரப்பப்பட்ட தளிர்ப்படுக்கையில் தனது தேகதாபம் தணியுமாறு சயனித்துறங்கினன். அக்காலை அதிரூபலாவண்யவதியான வோரணங்காசு அவன் கனவிலெய்தி அவன்மாட்டு மிக்க பனவேட்கையுடன் அவனைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருக்கவே அவனும் அத்தையல்பால் அதிக மையல்கொண்டு தனது காத்தால் அவளது மேலாடையின் முன்றானையைப் பற்றியீர்க்க அதற்குள்

அவன் நித்திரை தெளிந்தெழுந்து தன்னருகில் அந்நங்கைமணியை க்காணுது வெருந்துயருற்று, "ஆ! எனது ஆருயிர்க்காதலி, நீ இப் பொழுது என் கண்முன் தோன்றி கணப்பொழுதில் எங்கு மறைந் தனை?" என்று பலவாறு பிதற்றவே அவனது உயிர் நண்பர் இரு வரும் அவனை நோக்கி, "நண்பனே, கனவினில் தோன்றின காரி கையின் பிரிவைப்பற்றிக் கலங்குதல் நினக்கழகோ?" என அவனும் "நண்பர்காள், கனவில் காணப்பட்டவளாயிருப்பினும் என் காதலி ஸத்தியமான ரூபமுடையவளாகவே யிருக்கிறுளென்று நம்புகின் றேன். வேண்டுமானுல் அவளது வடிவின் இலக்ஷணங்களை விளம்பு கிறேன்; கேளுங்கள். அவள் குங்குமக்குழம்பை ப்பழிக்கும் மேனி யும் குவலய தளத்தைக் குறைகூறவல்ல நயனங்களும் இந்துவை யிக ழும் வதனமும் வாய்ந்தவள். மேகத்திரள்போன்ற அவளது கேசத் தில் மின்னலைப்பழிக்கும் ஓர் சூடாமணி துலங்குகின்றது. மத வேழத்தின் மத்தகமென விலங்கும் அவளது மார்பினில் இலாவ ண்ய சமுத்திரத்தின் நுரைத்திரளென வையுறத்தக்க வோர் முத்து மாலை துலங்குகின்றது. இத்தகைய வடிவழகு வாய்ந்த வெனது காதலியை மீண்டுங்காணுது நான் உயிர்தரித்திருப்பது எங்ஙனம்?", என்று பலவாறு புலம்பி அக்கன்னிகையின் விரகதாபத்தினுல் நாளுக்குநாள் தேய்பிறைபோல் தேகத்தில் மெலிவுற்றிருந்தனன். இங்ஙனம் விரகநோயால் மிகவும் வருந்தின அவன் ஓர்நாள் பிற் பகலில் மலைவீழருவியின் ஓரத்திலிருக்கும் ஓர் சந்தனமரத்தின் நிழ லில் இளந்தளிர்ப்படுக்கையில் உட்கார்ந்து நேசர்களிருவராலும் இளவாழையிலை விசிறிகொண்டு வீசப்பட்டுக்கொண்டிருக்குந் தருணத்தில் தாமரைத்தண்டைத் தம் சஞ்சுவில் செளவி வான த்தில் செல்லும் சில வன்னங்களைக் கண்ணுற்றனன். அவ்வன் னப் பறவைகளில் ஒன்று தாமரைத்தண்டென்று மதித்துத் தானெடுத்துவந்த நித்திலமாலையொன்றை நிலத்தில் அவனது தளிர்ப்படுக்கைமீது நழுவவிட்டுச் சென்றது. அவனுமுடனே அம் முத்துவடத்தையெடுத்து உய்த்து நோக்கி, அது தான் கனவில் கண்ட காதலியின் கண்டத்தில் தரித்திருந்த ஹாரமெனத் தேறி ஆநந்தம் மீறி அதனைத் தனது அன்பர்களுக்குக் காண்பித்து, "நீல மணியால் புனைந்த நடுநாயகத்தோடு கூடிய இந்நித்திலவடந் தான் எனது காதலி தரித்திருந்தது." எனக் கூறி அதனைத் தனது

கழுத்திலணிந்துகொண்டு அக்காதலியையே யணைவதாலுண்டான வானந்தத்தை யடைந்து அக்கணமே அவளைத் தேடிப்பார்க்கக் கருதி வெட்கத்தினால் அகஸ்தியமுனியிடத்திலும் விடைகேட்டுக் கொள்ளாமலே அவ்விரு நண்பர்களுடன் அவணவிட்டு ஆகாயமார்க்கமாய்ப் புறப்பட்டு நிதிக்கிழவனுறையுந் திசையை நோக்கிச் சென்றனன். அவனிங்ஙனம் ஆகாசமார்க்கமாய்ப் புறப்பட்டு, இருகரைகளிலும் தேவரிஷிகளால் வதியப்பெற்ற வமரநதியாகிய ஆகாசகங்கையைத் தரிசித்துச் செல்லுகையில் அங்கு நந்தனதேவதை யகிலபகவானது அரிய புதல்வனாகிய அன்னோன் கழுத்தில் என்றும் வாடாத மல்லிகைமாலையொன்றை யுவந்து தரிப்பித்தனள். அவனும் அம்மாலையை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு வான்தோய் சிகரத்தையுடைய இமயமலைச்சாரலை யணுகினான். அங்கு அம்மலையினின்று பெருகும் பெரும்புனலாகிய மந்தாகினியினது கரையில் கந்தர்வகின்னரவித்யாதரர்களால் விரும்பியுறையப்பெற்றதும் பற்பல பலவிருக்ஷங்களாலும் புஷ்பலதைகளாலும் அலங்கரிக்கப்பட்டுமிருக்கிற அரை யோஜனை விஸ்தீர்ணமுள்ள வாராமத்தினிடையில் பொற்கதளித் திரள்களால் சூழப்பட்டுக் கைலாஸ சிகரமெனக் கண்டோர் வியக்கத்தக்க காத்தியாயினி யாலயமொன்றைக் கண்ணுற்றனன். உடனே அவன் அவ்வம்பிகாலயத்தினுட்சென்று அம்மையின் ஸந்நிதிக்கெதிரில் ஓர் மண்டபத்தில் சாந்தமும் கம்பீரமுமான வடிவத்துடன் யோக நிஷ்டை புரிந்துகொண்டிருக்கின்றவோர் யோகீச்வரியைக் கண்ணுற்று மிக்க வியப்புடனும் விநயத்துடனும் அவளை நமஸ்கரித்தனன். அத்தவசித்தலைவியும் அகமகிழ்ச்சியுடன் ஏற்கெனவே அவனுடன் பழகினவள்போல் அவனை நல்வரவு விசாரித்து அவனுக்கு அதிதிஸத்காரம் புரிந்து அருகில் உட்காரச்செய்தனள். அவன் உட்கார்ந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் அவர்களிருக்குமிடத்திற்குச் சமீபத்திலிருக்குமோர் இலதா மண்டபத்திற்குள்ளிருந்து த்ருதம், மத்யம், விலம்பிதம் எனும் லயத்துடன் கரதாளம் போடுவதாலுண்டாகும் கங்கணத்தொனி யவன் காதில் பட்டது. அக்காலை அவ்யோகீச்வரி அவனை நோக்கி, "மகாபாக, நல்லவேளையாய் நீ இப்பொழுது இங்குற்றனை. மலயகிரிச்சாரலினின்று வரும் கந்தர்வ கன்னிகைகளிடமிருந்து ஏற்கெனவே யுன்னைப்பற்றிக் கேட்டிருக்கின்றேன். இப்பொழுது நீ செவிசாய்

த்த சத்தத்தின் காரணத்தை யியம்புகின்றேன் கேள். இப்புவன மனைத்திலும் புகழ்பெற்ற விச்வாவஸுவெனும் பெயரிய வித்யாதர முக்கியமந்திரி யொருவருளர். அவருக்கு அதிரூபலாவண்யவதி யான வோர் புதல்வி யிருக்கின்றாள். அன்னப்பறவையினலபஹரிக் கப்பட்டு இப்பொழுது நினது மார்பினில் துலங்கும் நித்திலவடம் அப்பெண்மணியினதே தான். இன்று கிருத்திகையாதலின் அவ ளிப்பொழுது இவ்வம்பிகாலயமுற்று அருகிலிருக்கும் இலதாமண்ட பத்தினிடையிருந்து கந்துகலீலையால் காளிகாதேவியை யாராதிக் கின்றனள். அவள் பந்தடிக்குங் காலையில் அவளது கரத்தினில் குலுங்கும் கங்கணங்களின் ஒலிதான் இது. ஆகலின் யாமும் அங்குச்சென்று அவளது அழகிய கந்துகலீலையை கண்ணுறுவோம்; வா. எனவே அச்சிறுவனும் கும்பிடப்போன தைவம் குறுக்கே வந்ததென மிதமற்ற மனக்களிப்புடன் தன்னிரு நண்பருடனும் அவ்யோகீச்வரி வழிகாட்ட அவ்வணங்கரசு இனிது பந்து விளை யாடும் கொடிவீட்டை யணுகினன். அக்காலை கரங்களில் சாமரம், வெண்பட்டு, வெற்றிலைச்சுருள், இரத்தினக்கண்ணாடி, விசிறி முத லியன வைத்துக்கொண்டு அக்கட்டழகி தமக்குக் கட்டளையிடும் பணிகளைப் புரியுமாறு அவள் பக்கத்தில் காத்துக்கொண்டிருக்கும் பல சேடிமார் அவனைக் கண்ணுற்றவுடன் அநங்கனே அவ்வுருவெ டுத்து வந்ததாக வையுற்று அவனை அதிசயத்துடன் பார்த்துக்கொ ண்டிருந்தார்கள். பின்னர் அவ்வாலிபனும் அக்கொடிப்பந்தலில் கண்டோர் கண்கள் களிக்கும்படி கந்துகலீலை புரிந்துகொண்டிரு க்கும் அக்கமலக் கண்ணியைக் கண்ணுற்றனன். மயிற்றோகைபோ ன்ற கூந்தலவிழ்ந்தாட, அதில் தரித்த மல்லிகைமலர்கள் சிதற, மானேய் கண்கள் சுழல, அவளது நுண்மருங்குல் ஸ்தனபாரந்தாங் கச் சக்தியற்று எங்கு ஒருகால் ஒடிந்துவிடுமோவென்ற வச்சத் தைப் பயக்க, நெற்றி முதலிய விடங்களில் நித்திலத்திரள்போன்ற வியர்வைத்துளிகள் நிறைந்திருக்க, இடையிலணிந்த விரத்தினமே கலையினது கிங்கிணிகள் இனிதொலிக்க, பாதங்களில்படிந்த செம் பஞ்சுக்குழம்பின் துளிகள் அவளிருக்கும் மணிமேடையெங்கும் பரவ, இங்ஙனம் வெகுவிசித்திரமாய்ப் பந்தடித்து விளையாடும் அப் பாவையைக் கண்ணுற்றவுடன் அவ்விளைஞனும் தன்னுள் அடக்க

முடியாத வாநந்தத்துடன் அருகிலிருக்கும் அன்பரிருவரையும் நோக்கித் தனிமையில், "அன்பர்காள், யான் கனவினில் கண்ட காமினி யிவளே யல்லது வேறில்லை." என்று கூறி யவள்மாட்டு வைத்த கண்ணாகவே யிருந்தனன். யோகீச்வரி தன் பக்கல் வரக்கண்ட அத்தருணிமணியும் தன்கையிலேந்திய பந்துடன் அவட்கு அஞ்சலி புரிந்து அங்கமெடுத்துவந்த வநங்கன்போலவள் பக்கல் நின்றுகொண்டிருந்த வாலிபனைக்கண்ணுற்று விருப்பமுடன் நோக்கிக்கொண்டிருக்கவே அத்தவசித்தலைவியும் அவளை நோக்கி, "வத்ஸே, குறுமுனியால் குறையொன்றுமில்லாது போஷிக்கப்பட்ட குணநிதியாகிய விவர் சமீரபகவானது செல்வப்புதல்வர். இவர் இப்பொழுது நின்னைப்பார்க்குமாறு இங்குற்றிருக்கின்றனர். கின்னரர்கள் பன்முறை இவர் குணத்தைப்பற்றிக் கீதம் பாடக்கேட்ட நீ யேற்கெனவே இவர்மாட்டு அன்புற்றிருக்கின்றாயாதலின் இவர்க்கு நீ புரியவேண்டிய வதிதிபூஜையைப் புரிவாயாக." எனக்கேட்ட அப்பெண்மணியும் தான் கருதியிருந்த காதலனைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தமடைந்து ஏதும் புரியத்தோன்றாமல் அவன்பேரில் வைத்த நோக்காகவே யிருக்கவே அவ்வாலிபனது நேசரில் ஒருவன் அவளை நோக்கி, "பெருமாட்டி, அன்னத்தினது மூக்கினின்று மவனியில் விழுந்து எடுக்கப்பட்டதும் எம்மன்பன் இப்பொழுது தன் கண்டத்தில் தரித்திருக்கின்றதுமான தமது இம்முத்துமாலை தயவுடனேற்றுக்கொள்ளப்படட்டும்." என்று அம்மாலையைக் கழற்றப் புகுகையில் அவளது உயிர்த்தோழிகளிலொருத்தி யவனை நோக்கி, "ஐயனே, அம்பரத்தின்மீசை இலங்கும் தாராவளிபோல் இவ்ஹாராவளியானது இம்மகாநுபாவரது மார்பையே யலங்கரிக்கட்டும். அதற்குப்பதிலாக அவர் தோளில் பூண்டிருக்கும் திவ்யபரிமளம் வாய்ந்த என்றும் வாடாத இம்மல்லிகை மாலையை எம் தோழிக்கு அளிமின்." என்று குறுநகையுடன் கூறவே அவ்வாயுமைந்தனும் அம்மாலையை அன்புடன் அத்தோழி கரத்தினிலீய் அன்னவளும் அதனை யேற்றுக்கொண்டு தனது சீமாட்டியினது கண்டத்தில் புனைந்தனள். இதற்குள் வித்தியாதரவரசனது முக்கிய மந்திரியின் அந்தப்புரக்காவலன் அவ்விணங்கரசுபாலுற்று, "அம்மா, தமது தந்தை தம்மை யுடனே யில்லத்திற்கு இட்டுக்கொண்டு வருமாறு

கட்டளையிட்டிருப்பதால் அங்ஙனம் புரியத் தயை செய்யவேண்டும்" என்று பணிவாக மொழிந்தழைக்கவே அம்மாதரசும் தனது காதலனைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டிருக்கும் பாக்கியம் தனக்குக் கிட்டவில்லையே யென்று மிக்க மனத்தளர்ச்சியுடன் அவனைப் பலமுறை கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே தனது அந்தப்புரமுற்று அவ்வாலிபனது விரகதாபத்தால் மிக்க வேதனையுற்றிருந்தனள். சிறிது நேரம் தாமதித்து வந்த அவளது தாம்பூல வாகினியும் அவள் காதலன் அவளைப்பற்றிக் கனவில்கண்ட விருத்தாந்தமனைத்தையும் அவனது தோழர்களிடமிருந்து அறிந்துவந்துரைத்தனள். அதனைச் செவியுற்ற வச்சேயிழையும் அவன்பொருட்டு முன்னிலும் மும்மடங்கு அதிகமான மதனாவஸ்தையை யடைந்து அவ்விரகவிடா யொருவாறு தணியுமாறு தற்காலத்தில் தான் கண்டபடி அவனது அகன்ற மார்பினில் அணிந்திருக்கும் அழகிய தனது முத்துமாலையுடன் அக்காதலனது ரூபத்தை வரைந்து அதனையே இமைகொட்டாது உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனள்.

இது நிற்க. திடீரென்று தன்னைவிட்டுப் பிரிந்து தளர்ச்சியுடனில்லத்திற்கேகின இதமுடைய வின்சொலாளை யிதயத்தில் நினைந்து நைந்த வவ்விளைஞனும் அவளது வியோகத்தைச் சற்றேனும் சகிக்கப் பொறாது ஓர் சித்திரப்பலகையில் அவ்விமய மலையையும், அம்மலையின் சாரலினின்று பெருகும் பேரருவியையும், அக்கொடி வீட்டையும் வரைந்து அதனுள் கந்தகலீலை புரிந்து களைத்திருந்த காதலியையும் அவள் கண்டத்தில் தரித்திருந்த தனது மல்லிகை மலர் மாலையுடன் தீட்டி யதனைக் கையில் வைத்துக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டே அவ்வுத்தியான வனத்தில் சஞ்சரித்து அன்றைப்பகலை யதிக கஷ்டத்துடன் போக்கினான். பின்னர் இராக்காலம் நெருங்கி விரகிஜனங்களை வதைக்கும் விது விரிசுடர்க்கதிர் பரப்பி விண்மீதுலாவவே யக்கட்டழகன் காமக்கனலால் கதவிய காத்திரத்தை யுடையவனாய்த் தன்னிரு நேசர்களால் தயவுடன் விரிக்கப்பட்ட தாமரைத்தண்டுப் படுக்கையில் சயனித்து உறக்கமின்றியுணங்கிக் கொண்டிருப்புழி அர்த்தராத்திரி வேளையில் அணித்தாகவிருக்கும் சந்திரகாந்த மணிகளால் சமைக்கப்பட்ட செய்குன்றின் சிகரத்திலிருந்து திடீரென்று புறப்பட்ட வோரழுகைக்குரலவன் செவிப்பட்டது. அஃது எங்ஙனமெனின், "ஆ! எனது

பரிவு மிகுந்த பாங்கிமார்களே, உங்களுயிர்த் தோழியாகிய யானி
தோ வென்னின்னுயிர் துறக்கின்றேன். ஓ! புவனமனைத்தையும்
படைத்துக் காக்கும் பவானி, யான் மறுஜன்மத்திலேனும் அம்மா
ருதகுமாரனையே மணாளனாகப் பெறும்படி பேரளி புரிவாயாக?"
என்பதே. இச்சத்தத்தைச் செவியுற்றவுடனே அவ்வநிலநந்தன
னும் அதிக பரபரப்புடன் தன்னிரு நண்பர்கள் தன்னைப் பின்தொ
டர்ந்து செல்ல வப்பளிங்குச்செய்குன்றின்மீதேறிப் பார்ப்புழி
தான் காதலித்து கருத்தழியும் அக்காரிகையே அக்காரிருளில் அங்
குற்றுக் கொடியால் கழுத்தில் சுருக்கிட்டு நாணிக்கொண்டுயிர் துற
க்க முயலுவதைக் கண்ணுற்றனன். உடனே அவளருகில் விரை
ந்துசென்று, "ஸுந்தரி, மறுஜன்மத்திலேனும் மணாளனாகவேண்டு
மென்று நீ கருதும் மகாபாக்கியம்பெற்ற நினது ஏவலாளனாகிய
யான் நின் முன் நிற்கையில் நீயேனிச் சாகசத்தொழிலைப் புரிய
புகுகின்றனை?" என்று புகன்று அவளது கம்புபோன்ற கண்டத்
தில் கட்டியிருந்த கொடியை யெடுத்தெறிந்தனன். தன் தந்தை
தாயர்களநுமதியன்றிக் குலமகள் கொள்கைக்கு முற்றும் விரோத
மாய்த் தான் கருதிய காதலனைக் கூடிச்சேர மனங்கூசி காத்தியா
யனிதேவிக்கெதிரில் சொடியால் நாணிக்கொண்டு தன்னல்லுயிரை
மாய்க்க முயன்ற வம்மாதரசும் தன்னருகுற்ற காதலனைக் கண்டு
மனம் வெட்கி மௌனத்துடன் மேதினியை நோக்கிக்கொண்டு
நின்றனள். அந்தோ! இனிமேல் நடந்த சங்கதியைச் செப்ப வென்
மனம் கூசுகின்றதே! ஆகிலும் வலியவிதியின் ஆணைக்கு விலக்கா
னவர் இப்புவியில் எவருமிலர். இங்ஙனம் பரஸ்பரம் பிரேமை மிகு
ந்திருக்கும் காதலன் காதலி யிவ்விருவரையு மொன்றுகூட்டிய
தைவத்திற்கு அவ்விருவரும் அங்ஙனம் இனிது சேர்ந்து வாழ
மனம் பொறுக்கவில்லை. ஏனெனில் அச்சிறுவன் தனது காதலி
யின் கழுத்திலிட்ட கொடித்தளையைத் தறித்துவிடப்போன அவஸ
ரத்தில் தன் கக்கத்தில் வைத்திருந்த காதலியின் சித்திரப்பலகை
யானது தவறிக் கீழே விழுகையில் அம்மலைச்சாரலின் கீழே தற்
செயலாய் சென்றுகொண்டிருந்த ஸுலப்மன்யு வெனும் மகாரிஷி
யின் சென்னியில் தாக்கியது. உடனே அத்தவசியும் அதிக சினங்
கொண்டு, "அடா! துராத்மாவே, கன்னிகையைக் காமுற்றுக் கரு
த்தழிந்திருக்கும் நீ குற்றமேது மில்லாத வென்சென்னி சிதைவுறும்

படி இச்சித்திரப்பலகையை வீழ்த்தினமையால் இக்கணமே மரித்து மனிதயோனியில் பிறக்கக் கடவாய். நின்னைக் காமுற்ற விக்கன்னிகையும் மானிடச்சன்மமுற்று உன்னையே மணந்து இருவரும் முத்ன் முதல் இனிதுமருவிக் கூடுங்காலத்தில் மூர்ச்சித்து விழக் கடவள்.'' என்றிங்ஙனம் அம்முனி கொடிய சாபத்தைக் கொடுக்கவே அவ்விரு காதலரும் அச்சாபாக்கினியாலெரிக்கப்பட்ட சரீரத்தையுடையவர்களாக அந்நொடியிலேயே இருந்தவிடம் தெரியாமல் மாண்டார்கள். இருடிசாபமாகிற இடியைக் கேட்டு அச்சத்தினால் அக்கியை மூடிக்கொண்டிருந்த அன்பர்கள் இருவரும் கணப்பொழுது கழித்துத் தம் கண்ணைத்திறந்து பார்க்கவே தமது உயிர் நேசனையும் அவனதுயிர்க் காதலியையும் காணாது அவ்வணங்காசின் சூடாமணியையும் மேலாடையையுமட்டுமே மேதினியில் விழுந்திருக்கக் கண்டார்கள். பின்னர் அவ்விரு நண்பரில் ஒருவன் தனதுயிர்த்தோழனது பிரிவாற்றப் பொறாது, "அகிலஜகத்காரணி, அம்பிகே, யான் மறுஜன்மத்திலும் எனதுயிரன்பனுக்கே யநுசரனாகக் கடவேன்." என்று பிரார்த்தித்துக்கொண்டு அம்மலையினுச்சியினின்றும் விழுந்து மரித்தனன். இதனையும் கண்ணுற்ற மற்றொரு மித்திரனோ தலைப்பில் தனது நண்பனது ரூபம் வரையப்பட்டுள்ள அப்பட்டாடையையும் அச்சித்திரப்பலகையையும் அச்சிமந்த மணியையும் சரேலெனக் கைப்பற்றிக்கொண்டு அம்முனியை நோக்கிக் கண்களில் நீர் ததும்ப, "அடா! பாவி, கொடிய நெஞ்சத்தனை விருஷிப்பதரே, குற்றமற்ற யாங்களெல்லோருமொருங்கே உனது சாபாக்கினிக்கிரை யாகும்படி யுனக்கு யாங்களிழைத்த தீமை யாதடா?'' என்று நிந்தித்துப்பேசவே தயை யற்ற வத்தவசியும் எரி நெருப்பில் எண்ணெய் பெய்ததுபோல் முன்னிலும் மும்மடங்கு சீற்றமுற்று அவனை நோக்கி, "நேசர்மாட்டுள்ள நட்பு மிகுதியினால் நீ இங்ஙனம் இராக்கதன்போல் பிதற்றுகிறபடியால் நீ யிக்கணமே நிசாசரனாகக்கடவதுமன்றி அவ்வுயிர்நண்பனே யுன்னுயிரை மாய்க்கும் மாற்றலனாகக்கடவன்.'' என்று இடிசாபமிட்டுத் தனக்கிஷ்டமான விடத்திற்கேகினர். உடனே அவனும் அரக்கவடிவமுற்றுத் தான் முன்னம் கைக்கொண்ட அம்மூன்று வஸ்துக்களுடனே அங்குமிங்கும் திரிந்து அகிலப் பிராணிகளுமச்சமுறும்படி செய்துகொண்டிருந்தனன்.

அம்பிகையினாலயத்திலிருந்து அம்முனிசாபத்தினால் விளைந்த வவ்வனர்த்தங்களனைத்தையும் தனது யோகதிருஷ்டியாலறிந்துகொண்ட அக்காளனவாஹினியுமுடனே ஹாஹாகாரம் செய்துகொண்டு அவ்விடமுற்றனள். அக்காலை அம்பிகை ஆகாயத்தினின்றுமோர் அசரீரி வாக்காக மொழிந்தருளினதாவது:— "மேதினியில் மைந்தரை வேண்டித் தவம் புரியும் எனது பக்தர் இருவருக்கு இவ்விரு காதலரும் தாமொருவர்க்கொருவர் மாற்றிக் கொண்ட மல்லிகைமாலை முத்தவடமிவைகளுடனேயே மைந்தராயுதித்து முன்னிலும் மும்மடங்கதிகமான மெய்த்திருவுடன் முன் சன்மத்தில்போலவே பரஸ்பரம் மனவேட்கையுற்று மணந்து கொள்ளப்போகின்றார்கள். ஆகிலும் முனியிட்ட சாபம் வீண் போகாது அவ்விருவரும் முதன் முதல் மருவிப்புணருங் காலத்தில் அக்கன்னிகை மூர்ச்சித்து விழுவாள். என்றாலும் அவளது அங்கத்தில் அச்சூடாமணியின் பரிசம் பட்டமாத்திரத்தில் அவள் மூர்ச்சை தெளிந்தெழுந்திருப்பாள். அன்றியும் அவனியில் தன்னாருயிரன்பனுக்கு அநுசரணாகக் கருதி குன்றின் சிகரத்தினின்று குதித்துயிர் துறந்த தோழனும் முன்னிலும் மிக்க வடிவழகு வாய்ந்தவனாய்த் தான் கருதியவாறே யவ்வாலிபனுக்கு அந்தரங்கநேசனாவான். மற்றொரு மித்திரனோ அம்முனிவர் முனிந்துரைத்த வாக்கின்படி அனைவர்க்கும் அச்சத்தை விளைக்கும் அரக்கவடிவமுற்றுத் தன்னுயிர் நண்பனை சத்துருவாய்த் தன்னைக்கொல்ல மீண்டும் முன்வடிவம் பெற்று மித்திரனோடு சேர்ந்து மகிழப்போகின்றான்." என்பதே.

என்றிங்ஙனம் மந்தாகினி மொழிந்த வற்புத சரித்திரத்தை யதிகவாவலுடன் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த மாருதனும் அவளை நோக்கி, "பகவதி, இப்பொழுது அம்மகாபுருடர்கள் எவணிருக்கின்றார்கள்? அவ்வாலிபன் தனது வல்லபையுடன் மீளவும் சேர்ந்து மகிழ்ந்தானோ?" என்று வினவவே, அத்தவசித்தலைவியும் மிக்க மனமகிழ்ச்சியுடன், "என் செல்வக் குழந்தையே, யான் மொழிந்த அவ்வித்தியாதர கன்னிகை நின் மனத்திற்கிசைந்த மனைவியாகிய விம்மல்லிகையே தான். அவண்மாட்டு அதிக அன்பு வாய்ந்திருந்த வாயுவின் புதல்வனான அச்சிறுவனும் மறுஜன்மத்தில் மாருதனெனப் பெயர்வாய்ந்த நீயேயல்லது வேறொருவனுமல்லன்."

எனவே அங்கிருந்தவெல்லோரும் தம்முளடக்கமுடியாத வாச்சரிய மும் ஆநந்தமும் அடைந்தனர். பின்னர் அவள் மீளவும் மொழிய லுற்றதாவது:—"அவ்வாலிபனது இருநண்பரில் தன்னுயிர்நண்பனு க்காக மலைச்சிகரத்தினின்று விழுந்து மாண்டவன் இதோ! நின்ன ருகில் இருக்கும் இக்கலகண்டனென்னு முயிர்த்தோழனே தான்." எனவே மாருதன் கலகண்டனை நோக்கி "மித்திரரத்தினமே, நல்ல வேளையாய் யானுன்னை யிச்சன்மத்திலும் என் இன்னுயிர்த் தோழனாக வடையப் பெற்றேனே!" என்று சொல்லி யவனை யிறு கத் தழுவிக்கொண்டனன். மந்தாகினி மீண்டுமவனை நோக்கி, "வத்ஸ, மாருத, அரக்கன்வடிவுற்று உன் அன்புமிகு மல்லிகையை யந்தரத்திலெடுத்துச் சென்று உன்னுலுடைவாளால் வெட்டுண்டுயிர் நீங்கி விண்ணவர் வடிவுற்றவனும் மல்லிகை வேடந்தரித்துச் சம்பர னைச் சீர்கொலைந்து சீமைவிட்டோடும்படி செய்தவனுமான மாக ந்தனென்பவனே யுனது மனமொத்த மற்றொரு நண்பன்." என் றுரைத்தவுடனே அக்காலையுண்டான களிப்பின் மிகுதியால் மல் லிகை, மாருதன், கலகண்டன், மந்தாகினியாகிய இந்நால்வரும் மூர்ச்சித்து விழுந்தார்கள். மல்லிகைமட்டும் முடியில் தரித்திருந்த மணியின் மகத்துவத்தால் சடுதியில் மூர்ச்சைதெளிந்தெழுந்தனள். அக்காலை நவமாலிகை காளிந்தியை நோக்கி மிகுந்த சந்தோஷத் துடன், "ஸகி, காளிந்தி, நமது ஸகி மல்லிகை சிகாமணியின் சக்தி யினல் சீக்கிரம் மூர்ச்சை தெளிந்தெழுந்தனள்: பார்த்தனையா?" என்றுரைத்து மல்லிகையை நோக்கி, "பிரிய ஸகி, மூர்ச்சித்திரு க்கும் ஐயன் மாருதனைத் தாங்கிக்கொண்டிரு." என்று சொல்ல வே அவளும் தனதுயிர்க்காதலனை யன்புடன் தாங்கிக்கொண்டு நவமாலிகையை நோக்கி, "ஸகி, நவமாலிகே, நீயும் நினது பிராட்கொண்ட நேசன் கலகண்டனைத் தாங்கிக்கொண்டிரு." என்றாள். நவமாலிகையுமங்ஙனே புரியவே, காளிந்தியும் மந்தாகி னியை மடிமேல் தாங்கிக்கொண்டிருந்தனள். பின்னர் சில நிமிஷ ங்கள் கழியவே அவர்கள் எல்லோரும் பிரஜ்ஞை தெளிந்தெழுந்தார் கள். அக்காலை மாருதனும் மல்லிகையை நோக்கி, "ஆ! எனது மனதிற்கிசைந்த மல்லிகே, நம்மிருவருக்கும் முற்சன்மத்தில் நடந்த சங்கதிகள் ஒவ்வொன்றுமிப்பொழுதுதான் என் நினைவிலுதிக்கின் றன." என்றுரைத்து மந்தாகினியை நோக்கி, "மகிமைதங்கிய

மந்தாகினியம்மையே, முற்பிறப்பில் எம்மிருவருக்கும் ஹிதமாய்ப் பேசி எங்களை இனிதுசேர்த்துவைக்க முயன்ற யோகீச்வரியே தாங்கள் என்று இப்பொழுதுதான் அறிந்துகொண்டேன்." என்று பரிவுடன் பணிவாக மொழிந்தனன். அப்பொழுது மந்தாகினியும் அவனை நோக்கி, "வத்ஸ, முனியிட்ட சாபத்தின் தோஷத்தினால் இதுகாறும் உங்களுக்கு முற்பிறப்பின் நினைவு குன்றியிருந்தது. இப்பொழுது அச்சாபம் நீங்கவே முன்னடந்த சகல சங்கதிகளும் உள்ளங்கையிலிலங்கும் நெல்லிக்கனிபோல் உங்களுக்கு விசதமாய் விளங்கும். இதனைப்பற்றியும் ஏற்கெனவே அம்பிகை யசரீரிவாக்காக வருளிச் செய்திருக்கின்றனள்." என்றாள். அருகிலிருந்த ஸாரஸிகை (தன்னுள்) "இச்சங்கதிகள் யாவும் பகவதியிடமிருந்து ஏற்கெனவே யான் இரகசியமாய்த் தெரிந்துகொண்டிருக்கின்றேன்." என்று சொல்லிக்கொண்டிருக்கையில் கலகண்டன் வானத்தினின்றுமோர் தேவவிமானம்வரக்கண்டு மிகுந்தவாச்சரியத்துடன் மந்தாகினியை நோக்கி, "பகவதி, இதோ! பார்த்தீர்களா வானினின்றும் ஏதோ ஓர் வெள்ளை விமானம்போல்வருகின்றது." என்று சுட்டிக்காண்பிக்கவே அதனைக்கண்ட மந்தாகினியைத்தவிர்த்த மற்றெல்லோரும் மிகவும் விந்தையுடன் விழித்துப்பார்த்துக்கொண்டிருப்புழி, யோகீச்வரியும் அதனை யுய்த்துநோக்கி அஃது இன்னாருடையதென்று நன்கு அறிந்துகொண்டு மிக்ககளிப்புடன் கலகண்டனை நோக்கி, "வத்ஸ, கலகண்ட, நீயுரைத்தபடி உண்மையாகவே இது தேவவிமானம். வெண்குடைக்கீழிருந்து வச்சிரகுண்டலங்களசைய இருபுறமும் தைவப் பெண்கள் சாமரம் வீச இப்பொழுது விமானமேறி வரும் இத்திவ்ய புருஷன் வித்யாதர மந்திரிச்ரேஷ்டனான விச்வாவஸுவெனும் பெயரிய வெனதுயிர்த் தோழன். இப்பொழுது இவர் மாகந்தனிடமிருந்து தனது செல்வப் புதல்வியாகிய மல்லிகையும் அருமை மருமகனாகிய மாருதனும் முனிசாபம் நீங்கி முன்போல் இனிது சேர்ந்திருப்பதைச் செவியுற்று அவ்விருவரையும் கண்டு களிக்குமாறு காசினியை யுறுகின்றார்." எனவே மல்லிகையும் மிக்க மகிழ்ச்சியுடன் தன் தந்தையின் வரவை யெதிர்நோக்கிக் கொண்டிருந்தனள். விமானம் வஸுமதியைக் கிட்டினவுடனே விச்வாவஸுவும் மாகந்தன் கைலாக்குக் கொடுக்க விமானம் விட்டிறங்கினவுடனே மாருதனும் மல்லிகையும் மிக்க வணக்

கத்துடன் வந்தனம்புரிய அவனும் அவர்களை யதிகவன்புடன் தழுவி யானந்தபரவசனுகவே யெல்லோரும் ஆசனத்திலுட்கார்ந்தார்கள். அக்காலை விச்வாவஸு மாருதனது மார்பினில் தன்னும் முத்துமாலையைக் கண்ணுற்று மகிழ்வுடன் (தன்னுள்) "இம்முத்து வடமானது முன்னம் ஆதிசேடனுல் இந்திரனுக்கும், இந்திரனுல் நமது வித்யாதர ராஜனுக்கும் அவரால் எனக்கு முவந்தளிக்கப்பட்டது. அதனை யான் எனது இச்செல்வப் புதல்வியினது செங்கு போன்ற கண்டத்தில் புனைந்தேன். அத்தகைய ஹாரத்தை யிப்பொழுது என்னருமை மருமகனது மார்பினில் காண வென் மனம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது." என்றான். அதன்பின் மாருதனும் கலகண்டனும் தமது உயிர்த்தோழனை மாகந்தனைக்கண்டு "ஸகே, மாகந்த, நல்லவேளையாய் இப்பொழுது நாமெல்லோரும் முன்போல் ஒன்றுசேர்ந்து மகிழ்ந்திருக்கப் பெற்றோம்." என்று அவனை யிறுக மார்போடணைத்துக்கொண்டார்கள். உடனே மந்தாகினி விச்வாவஸுவைக் கிட்டி, "வித்தியாதராமாத்தியருக்கு நல்வரவு." என்று குசலப்ரசனம் பண்ணவே, அன்னவனும் அவளை நோக்கி, "ஓ! பகவதி மந்தாகினி, கைம்மாறேதுங் கருதாது எப்பொழுதும் எனது நன்மையைக் கோறி யெனக்குற்ற விடுக்கண்களைப்போக்கி உதவிபுரிந்த உத்தமசீலையான உனக்கு வந்தனம்." என்று அவளை வணங்கினன். பின்னர் தன் புதல்வியாகிய மல்லிகையை யெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு அக்காலத்தில் அவளது நயனங்களினின்று பெருகும் நீர்த்துளிகளைத் தன் கரத்தால் துடைத்து அவளது அவயவசோபையை உய்த்து நோக்கித் தன்னுள், "ஆகா! கருணைக்கடலாகிய காத்தியாயனியினது அநுக்கிரகத்தால் இப்பொழுது வத்ஸையின் வடிவழகு முன்னிலும் மும்மடங்கதிகமாகவே விளங்குகின்றதே!" என்று வியந்து பின்னர் மந்தாகினியை நோக்கி, "பகவதி, மந்தாகினி, ஸுலபமன்யுவெனும் மாமுனியினது சாபும் நன்மையைப் பயக்கக்கூடியதாகவேயாயிற்று. ஏனெனில், புவியெங்கும் பெரும்புகழ் வாய்ந்த பிரமதத்தன், விச்வவஸு என்னுமிவ்விரு மந்திரித் தலைவர்களும் எம்மைப்போல் இவ்விரு குழந்தைகளால் அரிய மக்கட்பேற்றை யடைந்தனரன்றோ?" எனவே, மாந்தாகினியும் "அமாத்தியசேகரரே, நீர் புகன்றது முற்றுமுண்மையே. இம்மாருதன் முற்சன்மத்திலுல் மாருததேவனுக்கும்

இச்சன்மத்தினுல் பிரமதத்தனுக்கும் பிரியபுத்திரனயிருத்தல் மற்றி அவ்விருவரும் பொதுவாய்ப் போற்றும் பான்மையை யுற்றிருக்கின்றனன். அங்ஙனமே இம்மல்லிகையும் முற்பிறப்பினுல் விச்வாவஸு வென்ற வுமக்கும் இப்பிறப்பினுல் விச்வவஸு வென்பவருக்கும் பொதுவாய்ப் பேணும் புதல்வி யாயினள்." என்று மறுமொழி யுரைத்தனள். அதன்பிறகு இரமயந்திகை, நவமாலிகை, காளிந்தி ஆகிய விம் மூவரும் (தமக்குள்) சொல்லிக் கொண்டதாவது: "ஆகா! பகவதி மந்தாகினியின் மகிமையே மகிமை! ஏனென்றால். முதலில் சம்பாகனை யேமாற்றுவதற்காக என்னென்னவோ ஏற்பாடுகளைச் செய்வித்த விவ்வம்மையால் நம்மெல்லோர்க்கும் அதிக வியப்பையும் ஆநந்தத்தையு மளிக்கத்தக்க வோரற்புத நாடகம் நடத்தப்பட்டது. அதன்பிறகு ஓரரிய பெருங்கதையைப் பிரஸங்கித்ததால் பிறிதொரு பிரபந்தம் பிரசாரஞ் செய்யப்பட்டதன்றே?" என்பதே. பிறகு விச்வாவஸுவும் மல்லிகையை நோக்கி யவள் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் இரமயந்திகை முதலிய தோழிகளைக் குறித்து "இப்பெண்மணிகள் யாவர்?" என்று வினவவே அவளும் அவரது தோளில் சாய்ந்துகொண்டே அவர் காதில் மெதுவாய்ச் சொன்னதாவது: "எனது அன்புமிகுந்த தந்தாய், இவர்களனைவரும் எனது தோழிமார்கள். இதோ! இங்கு நிற்பவள் யான் புழுதி விளையாட்டயர்ந்த காலந்தொடங்கி என்னை விட்டுப் பிரியாது என்னுயிர்க்குயிரா யிருக்கின்ற நவமாலிகை யென்ற வென்னுயிர்த் தோழி." என்று நவமாலிகையைச் சுட்டிக் காண்பித்தனள். விச்வாவஸு மீண்டும் அவளை நோக்கி "மற்றைய பெண்கள் யாவர்?" என்று மெதுவாகவே வினவவே அவளும் ஸாரஸிகை காளிந்தி இவ்விருவரையும் சுட்டிக்காட்டி "இவ்விருவரும் பகவதி மந்தாகினியம்மாளின் சீஷைகள்" என, அவர் "வத்ஸே, மற்றொரு மடந்தை யாவள்?" என்று இரமயந்திகையைப் பற்றிக் கேட்கவே அவளும், "இவள் விஷ்ணுராதனெனும் மந்திரியின் புதல்வியும் பிரிய நண்பன் கலகண்டனது காதலியுமாகிய இரமயந்திகை யென்பவள்." என்று மறுமொழி யளிக்கவே, விச்வாவஸுவும் (தன்னுள்) "ஓகோ! இவ்வணங்கரசைப் பற்றி நம்மிடம் மாகந்தன் ஏற்கெனவே மொழிந்திருக்கின்றனன். கலகண்டனுக்குத் தக்க நாயகி யிவளேதான்." என்று துதித்துப்பேசி பின்பு தனது

புதல்வியை நோக்கி, "குழந்தாய், 'பிரிய நண்பன் கலகண்டன்' என்றாயே; கலகண்டன் யாருக்குப் பிரிய நண்பன்?" என்று புன்னகையுடன் கேட்க மல்லிகை மறுமொழியளிக்க வெட்கி விலகவே விச்வாவஸு (தன்னுள்) "நாயகனது நாமத்தை நவில நாணமுற்றுத் தனது நளினமலர் முகத்தைக் குனித்துக்கொள்ளுமென் கண்மணி மல்லிகையை யிப்பொழுது கண்ணால் காணப் பெற்றேனாதலி னிது காறும் யான் கொண்டிருந்த மனோரதம் இன்றுதான் நிறைவேறிற்று." என்றுள்ளித் தன்னுள்ளங்களித்தனன். அங்ஙனம் மல்லிகை வெட்கி நிற்கும் காரணத்தை யறிந்த மந்தாகினியும் அதனையறியாதவள்போல் விச்வாவஸுவை நோக்கி, "குழந்தை மல்லிகை யேன் வெட்கமுற்றவள்போல் காணப்படுகின்றாள்?" என்று புன்னகை புரிந்து வினவவே, அவரும் "கலகண்டன் யாருடைய பிரிய நண்பனென்று யான் கேட்டவுடன் இங்ஙனம் இலஜ்ஜையுற்றிருக்கின்றனள். அதினுண்மையான காரணம் யாதோ யானறிகிலேன்." எனவே எல்லோரும் குறுநகை புரிந்தார்கள். இங்ஙனமிவர்களெல்லோரும் இனிது உரையாடிக்கொண்டிருக்கையில் திடீரென்று பிரமரகனுற்று மந்தாகினியை நோக்கி, "பகவதி, அமாத்திய விச்வவஸு, விஷ்ணுராதன் இவ்விருவருடன் கூடிய மகாராஜாவவர்களால் இதோ! நம்மையன் மாருதனுக்கொரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது." என்று ஒரு பத்திரிகையை நீட்டவே அவளும் அதனை வாங்கிப் பின்வருமாறு வாசித்தனள்:—"புவனமனைத்திற்கும் பூர்ண சந்திரன்போல் விளங்கும் மாருதனெனும் மகாபுருஷனே, நீர் சதிமதியன் சம்பரகனைச் சீர்குலைத்து மனமொத்த மல்லிகையை மணந்தது எங்கள் மனத்திற்கு மிக்க களிப்பை யளிக்கின்றது. மேலும் உமதுயிர் நண்பனனை கலகண்டன் மகிமை தங்கிய மந்தாகினிவேடம் பூண்டு நமது அமாத்திய விஷ்ணுராதனது புதல்வி யிரமயந்திகையை யிரகசியமாகப் பாணிக்கிரகணம் புரிந்ததைப்பற்றியும் யாங்கள் சந்தோஷிக்கின்றோம். ஆதலால் தக்க மரியாதையுடனுற்றுத் தம்மைத் தரிசிக்க நினைத்திருக்கும் எமது வரவை யின்னிமிஷமெதிர் பார்ப்பீராக." என்றிங்ஙனம் வரைந்திருந்ததை வாசிக்கக்கேட்ட மாருதன் முதலிய யாவரும் இருதயத்தில் களிகூர்ந்து ஆவலுடன் அவர்கள் வரவை யெதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். அக்காலை விச்வாவஸுவும், "இவையெல்லாம் பகவதி மந்தாகினியின் மதி

வைபவத்தால் முடிந்தனவென்று ஏற்கெனவே இம்மாகந்தனிடமிருந்து யான் அறிந்துகொண்டிருக்கின்றேன்." என்று அவளைக் கொண்டாடினன். சில நிமிஷங்களுக்கெல்லாம் அக்குஸுமபுரத்தரசன் தன் முக்கிய மந்திரிகளாகிய விச்வவஸு, விஷ்ணுராதன் இவ்விருவருடன் சதுரங்கசேனை புடைசூழ மிக்க வாடம்பரத்துடன் மாருதனது விடுதியைக் கிட்டினன். மாருதனும் கலகண்டனும் மிக்க மரியாதையுடன் அவர்களை யெதிர்சென்றழைத்துப் பொற்பீடத்திலிருத்திப் பூஜித்து வணங்கினர்கள். விச்வவஸுவும் விஷ்ணுராதனும் தத்தம் மருமகன்களையும் மகள்களையும் மார்போடணைத்துக் கொண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். அதன்பின் அருகில் அமானுஷ காந்தியுடன் விளங்கும் விச்வாவஸுவைக் கண்ணுற்ற விச்வவஸுவும் மந்தாகினியை நோக்கி "இம்மகாபுருஷன் யார்?" என்று வினவவே மந்தாகினியும் அவனை நோக்கி, "மந்திரித்தலைவ, இவர் வித்தியாதர மந்திரிசக்கிரவர்த்தியாகிய விச்வாவஸுவெனபவர். இவர் தான் நின்னரிய புதல்வி மல்லிகையின் முற்பிதா." என்றுரைத்து மல்லிகையினது முற்பிறப்பின் வரலாற்றை யாதியோடந்தமாகக் கூறவே விச்வவஸுவும் மிக்க வியப்பும் ஆநந்தமுமுற்று அவரைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடினன். அக்காலையருகிலிருந்த பிரமரகன் மந்தாகினியை நோக்கி "அன்னைமீர்! நமது மல்லிகையம்மாளது பிதாக்களிருவர்களுடைய பெயர்களும் ஒரே விதமாயிருக்கின்றனவே! பார்த்தீர்களா?" என அவளும் "ஆம்; ஒரேவிதமே. என்றாலும் ஆகாரத்தினால்மட்டும் பேதம்." என பிரமரகன் "ஓகோ! ஒருவர் பெயர் விச்வவஸு; மற்றொருவருடைய பெயர் விச்வாவஸு; அதாவது ஆ வென்னும் நெட்டெழுத்தினால் மட்டும் பேதமோ?" என மந்தாகினி, "அது மாத்திரமல்ல; ஆகாரமென்றால் வடிவம். அதினாலும் வித்தியாஸமுண்டு; அதாவது ஒருவர் மனித சரீரம்படைத்தவர்; மற்றொருவர் தேவசரீரமுற்றவர்." என மாருதன் "அதுமட்டுமல்ல; ஆகாரமென்றால் உணவு; அதினாலுமிவ்விருவருக்கும் வேற்றுமையுண்டு. அதாவது இவர் மனிதப் பிறப்பாகையாலிவர்க்காஹாரம் அன்னம்; மற்றொருவர் தேவாம்சமாதலின் அவர்க்குணவு அமிழ்தம்." எனவே, பிரமரகன் "அம்மம்ம! பாஷைகளில் ஒவ்வொரு சொற்களுக்கும் எத்தனை பொருள்களிருக்கின்றன!" என்று வியந்தனன். இதற்குள் மாருதனது பிற்பிறப்பில் பிதாவா

கிய பிரமதத்தன் என்பவரும் தனது தநயன் குஸுமபுரஞ்சென்று நெடுநாளாகியும் வாராதிருக்கக்கண்டு அவனைப் பார்க்குமாறு அநேக பரிவாரங்களுடன் குந்தள தேசத்தினின்றும் அவணுற்று விச்வவஸு முதலியவர்களால் நன்கு பூஜிக்கப்பட்டுத் தனது மைந்தனது தேவத்தன்மையையும் அவன் மகிமைதங்கிய மந்தாகினியின் மஹோபகாரத்தால் மல்லிகை யென்னும் மாதரசை மணந்ததையும் அவளது பூர்வஜன்ம சரித்திரத்தையும் கேள்விப்பட்டு மிதமற்ற களிப்பை யடைந்தனன். பின்னர் விச்வாவஸுவும் அவர்களெல்லோரிடத்திலிருந்து விடைபெற்று விமானமேறி விண்மார்க்கமாகப் புறப்பட்டு வித்தியாதர வுலகத்திற்கேகினன். மந்தாகினியும் முன்போல் தனதிருப்பிடமாகிய இமயமலைச்சாரலை யுற்றனள். பின்னர் விச்வவஸுவும் தனது சம்பந்தி, மருமகன் முதலியவருடன் அதிகவாடம்பரத்துடன் தனது மாளிகை சென்று அவர்களுக்குத் தக்கபடி அற்புத விருந்தளித்து அநேக நாளுபசரித்தனன். இங்ஙனம் மாருதன் தன் மனத்திற்கியைந்த மனைக்கிழத்தியாகிய மல்லிகையோடு தனது தந்தையின் தேயமாகிய குந்தளதேசத்தில் சிலகாலமும், குஸுமபுரத்தில் சிறிதுநாளும், மந்தமாருத பகவானது மந்திரமாகிய மலயகிரியில் சின்னாளும், வித்தியாதரமந்திரி விச்வாவஸுவின் வாஸஸ்தானமாகிய இமயகிரி சிகரத்தில் சிலநாளுமாக விருந்து மனிதருடைய மனோவாக்குகளுக்கெட்டாத வில்லறஸுகங்களை யினிது நுகர்ந்து மிக்க மகிழ்வுடன் நீடூழி வாழ்ந்திருந்தனன்.

மோ. க. சடகோபாசாரியார்.

முற்றிற்று

ஸ்ரீ ராமாநுஜசரிதம்.

இவ்வுலகவாழ்க்கையே முக்கியவின்பமென்று மயங்கித் தம் வாணாள் முழுதும் வீணாப்படி கழிக்கும் பேதையர்கள் கிணற்றுத் தவளையின் பின்பிறந்தவர்களேயாவார்கள். இது அற்பமென் றறிந்தும் பேரின்பமொன்றுண்டென்று கேட்டும் சிலர் அது பெற நம்மாலாகுமோவென மயங்கி விலகிநிற்பார்கள். அவர்களை யாம் எதனோடு ஒப்பிடலாமோ விளங்கவில்லை. எவ்வகையாயினும் நம்மா லியன்றவரை முயன்று சித்திபெறவேண்டுமென்று கருதி விடாமுயற்சி செய்பவனே உத்தமபுருஷனென்பார்கள். தண்ணீர் மேலே யிருந் துற்றுநோக்கி மீன்களைக் கவர்ந்து பசி தீர்த்து வாழக்கடவ மீன்குத்தியை இவர்களுக்கு உவமையாகக் கூறத்துணிவோம்.

“தகேஷாஸ்வத்திஷ்ட: ஸ்ரூதயோ விஹீனா
வைநதோ உநியஸ்ய கதம் ஷ்ராணம் |
யஸ்ய தஷா நிஹிதம் மஹாயாம்
ஹாஜவநா யேந மதஸ்வந்தா:”

இது 'கஃவஹூரீ' 'நடக்கவேண்டிய வழி யெது' வெனக்கேட்ட யக்ஷனுக்கு தர்மபுத்திரர் உரைத்த உத்தரம். "தர்க்கம் நிலை நிற்கமாட்டாது. வேதங்கள் பலவாறு கூறுகின்றன. ரிஷி ஒருவரேயானால் அவர் கொள்கையை நாமேற்றுக்கொள்ளலாம், அப்படிக்கின்றி அவர்கள் பலரிருக்கிறார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு வகை கூறுகின்றார்கள். தர்மத்தின் உண்மையோ மலைக்குகைக்குள் ஒளித்து மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் முன்னோர் போனதே பின்னோர்க்கு வழி." இது இந்த சுலோகத்தின் பொருள்.

இதனால் மூதறிவிலாத பேதைகளாகிய யாம் எம் புத்தியால் ஒன்றைத் தேறப்பிடித்து நடக்கிறோமென்னாது பெரியோர் சென்ற வழியே செல்லவேண்டியது கடமையாமென்று கொள்ளவேண்டுமே. பொதுப்படப் பெரியோர் என்றாலும் அவரவர் தாதை மூதாதைகள் நடந்தவழியே யவரவர் குடும்பத்தோர் பின்பற்றி நடக்கவேண்டியவர்கள்.

"ஆதியில் அந்தந்த மதங்களை பிரவர்த்திப்பித்த புத்திமான்களான பெரியவர்களின் ஸாமர்த்தியங்களுக்கேற்றபடி அந்தந்த மதங்கள் பரவி வளருகின்றனவென்றாலும், உண்மையில் ஜகத்காரணமான பொருள் ஒன்றேயாகையால் தத்துவம் ஒன்றே. அதனைப் பெறுகையே வீடாகையால் மோக்ஷமும் ஒன்றே. ஓரூருக்குப் பல வழியிருப்பது போல அதற்குப் பல வழிகள் கூறப்படுகின்றன. எவ்வழியே சென்றாலும் முடிவில் சேருமிடமொன்றே" யென்று இக்காலத்திய தத்வஜ்ஞானிகள் சொல்வதைப் பலமுறை நாம் கேட்டிருக்கிறோம்.

இதை நாமும் 'ஆம்' என்று ஒப்புக்கொள்வோம். ஒன்றுக்குப் பல வழியுண்டென்பது மறுக்கத்தக்கதல்ல. நாம் பெறவேண்டியதொன்றுதானென்பதிலும் ஐயமில்லை.

ஆனால் அவ்வொன்று எதுவென்பது மாத்திரம் தீர விசாரிக்கத்தக்கது.

உதாரணமாக, பட்டணத்தையறியாத ஒருவன் அவ்விடம் மிகவும் நேர்த்தியானது, நீ போய் அவசியம் கண்டு வரவேண்டுமென்று நண்பனால் தூண்டப்பட்டு பட்டணம் பார்க்கவேண்டுமென்னு மாசையை யடைகிறான் என்று வைத்துக்கொள்வோம். பின்னர் அவன் தன்னெதிரே காணப்பெற்ற ஒருவனை 'பட்டணத்துக்குப் போக வழி எது' என்று வினவுகிறானென்றால் அதற்கு அவன் தான் எதை பட்டணமென்று கொண்டிருக்கிறானோ அவ்வழியைக் கூறுவானேயல்லது ஏந்த பட்டணத்தைச் சுட்டி தூண்டிய நண்பன் கூறினானோ அதன் வழியை இவன் கூறுவானோ. ஒவவொருவரும் ஒவ்வொரு ஊரைப் பட்டணமென்று பாவிப்பார்களாயின் அவரவர் கூறும் வழி அவரவர் பட்டணம் சேர்க்குமேயல்லது எல்லா வழியும் ஒன்று சேர்ந்து ஒரு பட்டணத்தைச்சேரவிடுமோ? தான் செல்ல நினைத்த பட்டணம் இதுவென்று நன்றாகத் தெரிந்துகொண்டு அதன் வழியைப்பற்றி அறிந்தாரைக் கேட்பானாயின், அவர்கள் கூறும் வழியொவ்வொன்றும் வெவ்வேறாயிருப்பினும் அவையெல்லாம் கடைசியாக இவன் போகவேண்டிய பட்டணத்தையே யடைவிக்குமென்பதில் ஐயமில்லை.

இதுபோலவே நாம் பெறவேண்டியதாவது நிலையாய மறுமைப் பேறேயாகையால் அதனுட்பிரிவுகளை நன்றாக அறிந்துகொண்டு அவைகளில் நமது இன்பத்தை விளைப்பதெதுவோ அதற்குரிய வழியையல்லவோ நாம் கைப்பிடிக்கவேண்டும். நிலையாய மறுமைப் பேறாகிய மோக்ஷத்தைப்பற்றி ஒவ்வொரு மதஸ்தர்களும் ஒவ்வொரு விதம் கூறுகிறார்கள். அப்படியே யவர்கள் ஒவ்வொரு வழியும்

காட்டுகிறார்கள். பொது நிலையாய் ஆராய்ந்து பார்க்கும் எமது புத்திக்கு இஷ்டமான முறையில் ஹிந்துக்களுக்கு முக்கியப் பிரமாண்மான உபநிஷத்துக்களை மேற்கோளாகக்கொண்டனவும் வேதவியாஸ முனிவரால் தொகுக்கப்பட்ட ப்ருஹ்மஸூத்ரத்தைத் தழுவினவுமாகிய 'அத்வைதம்' 'விசிஷ்டாத்வைதம்' 'த்வைதம்' என்னும் மூன்று மதங்களே உண்மையானவையும் மேன்மையானவையுமென்பது எமது துணிபு.

இம்மூன்று மதங்களைப்பற்றியும் விஷயங்களைச்சோதித்து பிரசுரிப்பதற்கு முன்பே அவைகளைப் பரதகண்டத்தில் பரவச்செய்த மஹாபுருஷர்களின் பெருமையைப் பலரும் அறியும்படி வெளியிடுவது முக்கியமான விஷயமாயிருக்கிறது. புண்ணிய புருஷர்களின் பாவனமான சரிதத்தை நாமோகூறவல்லோமென்றெவ்வொருவரும் பின்வாங்குவார்களாயின் கோமுட்டிப்பால் கதையாய் சரிதமே கூறுவாரில்லாது லோபமடைந்துவிடுமல்லவா! ஸர்வேச்வரனுடைய குணங்கள் எண்ணவுஞ் சொல்லவு நினைக்கவுமரிதாக வேதங்களில் கூறப்பட்டிருந்தும் நாமும் நம்மைச்சேர்ந்தாரும் உஜ்ஜீவனமடையுமாறு நம்புல்லறிவுக்கெட்டினவரையில் நாம் பாடிக்கொண்டாடிப் பரவுகிறோமன்றோ! இதனால் பரமாத்மாவுக்காவது அவனுடைய திவ்ய குணங்களுக்காவது வழுவுண்டோ? குறையுண்டோ? மாறுதலுண்டோ?

முன் ஜன்மத்திற்செய்த தவப்பயனால் அரசராகப் பிறந்தோர் பொன்னுடை யுடுத்துப் பொற்கிண்ணத்திற் பாலுஞ்சோறும் புஜிப்பார்கள். அவர்களைக்கண்டு ஊழ்வினையால் தரித்திரராய்ப்பிறந்தோர் உடுக்காமலும் உண்ணாமலுமிருந்துவிட இயலுமோ? கந்தையுடுத்துப் பனையோலையை மடக்கியதிற் கூழை வார்த்துக்கொண்டு உண்ணவில்

லேயோ? அவர்களைச் சார்ந்தவர்கள் அதையே உபயோகிக்கவில்லையோ?

ஸர்வேச்வரன் நமக்குக்கொடுத்த சக்தி அறிவுகளைக் கொண்டு நம்புத்திக் கெட்டிய வரையில் மஹான்களின் புண்யசரித்திரத்தைக் கூறுவோம். நமதன்பர்கள் நம்மைச் சார்ந்தோர்கள் அதை ஆதரிப்பார்களாக.

ஆன்றான்றிப் பார்க்குமிடத்து எல்லா மதங்களும் பழையனவென்றே கொள்ளல்வேண்டுகிறது. வேதங்கள் புருஷனால் செய்யப்பட்டனவல்லவென்பதே மீமாம்ஸையின் முடிவு. முனிவர்களின் கால நிர்ணயத்தைப்பற்றி யுண்மையாக நம்பிக் கூறக்கூடிய பிரமாணங்கள் கிடையாது. இக்காலத்திய மேதாவிகள் கூறும் யுக்திகளும் ஊஹைகளும் போலிப் பிரமாணங்களும் எமது நம்பிக்கைக்குப் பாத்திரமாகவில்லை.

முக்கியமாய்க் கவனிப்போமாயின் மதங்களைப்பற்றிப் 'புதியது பழையது' என்பது அனாவசியகமான விசாரம். குணகுணங்களை வேண்டுமானால் ஆராய்ந்து பார்க்கலாம். அதனாலும் முடிவில் பயனில்லை, இல்லை. அப்படி யேன் கூறவேண்டும்? உண்மையில் எது எவ்வகையாயிருந்தாலும் 'நமது மதமே குணமுடையது, எதிர் மதம் குணமற்றது' என்று அவரவர் கொள்வதால் மதத்தில் பற்றும் பிரீதியும் வளருமல்லவா.

அந்தந்த மதத்தின் பாஷ்யகாரர்களே அவ்வவர் மதத்தைப் பரவச்செய்தவர்களாவார்கள். அத்வைத மத பாஷ்யகாரராகிய ஸ்ரீசங்கராசாரியருடைய சரிதமானது இப்பத்திரிகையில் இதுவரையில் பிரசுரம் செய்யப்பட்டதை நண்பர்கள் படித்திருப்பார்கள். இனி விசிஷ்டாத்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீராமானுஜாசாரியர் சரித்திரத்தைச் சிறிது சிறிதாய்ப் பிரசுரஞ்செய்வோம்.

ஆரியநண்பர்காள்! விசிஷ்டாத்வைத மதஸ்தர்களாகிய வைஷ்ணவர்களின் பிரதான குருவாகிய இம்மஹா புருஷனது சரித்திரத்தை ஸ்ரீ வைஷ்ணவர்களுக் குரிய பாஷை நடையில் எழுதுவதே பொருத்தமுடையது என்றாலும் தமிழ்நாட்டு ஜனங்களெல்லோரும் ஆதரிக்கவேண்டிய இப்பத்திரிகையில் அந்நடையை யுபயோகிப்பது நலமுடையதல்லவென்று பொதுவான தமிழ்நடையில் எழுத முயல்வோம்.

அரியபெரியச் சிறந்த பழைய முதனூற் பலவற்றை மேற்கோளாகக்கொண்டு முன்னோர் முதலாக நம்மாசிரியர் வழியேவந்த உபதேச பரம்பரையால் நாமறிந்தவரையில் சுருக்கமாகக் கூறுகின்றோம். சரித்திரப் போக்கில் எதிர்மதங்களைப்பற்றி சில வார்த்தைகள் தூஷணையாக வருமென்றாலும் பெரியோர்கள் அதையொன்றாக மதியாது குணத்தைக்கொள்வார்களாக.

ஸ்ரீச்யாமதேசிகதிருமலைதாதாசாரியார்.

இன்னும்வரும்.

சிறுபிழை பெருந்துயராதல்.

மூன்று நண்பர்களின் கடிதங்கள்.

1.

மகா-ா-ா-ஸ்ரீ சுகுமாரருக்கு.

சென்னை.

4—5—06.

பிரியமுள்ள சுகுமார!

எங்கள் வீட்டில் ஓர் உறவினர் வெகுகாலமாகப் பிரிந்து நாளது மாதம் பதினான்காம் தேதி வருவதாக எழுதியிருக்கின்றார். அவர் வரவை மேம்படுத்த ஒரு சிறு பாட்டுக்கச்சேரி ஏற்பாடு செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றேன். ஆகையால் நீ தயவு செய்து உன்னிட இனிய குரலில் பாடக்கேட்க ஆவலுடையவளாக இருக்கின்றேன். என் வேண்டுகோளுக்கு என்ன சொல்லுகிறாய்? மறுக்கமாட்டாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு பிரியமுள்ள

சுந்தரி.

2.

மகா-ா-ர்-ஸ்ரீ சுகுமாரருக்கு.

சென்னை.

4—5—06.

பிரியமுள்ள நண்பா!

நான் எந்தக்காலத்திலும் அடைந்திராத துயரத்தை அடைந்திருப்பதனால் நம்மிட பழைய நட்பினை நினைந்து ஒரு சிறிய உபகாரத்தை உன்னிடம் எதிர்பார்க்கிறேன். என்னிட கவுரவமே அழிந்துவிடும்போலக் காண்கிறது—இதுவிஷயத்தை உன்னிடமன்றிப் பின்னர் யாரிடம் உரைப்பேன். உடனே ரூபாய் ஐந்நூறு வேண்

டியிருக்கிறது. தற்காலத்தில் இந்தத்தொகையை உடனே அடைவதற்கு யாதொரு வழியையும் காணேனுதலால் உன்னைக் கேட்கின்றேன். இந்தத்தொகையை எனக்குக் கடனுகச்சிறிது காலம் கொடுப்பாயானுல் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். பழைய சினேகிதத்தை மறவாமல் உபகாரம் செய்வாய் என்று உறுதியாக நம்பியிருக்கும்,

பிரிய நண்பன்

சுந்தரன்.

3.

மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரனுக்கு.

சென்னை.

4—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

நாளது பதினைன்காம் தேதி எங்கள் வீட்டில் ஒரு விருந்து நடக்கப்போகிறது. வெகுகாலத்திற்குமுன் எங்களை விட்டுப்பிரிந்த ஓர் உறவினர் காளிகோட்டத்தினின்று வருகிறார். அவர் வரவைக் கொண்டாட அன்றைய சாயங்காலம் ஒரு பாட்டுக்கச்சேரி ஏற்பாடுசெய்ய உத்தேசித்திருக்கிறேன். ஆகையால் உன்னிட கீதத்தை அன்று கேட்க ஆவலுடையவளாக இருக்கும்,

பிரியமுள்ள

சுந்தரி.

4.

ஸ்ரீ. சுந்தரிக்கு.

சென்னை.

5—5—06.

பிரியமுள்ள சுந்தரி!

உன் வேண்டுகோளுக்கு நான் என்ன மறுமொழி சொல்லப் போகிறேன். உன் இஷ்டப்படி நடப்பதே என் கடமை. அவசியம் அன்று எனக்குத் தெரிந்த அளவு பாடுகிறேன்.

இப்படிக்கு

உன் பிரியமுள்ள

சுந்தரன்.

5.

ஸ்ரீ. சுந்தரனுக்கு.

சென்னை.
5—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

இதுவரையிலும் உன்னிட கடிதத்தைப் போன்றது எவரிடத்திலின்றும் அடைந்திலேன். நீ கோரிய வண்ணம் செய்ய என்னால் முடியாது. உன் சித்தம் என் சட்டமாகுமோ? இதுவிஷயத்தில் ஒருவர்க்கொருவர் கடமைப் படலாகாது. நம்மிட சிநேகத்திற்குக் கேடுவரும். இனி இம்மாதிரி கடிதங்களை எனக்கு எழுதலாகாது,

இப்படிக்கு
உன் பிரியமுள்ள
சுகுமாரன்.

☞ இக்கடிதம் கைபிழையாக ஸ்ரீசுந்தரிக்கு என்று எழுதிய விலாசமுள்ள கடிதப்பையில் வைக்கப்பட்டது.

6.

ஸ்ரீ. சுந்தரிக்கு.

சென்னை.
5—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

நீ விரும்பியவண்ணம் செய்யச் சித்தனாக விருக்கின்றேன். நண்பர் ஒருவர்க்கொருவர் உபகாரம் செய்துகொள்வதுதான் மேன்மை. இதுவிஷயத்தில் சிறிதேனும் மனம் மாறுபாடில்லாமல் நாமிருவருமிருத்தல் வேண்டும். உன் விருப்பத்திற்கு யான் இணங்குதல்தான் என் கடமை. என்னையும் ஒருபொருட்டாக நினைந்து கேட்டதற்கு மிகவும் சந்தோஷமடையும்,

பிரியமுள்ள
சுகுமாரன்.

☞ இக்கடிதம் கைபிழையாக மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரனுக்கு என்று எழுதிய விலாசமுள்ள கடிதப்பையில் வைக்கப்பட்டது.

7.

மகா-ள-ள-ஸ்ரீ சுகுமாரருக்கு.

சென்னை.
7—5—06.

பிரிய நண்பா!

உன் கடிதங்கண்டு யான் மிகவும் சந்தோஷமடைகின்றேன். உன்னைப்போன்ற நட்பாளர் எனக்கு இருக்கும்போது எனக்கு என்ன குறை? நாளையதினம் காலை உன்னைக்காண வருகிறேன். ஸ்ரீசுந்தரி நாளது பதினன்காம் தேதி தன் வீட்டில் என்னைப் பாட வேண்டியிருக்கிருள். நீயும் வருவாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
பிரிய நண்பன்
சுந்தரன்.

8.

மகா-ள-ள-ஸ்ரீ சுந்தரனுக்கு.

சென்னை.
7—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

நாளையதினம் என்னைக்காண வரவேண்டாம். பகல்முழுவதும் வீட்டில் தங்கியிரேன். நான் எழுதியவைகளின் தகுதியான பொருளையறிந்து கொண்டதனுல் மிகவும் சந்தோஷப்படுகிறேன். பணத்தைக்கொடுத்து நட்பினை இழத்தலாகாது என்னும் உண்மையை உனக்குத் தெருட்டும் பொருட்டே அவ்விதம் எழுதினேன். உன் சினேகத்தை இழக்கப்பிரியமில்லாத.

நண்பன்
சுகுமாரன்.

9.

ஸ்ரீ சுந்தரிக்கு.

சென்னை.
8—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

நான் எழுதிய கடிதத்திற்கு என் பதில் எழுதவில்லை. சுந்த

ரன் அன்று பாடப்போவதாய் எனக்குத் தெரிவித்திருக்கிறான்.

பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

உன் பிரியமுள்ள

சுகுமாரன்.

IO.

மகா-ா-ா-ஸ்ரீ சுகுமாரருக்கு.

சென்னை.

8—5—06.

பிரியமுள்ள சுகுமாரரே!

நீர் எழுதிய கடிதம் கிடைத்தது. அக்கடிதத்திற்கு வேறு மறுமொழி எழுதத்திறமை யில்லாத,

சுந்தரி.

II.

ஸ்ரீ சுந்தரிக்கு.

சென்னை.

9—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

நீ எழுதிய கடிதம் என்மீது கோபமுள்ளவளெனத் தெரிவிக்கின்றது. உனக்கு வருத்தமுண்டாகும் வண்ணம் என்ன செய்திருக்கின்றேனே தெரியவில்லை. யான் தெரிந்தும் தெரியாமலும் செய்தபிழையை மன்னிக்கவேண்டும். உன்னிடம் யான் வைத்திருக்கும் பிரியத்தை யோசித்தேனும் புத்திபூர்வமாக ஒன்றும் செய்திரேன் என்று எண்ணி என்னை மன்னிப்பாய். உடனே உன் அழகிய அதரங்களினின்றும் என் குற்றத்தையும் அதன் மன்னிப்பையும் கேட்க விரும்பும்,

உன் காதலன்

சுகுமாரன்.

I2.

மகா-ா-ா-ஸ்ரீ சுகுமாரருக்கு.

சென்னை.

10—5—06.

பிரியமுள்ள நண்பா!

நேற்று உன்னைப் பார்க்கமுடியாமையைப் பற்றி மிகவும் வருத்தப்படுகிறேன். உன் கடிதத்தின் அர்த்தம் ஒன்றும் தெரியவில்லை.

நான் உன்னைக்கேட்ட விஷயத்தைப்பற்றி நேரில் எப்பொழுது வருவது. பதிலை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

இப்படிக்கு
பிரியமுள்ள நண்பன்
சுந்தரன்.

13.

மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரனுக்கு.

சென்னை.
10—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

சிலநாள்களுக்கு உன்னைக் காணமுடியாது. நீ பணம் கேட்டவிஷயத்தைப்பற்றி அதிகமாக நேரில் ஒன்றும் பேசவேண்டியதவசியமில்லை. நான் எழுதும் வரையிலும் என்னைக் காணவேண்டாம்.

இப்படிக்கு
பிரிய நண்பன்
சுகுமாரன்.

14.

மகா-ா-ா-ஸ்ரீ சுகுமாரருக்கு.

சென்னை.
10—5—06.

பிரியமுள்ள சுகுமாரரே!

தோன்றிய விதம் எழுதிப் பிறகு ஒன்றும் அறியாதவரெனப் பாசாங்கு செய்கிறீர். ஏதோ தெரியாமல் உம்மை உபகாரம் செய்ய வேண்டினேன். 'இதுவரையிலும் உன்னிட கடிதத்தைப் போன்றது எவரிடத்தினின்றும் அடைந்திலேன்' 'நீ கோரியவண்ணம் என்னால் செய்யமுடியாது.' 'இனி இம்மாதிரி கடிதங்களை எனக்கு எழுதலாகாது'.

இப்படிக்கு
சுந்தரி.

15.

ஸ்ரீ. சுந்தரிக்கு.

சென்னை.
11—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

நீ எழுதிய கடிதத்தைக் கண்டதும் யான் செய்த பிழை ஒருவாறு தோற்றுகின்றது. அடாதவையைக் கேட்ட ஒரு சிநேகிதனுக்கு எழுதிய பதிலைக் கைபிழையாக உன் விலாசம் எழுதிய கடிதப்பையில் வைத்திருக்கிறேன். என்னுடைய வார்த்தைகளாலேயே எனக்கு மறுமொழி எழுதியிருப்பது தெரிவித்தது. இந்த விஷயத்தின் உண்மையை உணர்ந்து என் மீது கோபத்தை யொழித்து பிரியம் பாராட்ட,

என்றும் விரும்பும்
சுகுமாரன்.

16.

மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரனுக்கு.

சென்னை.
11—5—06.

பிரிய நண்பா!

வேறொருவருக்கென்று எழுதிய கடிதத்தைக் கைபிழையாக உன் விலாசம் எழுதிய கடிதப்பையில் வைத்தனுப்பிவிட்டேன். இந்தத் தவறினால் உன் மனத்திலுண்டாகிய நம்பிக்கையை ஒழிக்கவேண்டும். வீணான நம்பிக்கையை உண்டாக்கியதற்கு வருத்தப்படும்,

உண்மையுள்ள
சுகுமாரன்.

17.

மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரனுக்கு.

சென்னை.
11—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

இத்துடன் அனுப்பிய கடிதம் உனக்கென்று சுகுமாரரால் எழுதப்பட்டதென்று இன்று அவன் கடிதத்தால் அறிகிறேன். நீ கேட்

டது (எதுவோ?) அவன் செய்யமாட்டான் என்பதைப்பற்றி மிகவும் விசனப்படும்,

உன் பிரியமுள்ள
சுந்தரி.

18.

ஸ்ரீ சுந்தரிக்கு

சென்னை
12—5—06.

பிரியமுள்ள சுந்தரி!

சுகுமாரன் எனக்கு எழுதிய கடிதத்தை அனுப்பியதற்கு யான் மிகவும் வந்தனமுடையவனாகவிருக்கிறேன். அது என் கடிதத்திற்குப்பதில். இவ்வளவு தெரிந்ததனால் என் மீது வேறுவிதமான அபிப்பிராயம் நீ கொள்ளாமலிருக்கும்படி யான் சுகுமாரனை வேண்டிய விஷயத்தைத் தெரிவிக்கிறேன். யான் சில தினங்களுக்குக் கடனாக ரூபாய் ஐந்நூறு அவனை வேண்டினேன். நான் செல்வந்தனல்லன் என்பது உனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கலாம். அவன் பணக்காரனானமையால் கேட்டேன். அவன் கொடுத்திருந்தால் சில தினங்களில் திரும்பக் கொடுத்திருப்பேன். இந்த உபகாரம் வேண்டியதற்கு இப்படி எழுதியிருக்கிறான். என் விஷயங்களை உனக்கு எழுதித் தொந்தரை செய்கிறேன். இத்துடன் அவன் உனக்கென்று எழுதிய கடிதத்தை அனுப்புகிறேன்.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள
சுந்தரம்.

19.

மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரனுக்கு.

சென்னை
13—5—06.

பிரியமுள்ள சுந்தரம்!

உன்னுடைய விஷயங்களைக் கேட்க நான் மிகவும் பிரியமுள்ளவளாகவிருக்கிறேன். சுகுமாரன் உனக்குச் செய்யேன் என்றதை வேறு ஒரு நண்பனுக்கு செய்ய யத்தனப்பட்டாய். அவ்வளவே,

அதனால் பிழையில்லை. மற்றைய விஷயங்களை நேரில் நாளைச்சாயங்காலம் நீ பாடவரும்போது பேசுவேன்.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள
சுந்தரி.

20.

மகா-ா-ா-ஸ்ரீ சுகுமாரருக்கு.

சென்னை.
13—5—06.

பிரியமுள்ள சுகுமாரரே!

நீர் எழுதிய கடிதத்திற்கும் வேண்டுகோளுக்கும் அனேக வந்தனம். உன் கடிதங்களின் அர்த்தமும், உன் உண்மையான எண்ணமும் யான் அறியச் சக்தியில்லாதவளாகவிருக்கிறேன். இனி அது விஷயத்தைப்பற்றி நேரிலாவது கடிதத்தின் மூலமாவது தெரிவிக்கவேண்டாம். எவன் தயையுள்ள நண்பனில்லையோ அவன் தயையுள்ள மணமகனாகான் என்பது என்னுடைய துணிபு. நான் மணக்கும் புருஷன் மிகவும் தயையுள்ளவனாகவும் நினைக்கும் வண்ணம் ஒழுகுபவனாகவும் இருக்கவேண்டும். நாளையதினம் உன் உபகாரத்தை எதிர்பார்க்கவில்லை.

இப்படிக்கு
பிரியமுள்ள சோதரி
சுந்தரி.

21

ஸ்ரீ சுந்தரிக்கு.

சென்னை
1—6—06.

என் பிரியமுள்ள கண்மணி சுந்தரிக்கு அனேக முத்தங்கள். உன் கடிதம் எனக்கு அடங்கா மகிழ்ச்சியைத் தந்தது. அன்றைய பாட்டுக் கச்சேரி முதல் சந்தேகமும் சந்தோஷமுமடைந்திருந்தேன். நம்பிக்கையும் பயமும் மாறி மாறி என் மனத்தைக் கொள்ளைகொண்டதனால் என் மனத்தின் எண்ணத்தை வெளித்தோற்றுவிக்க முடியவில்லை. நீ வேறு ஒருவனை விரும்பி இருக்கிறாய் என்று

எண்ணியிருந்தேன். ஆம். சுகுமாரனே. நாங்கள்—புருஷர்கள் எப்பொழுதும் பயங்காளிகள்—ஸ்திரீகள் விஷயத்தில். அனேக நாள் காத்திருந்தேன். கடைசியில் என் எண்ணத்தைத் தெரிவித்தேன். இப்பொழுது உன்னிடம் பறந்து அடைய அவாக்கொள்கிறேன். நாளைக்காலையில் உன்னைக் கட்டி அணைய ஓடிவருகிறேன். இந்த இருபத்தினாலு மணி நேரமும் எனக்கு இருபத்தினான்கு யுகங்களாகத்தானிருக்கும். நேரில் உன் எழிலுடைய அதரங்களினின்றும் மூன்று இனிய மொழிகளைக் கேட்டு பானம் செய்யப்போகிறேன். ஆம். "நான் உன்னை நேசிக்கிறேன்" என்னும் மொழிகளைக்கேட்டு ஆனந்தமடையப்போகும்,

உன் பிரியமுள்ள
சுந்தரன்.

22.

ஸ்ரீ சுந்தரிக்கு.

சென்னை.
15—7—06.

பிரியமுள்ள சுந்தரி!

உன்னுடைய மணத்தைக் கேள்வியுற்ற யான் மிகவும் சந்தோஷமடைகின்றேன். ஆனால் நாமிருவரும் பழைய சினேகிதராகையால் என் மனத்தை வெளிப்படையாகச் சொல்லுகிறேன். சுந்தரனிட அதிர்ஷ்டத்தை யோசித்து யான் மிகவும் பொருமைப்படுகிறேன். நீ பணக்காரனான வேறு எவனையாவது மணந்தால் ஒருவகையான திருப்தி யான் அடைந்திருப்பேன். சுகமாக வாழ்க.

இப்படிக்கு
பிரிய நண்பன்
சுகுமாரன்.

முற்றிற்று.

சருக்கை. இராமசாமி ஐயங்கார் பீ. ஏ.

மைசூர்.

பரப்பளவு.—29,305 சதுரமைல். ஜனத்தொகை.—5,538,482.

வருஷ வரும்படி சுமார் ரூ. 2,16,00,000.

தென்னிந்தியாவில் கிழக்குத் தொடர்ச்சிமலையும் மேற்குத்தொடர்ச்சிமலையும் ஒன்றாய்ச் சேரும் மூலையில் மைசூர்* ராஜ்யமிருக்கின்றது. மேற்கில் பம்பாய் ராஜதானியின் ஓர் பாகமும் குடகு நாடுமிதற்கு எல்லையாக நிற்கின்றன. மற்ற எல்லாப் பக்கங்களிலு மிவ்

---

* மைசூர் என்ற பேர் தலைநகர் பற்றிவந்தது (மைசூர், மகிஷ-ஊர்) எருமையின் தலையோடு கூடிய அசுரனொருவனைச் சாமுண்டிதேவி கொன்றமையின் அந்நகருக்கு மைசூர் என்றும், அத்தேவிக்கு மகிஷாஸுரமர்த்தனியென்றும் பெயரிடப்பட்டன. மைசூர் அரசவம்சத்தின் குலதேவதையாகக்கொண்டாடப்படுபவள் இச்சாமுண்டிதேவியே. மகிஷமண்டலமென்றும், எருமையூரென்றும் வழங்கிவந்த விந்நாட்டுக்குக் கர்ணாடகமென்றும் ஒரு பேருண்டு. (மகம்மதியர்களும் ஆங்கிலேயர்களும் கர்ணாடகமென்றால் தாழ்ந்த பூமியென்று நினைத்து கர்ணாடகமென்று பேர் ஏற்படாத பூமிகளுக்கு கர்ணாடகமென்று பேரிட்டிருக்கின்றனர்).

ஸர். கே. சேஷாத்திரி ஐயர், கே. ஸி. எஸ். ஐ.

விராஜ்யம் சென்னை ராஜதானியால் சூழப்பட்டிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் மேடுபள்ளங்கள் நிரம்பிய விந்நாடு கடல் மட்டத்துக்குமேல் சுமார் 2000—3000 அடி உயரத்திலிருக்கின்றது. ஆங்காங்கு மிகவுன்னதமான மலைச் சிகரங்களாகிய துருக்கங்களில் பண்டைக்காலத்தில் அடங்காமன்னர்கள் கட்டி வாழ்ந்துவந்த அரண்களும் கோட்டைகளுமின்னுமிருக்கின்றன.

மைசூரை ஆள்பவர்களுக்கு "மகாராஜா"க்கவென்று பட்டமுண்டு. அவர்கள் யதுகுலத்து ராஜபுத்திரரெனப் படுகின்றனர். பலவாண்டுகளுக்கு முன்பேயே யிந்நாடு அவர்கள் கைவசத்தி லிருந்ததாகத் தெரியவருகின்றது. ஆனால் புராண வரலாற்றின்படி ஸ்ரீ இராமபிரானுக்கு உதவிசெய்த சுக்கிரீவனுடைய ஆளுகையின் கீழிருந்ததாகவும் தெரிகின்றது. பௌத்தர்கள் கி மு. மூன்றாம் நூற்றாண்டில் இங்கு வந்து குடியேறினர். அவர்க்குப் பிறகு ஜெயினர்வந்து அனேக வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக ஆண்டுவந்தனர் என்பது அவர் கட்டியிருக்கின்ற கோவில்களாலும், மடங்களாலும் விசதமாய்த் தெரியவருகின்றது.

ஜயந்திபுரமென்றும் வைஜயந்திபுரமென்றும் கூறப்படுகிற பனவாஸியைத் தலைநகராகக்கொண்டு கடம்பவமிசத்தவர் மைசூரின் மேல்பாகத்தையாண்டுவந்தனர். சுமார் 700—800 வருஷங்களாகக் கங்க வமிசத்தார் மைசூரின் முழுப்பாகத்தையும் ஆண்டுவந்தனர். அவர்கள் ஜயினமதத்தை மேற்கொண்டவர்கள். இவர்களுக்குப் பிறகு சாளுக்கியர்கள் மைசூரின் வடமேற்கு பாகத்தையும், பம்பாய் ராஜதானியின் சில பாகத்தையும் சேர்த்துப் பலகாலம் ஆண்டனர். இவர் காலமானவுடன் ஹொய்ஸளர் வந்தனர். அவர்களும் நானூறு வருஷகாலம் மிகுந்த

செல்வாக்குடனும் பராக்கிரமத்துடனும் ஆண்டுவர கி. பி. 1310-ம் ஆண்டில் எதிர்த்துவந்த மகம்மதியவீரனை மாலிக்காபூர் என்பவனால் கடைசி ஹொய்ஸளராஜன் சண்டையில் தோல்வியடையவே சிறையிலகப்பட்டான். ஹொய்ஸளரின் தலைநகரான துவாரஸமுத்திரத்தைக் கொள்ளையடித்து நிறைந்த செல்வத்துடன் மாலிக்காபூர் டில்லிக்குப் போய்ச்சேர்ந்தனன். அவன் போனபின் ஹொய்ஸளரின் காலமும் சென்றுவிட்டது. விஜயநகர ராஜ்யம் தலையெடுக்கவே, ஹொய்ஸளர் மறைந்துபோயினர்.

1336-ம் வருஷத்தில் துங்கபத்திரா நதிக்கரையில் வித்தியாரண்ய நகரத்தை ஸ்தாபித்து அதைத் தலைநகராகக்கொண்டு விஜயநகரத்தாராண்டு வந்தனர். இவர்களுக்கு எதிராகப் பீஜப்பூரை மகம்மதியராண்டு வந்தனர். ஆதலாலிவ்விருதிறத்தாருக்கும் சண்டையும் சச்சரவுமாயிருந்த காலம் பல துருக்கவரசர்களெல்லோருமொன்று சேர்ந்து ஒரு விசை விஜயநகர ராஜ்யத்தை எதிர்க்கவெண்ணி 1565-ம்வருஷத்தில் தலைக்கோட்டையென்னுமிடத்தில் சண்டைசெய்தார்கள். இதில் விஜயநகர அரசன் கொலையுண்டுபோக இந்தியசேனை நாலு மூலைகளிலுமோடத் தலைப்பட்டது. உடனே மகம்மதியர்கள் ஓடுகிற சேனையைத் துரத்திக் கண்டதுண்டஞ்செய்ததுமன்றி, விஜய நகரத்தைக் கொள்ளையடித்துச் சொல்லமுடியாத அட்டூழியங்களும் பல செய்தனர். அந்த வம்சத்தவர்களில் ஒருவன் சந்திரகிரியிலும், மற்றொருவன் பெனுகொண்டையிலும் ஆண்டுவந்தனர். அவர்கள் கீழிருந்த குறுநில மன்னரும் பாளையக்காரரும் அவர்களுக்கு விரோதமாகக்கிளம்பினர். இவ்வாறு கிளம்பியவர்களில் மைசூர் அரசனும் ஒருவன்.

தென்தேசத்தில் குடியிருக்கவெண்ணித் துவாரகையினின்றும் புறப்பட்ட யாதவ வீரர்களான விஜயகிருஷ்ண

ரென்போர், மைசூர் நகருக்கு அருகாமையிலுள்ள "ஹடி நாரு" என்னும் ஊருக்கு வந்து அவ்வூரையாள்வோன் சித்தஸ்வாதீன மின்மையால் எங்கேயோ ஓடிவிட்டானென்றும், அவன் வீட்டுப்பெண்ணை, பக்கத்து ஊரான் ஒருவன், இழி குலத்தோன் மணஞ்செய்துகொள்ளக் கேட்கிறுனென்றும் அறிந்தனர். வேண்டாவிருப்புடன் பெண் வீட்டார் சம்மதித்ததை விஜயகிருஷ்ணர் கேட்டு அவர்க்குத் தம்மாலான ஒத்தாசை செய்யவெண்ணி, கல்யாணத்துக்கு வந்திருந்த மணப்பிள்ளையைக்கொன்று அவன் நாட்டையுஞ் ஜயித்து வந்ததின் மேல் மணப்பெண் மிகுந்த குதூகலத்துடன் விஜயனுக்கு மனைவியாயினள். விஜயனும் உடையார் என்னும் பட்டத்துடன் அவ்வூரையாளத் தொடங்கினன். அப்போது அவனுக்குள்ள நிலமெல்லாம் இரண்டு மலைக்கோட்டைகளும் ஐந்தாறு சிறிய கிராமங்களுந்தான். இவ்விஜய உடையாரின் பதினோராவது தலைமுறையிற் பிறந்த பதுராஜ விஜயனென்பான் 1422-ம் வருஷம் வரையிலாண்டனன். அவனுக்குப் பின் ஹரிபெட்டட சாமராஜன், திம்மராஜன், ஆறுவிரல் ஹரிசாமராஜன் என்பவர் முறையேயாண்டனர். இவ்வாறுவிரலரசன் இறந்தவுடன் அவன் மகன் சாமராஜன் பட்டத்துக்கு வந்து 1524-ம் வருஷத்தில் தன்னுடைய ராஜ்யத்தைத் தம் மூன்று குமாரர்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்தனன். இவர்களில் கடைசியானவனை சாமராஜன் (வழுக்கைத்தலை) மைசூரைப் பெற்றுக்கொண்டான். அவனால் தான் அந்நகருக்குப் பழைய பேர் மாறிப் புதுப்பேராகிய "மைசூர்" என்பது வந்தது. விஜயநகர ராஜ்யம் க்ஷீணதசையை யடைந்தபோது மைசூரில் அரசனுயிருந்த இச்சாமராஜன், விஜயநகர ராஜ்யத்துக்குக் கொடுக்க வேண்டிய கப்பத்தொகையைக் கொடுக்காமல் காலம் கழி

த்துவந்தான். அதுமாத்திரமன்றி, கோட்டைகளும் கட்டவாரம்பித்தான். விஜயநகர ராஜ்யப் பிரதிநிதியைச சண்டையிற் தோற்கடித்து முன்னிலும் பதின்மடங்காக பலத்துடன் ஆண்டுவந்தான். அவன் இறந்தபிறகு பெட்டடசாமராஜவுடையார் அரசனாயினன்.

அம்மகன் ஆளச்சக்தியற்றிருந்ததினால் அவன் தம்பியாகிய ராஜவுடையாரைப் பெரியோரரசனாக்கினர். இவன் காலத்தில் தான் ஸ்ரீரங்கப்பட்டணம் இவர் கைக்கு வந்து தலைநகரானது. (தன் முன்னோரெல்லாமனுஷ்டித்து வந்த ஜங்கம மதத்தை கைவிட்டு புதிதாக ஸ்ரீ வைஷ்ணவமதத்தைக் கைக்கொண்டான். தன் கீழிருந்த அரசரெல்லாரையும் அடக்கி ஆண்டு, தன் பலத்தை அதிகரித்துக்கொள்ளவும் ராஜ்யம் பெரியதாயிற்று. அவனுடைய பிள்ளைகளெல்லாம் அவன் இருக்கும்பொழுதே யிறந்துவிட்டமையால், அவன் பேரனான சாமராஜன் அரசனானான். தன் பாட்டனைப்போலவே, ராஜ்யத்தை அதிகரிப்பதிலும், சிற்றரசர்களை அடக்குவதிலுமே கருத்தும் கண்ணுமுடையவனாகி ஆண்டுவந்து 1637-ம் வருஷத்தில் அரசைத் தன் மகனான இம்மடி ராஜனுக்குக் கொடுத்து இறந்தனன். அரசுக்கு வந்து பதினெண் மாதங்களுக்கெல்லாம் இம்மடி ராஜன் விஷத்தினாலிறக்கவும் அக்குலத்தோனான கண்டீரவ நரஸராஜன் அரசனானான். அவன் பீமசேனனைப் போலப் பலம் படைத்தவன். தனக்கு முன்னிருந்தவனை விஷத்தினாற்கொன்றதுபோலத் தன்னையும் கொல்ல நினைந்த அமைச்சனைக்கொன்றுவிட ஆக்ஞாபித்தனன். பீஜப்பூர் அரசன் எதிர்த்து வந்து ஸ்ரீரங்கப்பட்டணத்தைத் தாக்கியபடியால் அவனைச் சண்டையில் முறியடித்தது மாத்திரமன்றி, மதுரையை யாண்டுவந்த நாயகனிடத்திலிருந்தும், மற்றும் சில குறுநில மன்னரிடத்தினின்றும் அ

னேக நிலங்களைக் கவர்ந்துகொண்டான். அவன் நாட்டில் ஒரு தங்கசாலை (Mint) நியமித்துப் பல சீர்திருத்தங்கள் செய்து பராக்கிரமத்துடனுண்டு வந்த கண்டீரவ ராஜனுக்குப் பிள்ளையில்லாமற்போகவே அவனுடைய வம்சத்தாரொருவன் (தொட்டதேவராஜன்) அரசனானான். ராஜ்யம் பெரியதாய்ப்போகவே சுற்றிலுமுள்ளவர்கள் சற்று யோஜிக்கவாரம்பித்தனர். தென்னிந்தியாவில் மகம்மதிய அதிகாரம் பலமாயிருந்தது. மற்றொரு பக்கத்தில் மகாராட்டியர்கள் கிளம்பிக்கொண்டிருந்தார்கள். இந்த இரண்டு நெருப்புக்கும் நடுவே வெந்து கருகிப்போகாமல் மிகவுன்னத ஸ்திதிக்கு வந்தது மிகவும் பாராட்டற்பாலதாம். தொட்டதேவ ராஜனும் தன்னையெதிர்த்து வந்தவர்களையெல்லாம் வென்று அவர் ராஜ்யங்களிலும் சிலவற்றைப்பிடுங்கிக்கொண்டான். இவன் இறந்தது 1672-ம் வருஷத்தில். அவனுக்குப்பின் வந்த சிக்கதேவராஜன் ராஜ்யத்தை முதலில் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்து, தன் கீழிருந்த சிற்றரசர்களையெல்லாம் 'ராஜன்' என்னும் பட்டம் வைத்துக்கொள்ளக்கூடாதென்று மறுத்து விட்டதுமன்றி, தன்னாட்டில் நடக்கும் விஷயங்களனைத்தையுமறிந்து கொள்வதற்குத்தக்கபடி ஒரு தபால் ஏற்பாடு செய்தான். மிகவும் கடுமையான வரிகளைப்போட்டுக் குடிகளைத் தொந்திரவுசெய்தான். தொட்டதேவராஜன் காலத்தில் இவன் சிறையிலிருந்தவிடத்து ஓர் ஜயின வித்துவான் விசாலாக்ஷ பண்டிதன் என்போனிவனுக்குத் துணையாயினன். ஜயினன் சிக்கதேவனுடைய சாமுத்திரிகா லக்ஷணங்களைக் கண்டு அரசனாவானென்றுணர்ந்து, அவ்வாறு அவன் அரசனாகில் தன்னை மந்திரியாகவும் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, சிக்கனும் சம்மதித்தான். இவன் அரசனானதும் ஜயினன் மந்திரியாகி அரசன் மனதை

மாற்றி வைணவ மதத்தினின்றும் ஜயினத்துக்கு கொண்டு வந்ததுமன்றி, அவ்வூரிலிருந்த சங்கமக் குருக்களையெல்லாம் கொல்ல ஏற்பாடும் பண்ணிவிட்டான். நஞ்சங்கோடு என்னுமிடத்துள்ள கோவிலுக்கு வாதத்துக்கு வரும்படி எல்லாச் சங்கமக் குருக்களுக்கும் தெரிவித்தான். சுமார் நானூறு பேர் மாத்திரம் வந்தனர். இதற்கு முன்னமேயே ஒரு பெரிய குழி வெட்டி அதற்கு நான்கு பக்கங்களிலேயும் சுவர்களெழுப்பி, அதற்கு முன்னால் மண்டபங்கள் வரிசையாகக் கட்டுவித்து, சாமர்த்தியசாலிகளான கொலைகாரர்களையும் திட்டப்படுத்தி வைத்திருந்தனன். சங்கமர் போனதும் ஒவ்வொருவராய் அரசனைக் கண்டு வணங்கிவிட்டு, எப்போதும்போல, உள்ளே போய்ச் சாப்பிட்டு வரப்போயினர். ஒவ்வொருவராய் வந்ததும், காத்திருக்கும் கொலைவீரர் முன் வந்தவனைப் பின் வந்தவனுக்குத் தெரியாமல் அதிசிக்கிரமாய்த் தலையை வெட்டி அந்தப் பெரிய குழியில் தள்ளிவிட்டனர். இவ்வாறு சந்தேகத்துக்கு இடமின்றி நானூறு சங்கமரும் இறந்ததும், தன்னுட்டிலுள்ள சங்கம மடங்களையும் கோவில்களையு மிடித்துவிடும்படி அரசன் உத்திரவு அனுப்பினன். இத்துடன் நிற்காமல் அந்த மதத்தை யனுசரிப்பவர்களை யெல்லாம் கொல்லும்படியும் அரசன் ஆணையிட்டான். கலகம் நடந்த இடங்களில் அரசன் சேனையும் ஒத்தாசை செய்தது. இவ்வாறு ஜனங்களைப் பயப்படுத்தித் தனக்குக் கீழ்ப்படுத்தியாண்ட சிக்கதேவன் மொகலாயர்களையும் மகாராஷ்டிரர்களையும் ஜெயித்து, "ஜெமீன்தார்" என்ற பட்டத்துக்குப் பதிலாய் "ராஜன்" என்னும் பட்டமும், தந்தச்சிங்காதனத்தில் உட்கார அதிகாரமும் மொகலாயரிடமிருந்து பெற்றனன். தினந்தோறும், ஆயிர வராகனடங்கிய இரண்டு பைகளைத்தன் கஜானாவில் போட்ட பிறகுதான்

சாப்பிட வாரம்பிக்கும் வழக்கத்தையுடைய சிக்க தேவன் "நவகோடி நாராயணன்" எனப்பேர் பெற்று, அவனுடைய 67வது வயதில் (1704) இறந்தான். 200 வருஷகாலமாய்ச் செழித்தோங்கிய ராஜ்யம் சிக்கதேவன் காலத்துக்குப் பின்பு சீர்குலையத்தலைப்பட்டது. சிக்கதேவன் மகன் கண்டீரவ ராஜன் ஊமையாயும் செவிடாயுமிருந்து சக்தியற்றவனுய் ஆண்டதாகப் பேர்பண்ணி 1713 வருஷத்தில் இறக்க, அவன் மகன் தொட்டகிருஷ்ணராஜனும் தகப்பனைப்போலவே சக்தியில்லாமலிருந்ததினால் துருக்கர்கள் படைபெடுத்துவந்து வெகு காலமாய்ச்சேர்த்து வைத்த திரவியத்தை கொள்ளைகொண்டு சென்றனர். அரச அதிகாரமெல்லாம் மந்திரிகள் (தேவராஜ், நஞ்சராஜ்) கைப்பற்றிக்கொண்டனர். 1731-ம் ஆண்டில் தொட்டகிருஷ்ணனிறக்க சாமராஜனென்பான் ஒருவன் அரசனானன். அவன் துர்மந்திரிகளை விலக்கிவிடவும், தேவராஜ் கலகத்துக்கு ஆரம்பித்து, அரசனில்லாதவேளையில் அரண்மனையைப் பிடித்துக்கொண்டு, சேனையையும் தன் வசப்படுத்திக்கொண்டான். அரசன் திரும்பி வந்ததும், சிறையாக்கப்பட்டு, மனைவியுடன் வாசயோக்கியமல்லாதவொரு ஊர்க்கு அனுப்பப்பட, அங்கு அவர் அன்னகாராதிகள் சரிவர அளிப்பாரின்றி யிறந்தனர்.

பிறகு சிக்ககிருஷ்ண ராஜன் அரசனுக்கப்பட்டான் நஞ்சராஜ் தேவராஜ் இருவருமே ராஜ்யபாரம் வகித்தனர். ஆனால் நஞ்சராஜ் சிறிதுகாலத்துக்கெல்லாமிறக்க, தேவராஜின் தம்பியாகிய மற்றொரு நஞ்சராஜ் அதிகாரத்துக்கு வந்தனன். இந்த நஞ்சராஜின் கீழ்தான் ஒரு துருக்கவீரனிருந்தான். அவன் பெயர் ஹைதர் ஆலி. பஞ்சாப் தேசத்திலிருந்து தெற்கே வந்த மகம்மதுபிலால் என்பவனுடைய பேரனும் படே மகம்மது என்பவனுடைய குமா

ரனுமாகிய ஹைதர் ஆலிக்கு இப்போது சுமார் 30 வயது. 1755-ம் ஆண்டில் தக்ஷிணராஜ பிரதிநிதியாகிய ஸலபட் ஜங் ஸ்ரீரங்கபட்டணத்தை முற்றுகைபோட்டபோது, தேவராஜ் 56,00,000 ரூபாய் கொடுத்துச் சமாதானம்செய்துகொண்டான். அதே மாதிரியாக மகாராட்டியர்கள் 1757-ம் ஆண்டில் ஸ்ரீரங்கபட்டணத்தை முற்றுகைபோட்டபோது நஞ்சராஜ் மைசூர் ராஜ்யத்தில் ஓர் பாகத்தைக்கொடுத்துச் சமாதானமாயினன். தேவராஜ் நஞ்சராஜ் இருவருக்கும் மனஸ்தாபம் அதிகரிக்க, தான் சேகரித்து வைத்திருந்த பொருள்களோடு தேவராஜ் தலைநகரை விட்டுப்போக, நஞ்சராஜே சர்வாதிகாரியாயினன். இவ்வாறு இவ்விருவர்க்குமுள்ள சண்டையை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தவன் ஹைதர் ஆலியே. நஞ்சராஜ் ஹைதர் ஆலிக்கு ராஜ்யத்தில் ஒரு பாகத்தைக் கொடுத்து ஆளச்செய்ய அவனும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலம் சேர்ப்பானாயினன். "படே ஹைதர் பகதூர்" என்னும் பட்டத்துடன் தனது சிறிய ஊரை ஆண்ட ஹைதர் தன் சக்தியைக்காட்ட எண்ணங்கொண்டு, நஞ்சராஜை ஊரை விட்டுத் துரத்தச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். ராஜ்யத்தில் சேனைகளெல்லாம் சம்பளமில்லாமல் கலகத்துக்கு ஆரம்பிக்கும் தருணத்தில் ஹைதர்போய்க் கலகத்தையடக்கி, யிதெல்லாம் நஞ்சராஜினால் வந்த கேடென்று அரசனுக்குச்சொல்லி அவனை ஸ்ரீரங்கபட்டணத்திலிருந்தும் துரத்திவிட்டான். உடனே ஹைதர் பிரதம அதிகாரியானான். ஆனால் அவன் எல்லா அதிகாரத்தையும் வகிக்கவாரம்பித்தது 1670 வருஷத்தில் தான். 1766-ம் ஆண்டில் சிக்ககிருஷ்ண ராஜனிறந்தவுடன், அவன் மகனை ஹைதர் அரசனாக ஒப்புக்கொண்டான். ஆனால், அந்த ராஜகுமாரன் தன் அதிகாரத்தையெல்லாம் தானே வைத்

துக்கொள்ளப் பிரயத்தனப்படுவதைக் கண்ட ஹைதர் உடனே, அரசனுக்கு ஏற்பட்டிருந்த பணத்தைக்கொடுக்காமல் அரண்மனைப் பொருள்களையெல்லாம் கொள்ளையடித்து, அரசனுக்குக் காவலாகத் தன்னுடைய ஆட்களை வைத்தது மாத்திரமன்றி, மறுபடியும் அரசன் எதிர்க்கவாரம்பித்ததும் அவனைக் கொன்றுவிட்டு அவன் தம்பியாகிய சாமராஜனைச் சிங்காதனமேற்றி, எல்லாக்காரியங்களையும் தானே பார்த்துவந்தான். இப்படியிருக்குங்காலத்தில் ஹைதருடைய ஜயவிருத்தியை அடக்கும்படி ஆங்கிலேயர் நிஜாமோடும் மகாராஷ்டிரரோடும் உடன்படிக்கை செய்தார்கள். இதன்மேல் மகாராஷ்டிரர் ஹைதரோடு சண்டைக்கு ஆரம்பஞ்செய்து, அவன் தேசத்தில் படையெடுத்துப் போனார்கள்; ஆனால் அவன் கட்டிய லஞ்சத்தாலே தாங்கள் செய்திருந்த கட்டுப்பாடுகளையெல்லாம் குலைத்து, அவனுடைய சீமையை விட்டுப்போய்விட்டார்கள். பின்பு ஆங்கிலேயரும் நிஜாமும் மைசூர் மத்தியில் வரவே, ஹைதர் நிஜாமுக்குப் பணங்கட்ட இவனும் அவன் பக்கமாகிவிட்டனன். ஆயினும் ஹைதர் போனவிடங்களிலெல்லாம் அபஜயப்பட்டபடியினால் நிஜாம் தான் மறுபடியும் ஆங்கிலேயர் பக்கஞ்சேர்ந்தான். இதனிடையில் ஹைதர் தன் மகன் டிப்புவைச்சென்னபட்டணத்துக்கருகே படையெடுக்கும்படியனுப்ப, அவனும் வீடு வீடாய் நுழைந்து அகப்பட்ட வெல்லாவற்றையுங் கொளுத்திக் கொள்ளையாடி, நிர்மூலம் பண்ணிக்கொண்டு வருகையில் தன் தகப்பன் தோல்வியைக் கேட்டுத் திரும்பிச் சென்றான். கீழ்நாடுகளில் ஹைதருக்கு தோல்வியே மேலிட்டதினால், ஆங்கிலேயரை மனம்போனபடி செய்யும்படி விட்டுவிட்டு, அவன் மேல்கரைச் சீமைகளுக்குப் போய்விட்டான். அவன் போனபின்பு அவனுடைய

தேசத்திலேயே போய்ச் சண்டை செய்கிறதென்று விவேகத்தாழ்ச்சியாய் ஆங்கிலேயர் தீர்மானித்துப் படைகளையு மனுப்ப ஹைதர் திடீரெனத் திரும்பிவந்து கீழ் நாடுகளிலிருந்த நல்ல அரணில்லாத ஒவ்வொரு கோட்டையையும் மீட்டுக்கொண்டு வருவதைப்பார்த்து, ஆங்கிலேயர் சமாதானத்துக்கு விருப்பமுள்ளவர்களானார். ஆனால் ஹைதர் நியாயமாயும் சுலபமாயும் சொன்ன நிபந்தனைகளை யங்கீகரிப்பதற்கு அவர்களுக்கு மனமில்லாதபடியினாலே, ஹைதர் தன் குதிரைப்படையுடன் தீவிரமாய்ச் சென்னைப்பட்டணத்துக்குச் சென்று, ஸெண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு முன் வந்தவுடன் ஆங்கிலேயர் பயந்து அவனோடு உடன்படிக்கை செய்தார்கள். அதன்படி, இந்தயுத்தத்துக்கு முன் அவரவர் வைத்துக்கொண்டிருந்த நாடுகளை அவரவர் வைத்துக்கொள்ளுகிறதென்றும், இனிப்பிறரோடு யுத்தங்கள் நடக்குங்காலத்தில் ஒருவருக்கொருவர் சகாயம் பண்ணிக்கொள்ளுகிறதென்றும் தீர்மானமாயிற்று. உடனே ஹைதருடைய சீமையில் மகாராஷ்டிரர் வரும் சமயமாயிருந்தபடியால் அதைக் காத்துக்கொள்ளும் பொருட்டுப் புறப்பட்டுப்போனான். போனதும் மகாராஷ்டிரர் அளவிறந்த படையுடன் அவனாட்டில் படையெடுக்க, முன் உடன்படிக்கைப்படி ஆங்கிலேயரைத் துணைக்கழைக்க அவர்கள் மறுத்துவிட்டனர். ஆகையால் ஹைதர் தோல்வியடைந்ததுமன்றித் தன் ராஜ்யத்தில் அனேக பாகங்களையும் 25 லக்ஷ ரூபாயையும் மகாராஷ்டிரர்களுக்குக் கொடுக்கும்படி நேரிட்டது. ஆனாலும் உடனே பம்பாயில் மகாராஷ்டிர ராஜ்யத்தில் பேஷ்வாவின் பட்டத்தைக் குறித்து வழக்குகள் உண்டாக, அவைகளைக்கொண்டு தாங்கள் எண்ணிக்கொண்டிருந்த எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு எத்தனித்து மகாராஷ்டிரப் பிரபலவீரர்கள் ஒருவரோடொருவர் சச்சரவு செய்துகொண்டு குழப்பமாயிருந்த சமயத்தில் ஹைதர் தானிழந்த நாடுகளை ஒன்றொன்றாய் மீட்டும் பெற்றுக்கொண்டான். (இன்னும் வரும்.)

பெண்மணி.

சுபமுகூர்த்தம் நிறைவேறிய ராத்திரியில் முகூர்த்தம் நடந்த ராயருடைய கிரகத்திலும் திருக்குடந்தை சம்பந்தி இறங்கியிருந்த விடுதியிலும் பந்துக்களும் சினேகிதர்களும் குஞ்சு குழந்தைகளும் சிறுபெண்களும் பிள்ளைகளும் கைக்குழந்தைக்காரிகளும் வேறு புருஷர்களும் பெண்டுகளும் இருக்கவும் படுக்கவும் இடம் போதாமல் தாழ்வாரத்திலும் பந்தலிலும் கூடத்திலும் அரங்கிலும் சமயலறை உக்கிராண அறைகளிலும் இடைகளிலும் வாயிற்றிண்ணையிலும் சிலர் உட்கார்ந்துகொண்டும் சிலர் படுத்துக்கொண்டும் சிலர் அங்குமிங்கும் தங்கள் குழந்தைகள் ஸம்ஸாரங்களைப் பார்க்கப் போய்க்கொண்டும் இருந்தார்கள்.

சாப்பாட்டு நேரம் ஆனமேல் தூங்குகிறவர்களைச் சிலர் எழுப்பப்போனார்கள். குத்துவிளக்கு எங்கும் ஏற்றினார்கள். சிலர் வாராதபேரைத் தூற்றினார்கள். எல்லோரும் இரண்டு ஜாகைகளிலும் உட்புகுந்தார்கள். அத்தம்பியாரை எழுப்படா, நச்சு நச்சென்று கத்துகிறாய். பெண்டுகள் இன்னும் சாப்பிடவில்லையே. நேரமாய்விட்டதே. குட்டிகளை எல்லாம் எழுப்படா. ஒவ்வொருத்தராய் எத்தனை தரம்போய்க் கூப்பிடுகிறது. வற்றல் பொங்கல் தோசை மாட்டினார்கள், ராத்திரிப் பசியை ஓட்டினார்கள். முத்தண்ணாவைக் கூப்பிடடா. அவர் எழுப்பினாலெழுந்திராரடா. விழித்துக்கொண்டபின் குற்றம் சொல்வாரடா. பத்திரம் தப்பிப்பிழையடா. சேஷன் வாய் சும்மா இருக்குமோ. எப்படித்தான் தருதருக்குமோ. இவ்வளவுபோதும் பிரஸ்தாபம். வந்தவர் சாப்பிட்டுவிட்டுப்போகட்டும். மற்றவர்களுக்கு விடிந்தபின் ஞுறலுமாகட்டும். என்

றிவ்வாறு பலரும் பலபடி பேசியோய்ந்த மேல் இரண்டு ஜாகைகளி லும் சில பெண்டுகள் சில புருஷர்கள் குழந்தைகள் மட்டும் சாப்பி ட்டார்கள். பிறகு இலைகளை எடுத்து எறிந்துவிட்டுச் சுத்திபண்ணி ஜலந்தெளித்தார்கள். தூங்கின பேர்கள் எல்லோரும் அப்புறம் கண்ணை விழித்துக்கொண்டு போய்ப் புசித்தார்கள். நீர்த்துளி தெ ளித்தது கொஞ்சம் உடலிற்பட்ட மேல்தான் கண் கொஞ்சம் திற ந்தது. பிறகு எல்லோரும் களைப்பினால் இருந்த இடங்களிலேயே படுத்துறங்கினார்கள்.

முகூர்த்ததினத்தில் அதிகம் கூட்டம் கூடியதால் அக்கூட்ட த்தில் கைநீண்ட சில பெண்பிள்ளைகளும், சொற்பத்திருட்டில் கை தேர்ந்த சில ஏழைப்பிராமணர்களும், கண்கொட்டாது ஜாமப்போ தில் ஏதோ வைத்ததைத் தேடப்போவதுபோல அங்குமிங்கு மலைந் து லக்குப்பார்த்தார்கள். மூலைமுடுக்குகளிலும் வழிகளின் பக்கத் திலும் அயர்ந்து தூங்கின குழந்தைகளின் அரைநாள் குமிப்பூ கடு க்கன் இவைகளை ஒருவன் கைப்பற்றி ஒரு பழந்துணியில் முடிந்து, தாழ்வாரத்துக் கம்பத்தின்மேல் ஒரு மூலையில் வைத்திருந்தான். கைநீண்டவளோ மாட்டல், பேஸ்திரி, திருகு, மூக்குத்தி, மோதிர ம், சரடு, பீலி, வெள்ளித்தண்டை இவைகளைக் கைப்பற்றி ஒரு பழ ம்புடவைத்துண்டில் முடிந்து முற்றத்தில் கொல்லைக்குப் போகும் சாக்கடை ஓரத்தில் புதைத்துவிட்டாள். இவள் தோழி மற்றொரு த்தி சில்லறை நகைகளைத் தந்திரமாய்க் கழட்டி மடியில் ஒரு தகர டப்பாவில் வைத்துக்கொண்டாள். பொழுதுவிடியவே சிறுவர்களும் பெண்டுகளும் அரைஞாணில்லை குடிமிப்பூவில்லை கடுக்கன் இல்லை என்று கூறவே எங்கும் சத்தங்கிளம்பியது. இது திருக்குடந்தை சம்பந்தி ஜாகையில் நடந்தது. இப்பேச்சு ஐயர் காதில்பட்ட வுட னே, ஜாகையைச்சுற்றிக் காவல் வைத்துவிட்டு உள்ளே தலையாரியு டன் அவர் நுழைந்தார். கிராமாதிகாரி வருகிறாரென்று பயந்து தகரடப்பாவிலிருந்த சில்லறை நகைகளைப் பந்தலில் ஒரு மூலையில் வாழைமரத்தடியில் போட்டுவிட்டு ஒருத்தி உக்கிராண வாசலண் டைபோய் எல்லாருடனும் ஒன்றுந் தெரியாதவள்போல் என்ன போச்சு என்னபோச்சு யார் குழந்தையுடையது காணாமற்போச்சு தென்று ஜாலம்பண்ணினாள். தலையாரி பந்தலைப் பார்த்தவுடனே வாழைமரத்தடியில் சில்லறை நகைகள் இதோ அகப்பட்டதென்

ரன். ராயர் உடனே பார்த்தார். சொந்தக்காரரிடம் உடனே கொடுத்துவிட்டார். நகை அகப்பட்டதென்றபோது தாழ்வாரத்து க்கம்பத்தின் மேலிருந்த முடிச்சை கொஞ்சம் வெளியே தெரியும் படி தள்ளிவைத்துவிட்டு அந்தத் திருடனும் தூரப்போய் விலகிகூட்டத்துள் நுழைந்துகொண்டான். பிறகு தலையாரி நாலாபக்கமும் சுற்றிப்பார்த்ததில் தாழ்வாரத்தில் தூணின்மேலிருந்த முடிச்சு தென்பட்டது. அது ஒரு பழந்துணி முடிச்சு. கரை முதலிய அடையாளமில்லை. யாருடையதென்று சொல்லவகையில்லை. அதையவிழ்த்துத் தலையாரி ராயருக்குக் காட்டினன். ராயர் தலையாரியைக் கொண்டாடினர். நகைக்காரர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் ஒப்புவித்தார். சாக்கடை ஓரத்தில் புதைத்த முடிச்சு பாக்கியிருப்பதால் வேறு சிலபேர்களும் நகை அகப்படவில்லையே யென்று தயங்கினர்கள். ராயர் வாயிற்றிண்ணையில் உட்கார்ந்துகொண்டு எல்லோரையும் பரிசோதித்துக் கொண்டு ஸ்நாநம் செய்து வரும்படி அனுப்பிவிட்டார். தலையாரியைக் கூப்பிட்டு சீக்கிரத்தில் மற்ற நகைகளையும் கண்டுபிடிக்கச் சொன்னர். நகை வீட்டைவிட்டு வெளிப்பட்டிராது நான் கண்டுபிடிக்கிறேனென்றும் அவன் உறுதி சொல்லிவிட்டு அவ்விடத்திலேயே நின்றுகொண்டான். ராயர் நிசிப்போதில் தம்முடைய வீட்டில் தக்க காவல் போட்டு வைத்துத் தாமே இரண்டு மூன்று தரம் கையில் விளக்கு எடுத்துக்கொண்டு சுற்றிப் பார்த்ததால் அங்கே யாதொரு திருட்டும் நடக்கவில்லை. கைநீண்டவளும் கைவரண்டவனும் இரண்டுமுறை அங்கும்போய் முயன்றும் யாதும் சாத்தியப்படவில்லை.

பிறகு கிராமத்தலையாரி சம்பந்தி இறங்கியிருந்த வீட்டின் முற்றத்தில் சாக்கடை ஓரத்தில் மண் கொஞ்சம் சிதறியும் சேறுமேலாடியும் இருந்ததைக் கண்டு சந்தேகித்துக்கொண்டு பக்கத்தில் போகவே கருப்புத்துணியின் நுனி தென்பட்டது. அதைப்பிடித்து இழுக்கவே முடிச்சு அகப்பட்டது. அதைக்கண்ட உடனே ராயருக்குச் சமாசாரம் அனுப்பிவிட்டு உடனே போனன். முடிச்சிலிருந்தவைகளை எடுத்துச் சொந்தக்காரரிடம் ராயர் கொடுத்துவிட்டார். கிராமத்தலையாரிக்குக் கலியாணத்திற்குக் கொடுக்கும் வேஷ்டியோடு சில்லரை நகைகள் ஒன்றும் தப்பாது கண்டுபிடித்ததற்கு ஒரு வேஷ்டி வாங்கிக் கொடுப்பதாகவும் ராயர் வாக்களித்தார். அக்காலத்

திலும் கைநீண்ட சிறு திருட்டுக்காரர்களிருந்தார்களென்பது இதனுல் வெளியாகின்றது.

முகூர்த்தத்தின் அடுத்த நாள் காலையில் ஊஞ்சல் நடந்தது. மாப்பிள்ளையும் பெண்ணும் ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தார்கள். பெண்கள் இருகக்ஷியாக நின்றுகொண்டு போட்டி போட்டுக்கொண்டு பாட்டுப் பாடினுர்கள். இரண்டுபேர் பெண் வாத்தியாரிருந்தார்கள்.

எத்துவெளி ஞானஞானேர் வடந்தொட் டாட்ட
இளிச்சக்கண் ஞானஞானேர் வடந்தொட் டாட்ட
முத்தய்யன் சேஷனுமோர் வடந்தொட் டாட்ட
மூக்கரை ஞானஞானுமோர் வடந்தொட் டாட்ட
அத்தானம்மாஞ்சியுமோர் வடந்தொட் டாட்ட
அம்மானம்மாமியுமோர் வடந்தொட் டாட்ட
வத்தலம் மங்கார்க்கிளைய கொழுந்த னை
மாப்பிள்ளையும் பெண்ணு மிருந்தாடி ரூஞ்சல்.

நன்னியுட னத்தையுமோர் வடந்தொட் டாட்ட
நாத்தனுர் நாணியுமோர் வடந்தொட் டாட்ட
பொன்னுவுங் கோமளியுமொரு வடந்தொட் டாட்ட
பூனைவிழித் தையலுமோர் வடந்தொட் டாட்ட
சின்னியும் பொன்னம்மாளும் வடந்தொட் டாட்ட
சொத்தையார் செல்லமுமோர் வடந்தொட் டாட்ட
மன்னி தங்கைக் கோர்ப்படி குமார ... ... னை
மாப்பிள்ளையும் பெண்ணு மிருந்தாடி ... ... ரூஞ்சல்

இருகக்ஷியாரும் பிறகு வாழியும் லாலியும் பாடி முடிந்தமேல் ஔபாஸனமும் நடந்தது. காலை விளாட்பொங்கற் சாப்பாடான மேல் மத்தியானச் சாப்பாடும் நடந்தது.

பிறகு நலங்கூடலுக்கு (இதை நலங்கிடலென்று கொச்சையாய் வழங்கி வருகின்றுர்கள்) சாமான்கள் ஸேகரிக்கப்பட்டன. சாயங்கால நேரமும் தொடங்கிவிட்டது. பந்தலில் சிறந்த வர்ணப்பட்டுப் பாயை விரித்தார்கள். அப்பளங்களெடுத்து வைத்தார்கள். மஞ்சள் படுத்திய அரிசி அக்ஷதை கொணர்ந்தார்கள். அரைத்த மஞ்ச

ளும், தொடுத்த மலர் மாலைகளும் மஞ்சள்படுத்திய தேங்காய்களும், கண்ணடியும், வேறு தட்டுமுட்டும் கொணர்ந்தார்கள். சந்தன பில்லைகளைச் சேர்த்துக்குழைத்த யோஜனதூரம் மணம் வீசும் சந்தனத்தை வெள்ளிப்பேலாவில் கொண்டுவந்து வைத்தார்கள். இப்படிப் பெண்களெல்லாம் பந்தலில் வந்து கூடினார்கள். இனிமேற் சோபனம் பாடும்பெண்கள் மார்பில் விளங்கும் பொன் கலசங்களோடு குலுக்கிப் பிலுக்கிக்கொண்டு மருமலர் சூடிக்கொண்டும் பட்டாடை பூஷணங்களணிந்து கொண்டும் தோழிமாருடன் குதூகலத்தோடு வந்தார்கள். பந்தலெல்லாம் பரிமளம் வீசியது மாலிகைகள் தெளித்தார்கள். இரு புறத்துப்பெண் வாத்தியாரும் முறைப்படி காலில் மஞ்சள் பூசுவித்த மாலை யணிவித்து தேங்காய்களை உருட்டுவித்து தலைமேலாக அப்பளாங்களை உடைப்பித்துக் கண்ணடி காண்பித்தும் நலங்கு இடுவித்தார்கள்.

நலங்கூடப் பெண்ணை அழைக்கும்போதும் மாப்பிளை வாயினின்றும் பெண்ணையுயர்த்தி தோத்திரம் பண்ணத்தக்க வார்த்தைகளைக் கட்டாயப்படுத்திப் பேசும்படி செய்வதுண்டு. இது இரண்டாவது விவாகமானதாலும் மாப்பிளை சிறுபிள்ளை யில்லையானதாலும் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. கலியாணப் பிள்ளையும் பெண்ணும் பாடல்கள் பாடினார்கள். இதை பத்தியம் சொல்லுதல் என்று வழங்குகின்றார்கள். மாப்பிளை ஸங்கீதத்தில் வல்லவரானதால் அவர் தெலுங்கிற்பாடிய பாடலைக்கேட்டு மயங்காதவர்கள் பந்தலில் ஒருவருமில்லை. கலியாணத்துக்கு வந்துள்ள சிறுபிள்ளை பெண்களுள் விவாகமானவர்களையும் உட்காருவித்து நலங்கிடுவித்தல் பெண்களுக்குள் ஓர் கொண்டாட்டம். அப்படி நான்கு ஐந்து பிள்ளைகளும் பெண்களும் நலங்கிட்டார்கள். பெண்பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு விவாகமாகும்போது நலங்கிட்டுப் பார்த்திருந்தும் பெற்றோர்களுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்று ஆசைமிகுதியால் இந்த வழக்கம் தமிழ்நாட்டிலுண்டாகி இன்னமும் நடைபெறுகின்றது. பிறகு ஔபாசனம் நடந்தமேல் ஊஞ்சலும் நிறைவேறியது அப்போது சம்பந்திமாரேசல்களும் நடந்தன.

இவ்வாறு விவாகக் கொண்டாட்டத்தின் முதலிரண்டு நாள்கள் நடைபெற்றன.

(இன்னும் வரும்).

தி. வெங்கடராம ஐயங்கார்.

ஸ்ரீ விவேகாநந்தஸ்வாமிகள் வங்காளிபாஷையில் செய்திருக்கும் உபந்யாஸத்தின் மோழிபெயர்ப்பு.

அலைவீசியெறியும் அகன்ற நீர்மலிநதிகள்; நதியோரத்திலே நந்தநப்பூஞ் சோலையைப் பழிக்கும் உபவனங்கள்; அவற்றின் கண்ணே அபூர்வமான சிற்பவேலை செய்யப்பெற்று சிறந்து விளங்கும் ஆகாயத்தை யளாவிய ரத்நகசிதமான சலவைக்கல் மாளிகைகள்; அவற்றின் அருகே பக்கத்திலும் எதிர் முகத்திலும் பின்புறத்திலும் இடிந்துவிழும் சுவரும் ஒடிந்து சாயும் கூரையுமுடைய குடிசையின் வரிசைகள்; அவற்றிற்குடியிருக்கும் மெலிந்த உடலோடும் கிழிந்த கந்தையோடும் யுகயுகாந்தரமாக உள்ளத்திலுள்ள சகலவித நல்லாசைகளும் அழிந்து ஏக்கங்கொண்டு வாடிய வதநத்தோடும் விளங்கும் கிழவர் கிழவியர், சிறுவர் சிறுமியர்; இடையிடையே ஒத்த நடையும் உடலும் உடைய ஆடுமாடுகள்; நாற்புறத்தும் அழுக்கும் குப்பையும் நிறைந்த மண்மேடு—இதுவே எமது பரதகண்டத்தின் தற்காலத்திய நிலை.

உப்பரிகையின் பக்கத்திலே இடிந்த குடிசைகள்; தேவாலயத்தின் பக்கத்திலே உயர்ந்த குப்பை மேடுகள்; பட்டுப் பீதாம்பரம் அணிந்து பகட்டாய்த் திரியும் செல்வ்வான்கள் பக்கத்திலே நடந்துசெல்லும் கோவணாண்டிகள்; வயிறு வெடிக்க விலாப்புடைக்கத் தின்று இருமாந்திருக்கும் சீமானைக்கண்டு பசியால் நலிந்த வறியோர் ஒளிகுன்றிய கண்ணைத்திறந்து பார்க்கும் பரிதாபப் பார்வை;—இதுவே எமது ஜந்மபூமி.

வாந்திபேதியின் விபரீதக் கொள்ளைக்கும்; பிளேக் என்னும் பெருவாரி நோயால் உண்டாகும் பிரமாதமான பிராணபத்தக்கும், மலேரியா என்னும் விஷஜ்வரம் ஜநங்களுக்குள் புகுந்து அவர் தம் எலும்பை நொறுக்கி சதைபைச் சூறைபாடிப் புரியும் கொடுமைக்கும், அரைப்பட்டினி, முக்காற்பட்டினி, முழுப்பட்டினியிருப்பதே தமக்கு சகஜ நிலையெனக்கொண்ட தீனர்களின் தௌர்ப்பாக்கியத்துக்கும், இதனிடையே நடுக்கொள்ளையாக வந்த எமஸ்வரூபம் போல் எங்கும் உலாவும் துர்ப்பிக்ஷத்தின் நித்யோற்சவத்துக்கும், மற்றுமுள்ள ரோக சோகங்களுக்கும் பிரதான குருக்ஷேத்ரமோ, அல்லது யௌவநப் பருவத்தின் லக்ஷணங்களாகிய நல்லாசை, நல்லூக்கம், உழைப்பு, விடாமுயற்சி, உற்சாகம், ஆநந்தம் முதலியவையெல்லாம் அழிந்துபோய் அவற்றின் எலும்புகள் மாத்திரமே எங்கும் நிறைந்துள்ள மஹாச்மசாநமோ இது என்று சங்கிக்கும்படியான நிலைமையில் நம்பரதகண்டம் தோன்றுவதையும் அதன் கண்ணே தியானத்திலமர்ந்து மோக்ஷபராயணனாய் விளங்கும் யோகி வீற்றிருப்பதையும்.—ஐரோப்பாவிலிருந்து இத்தேசத்துக்குப் புதிதாய் வரும் பிரயாணி பார்க்கின்றான்.

மாநுடவடிவுந்தங்கிய முப்பதுகோடிப் பிராணிகளான இந்நாட்டினர்—பல்லாயிரம் ஆண்டுகளாக சுயஜாதியர், பிறஜாதியர், சுயமதஸ்தர், பிறமதஸ்தராகிய இவர்களின் காலின் கீழகப்பட்டு அடிபட்டு மிதியுண்டுநசுங்கிய சிரஜீவப்பதூர்கள், அடிமைகளைப்போல் எவ்வித கஷ்டங்களையும் முணுமுணுப்பின்றி பொறுத்துவரும் பேதைகள்: அடிமைகளைப்போலவே ஊக்கங்குன்றியவர், உழைப்பற்றவர், ஆசாஹீநர், இனியேனும் நல்லஸ்திதிக்குவரவேண்டுமென்னும் விருப்பமுமற்றவர், எவ்வித உபாயத்திலாகிலும் தற்சமயம் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளத்தக்க ஜீவநோபாயங் கிடைத்தாற் போது

மென்று கருதும் அற்பசந்தோஷிகள், அடிமைகளுக்குறிய பொறுமைக்குணத்தினர், தம்மவர் உந்நதஸ்திதியிலிருப்பதைக் கண்டு சகியாதவர், இனி மேலான நிலைமைக்கு வருகிறவழி ஒன்றும் காணாது நிராசைகொண்டவர்களைப்போல் சிரத்தையற்றவர், விசுவாசமற்றவர், குள்ளநரிபோல் அற்பகுணமுள்ள சாதுரியத்தால் பிறரை வஞ்சிக்குந் தொழிலையே தமக்கு சகாயமாய்க் கொண்டவர், பொருளீட்டுவதையே பரம புருஷார்த்தமெனக் கொண்டவர், பலிஷ்டர்களின் காலடியை நக்குவோர், தம்மிலும் மெலிந்தவருக்கு எமஸ்வரூபமாயிருப்பவர், வலிகுன்றியவர், ஒளியிழந்தவர், அற்பர்களைப் போல் பயங்கர தேவதைகளையும், பிசாசுகளையும் பூஜிக்கும் மூடபக்தியினர், நல்லொழுக்கமென்னும் முதுகெலும்பற்றவர், தூர்க்கந்தம் வீசும் அழுகிய பிணத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும் புழுக்களைப் போல் பாரதகண்டத்தின் சரீரத்தில் எங்கும் வியாபித்தவர்—இதுவே இங்லீஷ் உத்தியோகஸ்தர் நம்மைப்பற்றிக் கொள்ளும் அபிப்பிராயம்.

மதுபானத்தால் மதங்கொண்டவர், நன்மை தீமை யுணர்ச்சியற்றவர், துஷ்டமிருகங்களைப்போல் பயங்கரத்தோற்றமுள்ளவர், ஸ்திரீகளுக்குத் தொண்டுபூண்டவர், காமோந்மத்தர், கால்முதல் தலைவரை சுராபானத்தின் துர்க்கந்தம் வீசும் மேனியர், ஆசாரஹீநர், சௌசஹீநர், ஜடவாதிகள், ஜடஸஹாயர், வஞ்சனையாலும் வலிமையாலும், உபாயத்தாலும் பரதேசத்தைப் பரதனத்தை அபஹரித்தலையே விரதமாகக்கொண்டவர், பரலோக விசுவாஸஹீநர், தேஹாத்ம வாதிகள், தேஹபோஷணத்தையே முக்கியமாய் நாடியவர், இந்திரிய சுகலோலர்—என்றிவ்வாறு தோன்றும் மேல்நாட்டாரைப் பாரதகண்டவாஸிகள் கேவலம் அசுரரென்றே கருதுகின்றனர்.

மேற்காட்டிய அபிப்பிராயங்கள் உபயபக்ஷத்திலுமுள்ள மதியற்ற மேற்பார்வை மாத்திரமுள்ளவர்களது அபிப்பிராயங்களேயாம். இந்தியாவுக்கு வரும் ஐரோப்பியர் நமது பட்டணங்களில் குளிர்ச்சி பொருந்தியும் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் ஒழுங்காயும் உள்ள ஸ்தலங்களிலே அரண்மனைக் கொப்பான மாளிகைகளிலே வசிப்பவர்களாய், 'நமது நேடிவ்' (சுதேச) வாசஸ்தானத்தைத் தங்கள் தேசமாகிய சீமையிலுள்ள அமராவதியைப் பழித்த அழகுவாய்ந்த நேர்த்தியான நகரங்களுடன் சீர்தூக்கிப் பார்க்கின்றார்கள். இந்

தியர்களுக்குள் எவர்களுடன் அவர்கள் விவகரிக்கின்றார்களோ, அவர்கள் பெரும்பாலும் அவ் ஐரோப்பியரின் கீழ் ஊழியம் செய்யும் உத்தியோகஸ்தரேயாவர். வாஸ்தவமாகவே, துன்பமும் தரித்திரமும் இந்தியாவில் உள்ளனபோல் இவ்வுலகத்தில் வேறெந்நாட்டிலும் இல்லை; அசுத்தமும் குப்பையும் கூளமும் கசுமலமும் எங்குமே நிறைந்திருக்கின்றன. இந்த அசுத்தத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் அற்பத்தனத்துக்கும் நடுவே எவ்வித நன்மையாவது இருக்கக் கூடுமென்றால் அதை ஐரோப்பியர் ஒருகாலும் நம்பமாட்டார்கள்.

ஐரோப்பியரைப் பற்றி நாம் நினைப்பதோ—சௌசமில்லை, ஆசாரமில்லை, கண்டதைத்தின்பதும், லஜ்ஜையின்றி ஸ்திரீகளுடன் கூடிக்குடித்து பால்(நாட்டியங்)களில் கூத்தாடுவதும், வியவஸ்தையின்றி ஸ்திரீகளுடன் கலந்து பழகுவதுமாயுள்ள ஜாதியிலே என்ன சுகுணம் இருக்கப்போகிறது? என்று நாம் கேட்கிறோம்.

இவ்விருகருத்துகளும் வெளித்தோற்றத்தைக்கண்டு சொன்ன கருத்துகளேயன்றி உள்ளூரப்பார்த்து சொன்னவையல்ல. நாம் அயல் நாட்டாரை நம்முடன் கலந்து பழக விடுவதில்லை; அவர்கள் மிலேச்சரென்றிகழ்கின்றோம். அவர்களும் நம்மை அடிமைகளென்றும் கறுப்புப் பயல்களென்றும் இழித்துப் பகைக்கின்றார்கள்.

இவ்வுபய பக்ஷத்திலும் சிறிது உண்மை அவசியம் இருக்கவேண்டும். ஆனால் உள்ளே இருக்கும் வாஸ்தவத்தை உபய பக்ஷத்தாரும் பார்த்தவரல்லர்.

பிரதி மனிதனுக்குள்ளும் சிறப்பு வகையான பாவனையொன்றிருக்கிறது; வெளிக்குத் தோன்றும் மனிதன் அந்தப்பாவனையின் ஆவிர்ப்பாவ மாத்திரமே—அவ்வுள்ளக்கருத்தை விளக்கும் கேவலம் பாஷைபோன்றவனும். அதுபோலவே, பிரதி ஜனஸமூஹத்துக்குள்ளும் ஜாதீய பாவனை ஒன்றிருக்கின்றது. இந்தப் பாவனையானது ஜகத்தின் கார்யத்தை நடத்துகின்றது; ஸம்ஸாரத்தின் க்ஷேமத்துக்கு அத்தியாவசியகமானது. ஒரு மனிதனது க்ஷேமத்திற்கேனும் ஒரு ஜன ஸமூஹத்தின் க்ஷேமத்திற்கேனும் இன்றியமையாத அம்சமாயுள்ள பாவனையின் ஆவசியகம் எப்பொழுது முடிந்துவிடுகின்றதோ, அப்பொழுதே அந்தப் பாவனைக்குக் கொள்கலனாயிருந்த மனிதனும் ஜனஸமூஹமும் நாசமடையவேண்டியவராம். பாதகண்

டவாஸிகளாகிய நம்மை இத்துணைத் துன்பமும் தரித்திரமும், நம்ம வராலும் அயலாராலும் நேரிட்ட கொடுமைகளும் வருத்தியபோதிலும், நாம் இன்னும் உயிர்வாழ்ந்திருப்பதற்குக் காரணம் என்னவெனில், நமக்குள் ஒரு ஜாதீய பாவனை உள்ளது; அது உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு இன்னும் ஆவசியகமாயிருப்பதென்பதேயாம்.

ஐரோப்பியர்களுக்குள்ளும் அவ்விதமான ஒரு ஜாதீயபாவனை இருக்கின்றது, அஃதில்லாவிடில் ஸம்ஸாரம் சரியாய் நடவாது. ஆகையினாலேயே அவர்கள் அவ்வளவு பலமுள்ளவர்களாயிருக்கின்றனர். ஒருவன் தனக்குள்ள எல்லா பலத்தையும் இழந்துவிடுவானாகில், பிறகு ஜீவித்திருக்க முடியுமா? ஜாதி (ஜநஸமூஹம்) என்பது தனி மனிதரின் சமஷ்டியே யன்றோ? ஒரு ஜாதியானது தனக்குள்ள பலத்தையும் சக்தியையும் சுருசுருப்பையும் இழந்து விடுமாகில், அந்த ஜாதி ஜீவித்திருக்குமா? ஆயிரம் ஆண்டுகளாக எத்தனையோ ஆபத்துகள் உண்டாகியும் ஹிந்து ஜாதியானது என் அழிந்துபோகவில்லை. எமது ரீதிநீதிகளும் ஆசாரங்களும் அவ்வளவு கெட்டவையாயின், இதற்குள்ளாகவே நாம் அழிந்து போகாமலிருப்பதேன்? நம்மை நசுக்கிவிட அந்யதேசத்தார்கள் பராமுகமாயிருந்து விட்டார்களோ? பின் என் ஹிந்துக்களெல்லாம் அழிந்து சூந்யமாய்ப் போய்விடவில்லை? நாகரிகமற்ற மற்றை யெத்தனையோ தேசத்தார் அழிந்துபோய்விட வில்லையா? அப்படியே நாமும் என் நசித்துப் போகவில்லை? பாரத பூமியும் நிர்ஜனப் பிரதேசமாகி கொடுங் கானகமாய் என் மாறிவிடவில்லை? அப்பொழுது அந்யதேசத்தார்கள் இந்தியாவில் வந்து குடியேறி நிலைத்துப் போயிருப்பார்களே. அப்படித்தானே யவர்கள் அமெரிகாவிலும் ஆஸ்திரேலியாவிலும் ஆப்ரிகாவிலும் முன் செய்தார்கள், இப்பொழுதும் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்யதேசத்தார்கள் தாமே பலவான்களென்றெண்ணிக் கொள்வது பெரும்பிழையாம்; பரதகண்டத்துக்கும் பலமிருக்கிறதென்றும், அஃதின்னும் ஜீவித்திருப்பதற்குக் காரணம், இவ்வுலகத்தின் நாகரிகநிதிக்கு அது தானம் செய்யவேண்டிய சத்தான வஸ்து அதனிடத்தில் இன்னும் இருக்கிறதென்பதே யென்றும் அவ்வயல் நாட்டார் முதலில் அறியக்கடவர். நம்மவருக்குள்ளும் எவர் ஐரோப்பியரது நடையுடை பாவனைகளை முற்றிலும் அநுசரித்து ஐரோப்பியரையே சதாகாலமும் பிரார்த்தித்து "நாங்

கள் நீசர், நரபசுக்கள்; ஓ ஐரோப்பிய ஜனங்களே! நீங்களே எமக்கு ரக்ஷகர்கள், எங்கள்மீது இரக்கங்கொண்டு, அதோகதியடைந்துவிட்ட எங்களைக் கரையேற்றி விடுங்கள்” என்று கதறுகிறார்களோ, அவர்கள் இதை முக்கியமாய் அறியக்கடவர். மேலும் இந்தியாவுக்கு யேசு வந்துவிட்டாரென்றும் கூக்குரலிட்டுத் திரிபவரும் இதை உணரக்கக்கடவர். அப்பா தம்பீ, ஏசுவும் வரவில்லை, ஜெஹோவாவும் வரவில்லை; அவர்கள் வரப்போகிறதுமில்லை, அவர்கள் இப்பொழுது தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றுவதிலேயே அதிக வேலையாயிருக்கிறார்கள், இந்தியாவுக்கு வர அவர்களுக்கு அவகாசமில்லை. இந்தத் தேசத்திலே அந்தப் பழைய சிவனே இருக்கிறார், முன்னிருந்தக் காளிமாதாவே இன்னும் துஷ்டர்களின் ரத்தபானம் பண்ணிக் கொண்டிருக்கிறாள்; ஆயர் பாடியளித்த செல்வமாகிய வேணுகோபாலனே இன்னும் வேணுகானம் செய்து கொண்டிருக்கிறான். ஒருகால் இந்தப் புராணசிவன் விருஷபாரூடராய், பரத கண்டத்தினின்று புறப்பட்டு ஒருபக்கம் சுமாத்ரா, போர்நியோ, செலிபிஸ், ஆஸ்திரேலியா முதல் அமெரிகா கண்டம் வரையிலும், உடுக்கை யடித்துக்கொண்டு சஞ்சரித்தார்; மற்றொரு பக்கம் திபெத், சைனா, ஜப்பான், ஸைபீரியா முதலான தேசங்களுக்கும் போய் சஞ்சாரம் செய்தார், இன்னும் சஞ்சாரம் செய்கிறார். காளிமாதாவை சீனாவிலும் ஜப்பானிலும் இன்றைக்கும் பூஜிக்கின்றார்கள். காளிமாதாவையே கிறிஸ்துநாதரின் மாதாவாகிய கந்யாமேரி என்ற திருநாமத்தால் கிறிஸ்தவர் ஆராதிக்கின்றனர். இந்தப் பரத கண்டத்தில் அந்தப்பழைய சிவனும், மாதாவான காளிதேவியும், அன்புருவமாகிய ஸ்ரீகிருஷ்ணனுமே எப்பொழுதும் இருப்பர். அவர்கள் ஹிமாலயத்தைப்போல் ஸ்திரமாயும் சாசுவதமாயுமிருக்கிறார்கள். கிறிஸ்த பாதிரிகளாகட்டும், வேறெந்த பாதிரிகள்தான் ஆகட்டும், யார் எவ்வளவு முயன்றாலும் அவர்களை யசைக்கவாவது ஒழிக்கவாவது முடியாது. அவர்களிருப்பது உங்களுக்குப் பிடிக்காவிட்டால், நீங்கள்மஹாராஜராய்ச் செலவுபெற்றுக்கொண்டு போகலாம். சண்டைக்காரர்களாகிய நாலஞ்சும்பருள்ள உங்களுக்காக ஒரு தேசத்திலுள்ள அசேஷ ஜனங்களுக்கும் தம் அருமைப் பெருமையான உத்தம புருஷார்த்தங்களுக்குத் திலதர்ப்பணம் செய்துவிட்டுத்துயருறுவரோ?

ஐரோப்பியர்களை வணங்கி 'நாங்கள் அதோகதி யடைந்துவிட்டோம், அல்பராய்விட்டோம், நீசர்களாய்விட்டோம், இழிஞராய் விட்டோம்' என்று வெட்கமின்றிக் கதறும் நம்மவரைப் பார்த்து நாம் சொல்வதென்னவெனில், "அது வாஸ்தவமாகவே இருக்கலாம், ஏனெனில் நீங்கள் சத்தியவாதிகளென்று சொல்லிக்கொள்ளுகிறபடியால் உங்களிடத்தில் அவநம்பிக்கை கொள்ள எங்களுக்கு நியாயமில்லை. ஆனால் உங்களை யிழித்துக் கூறிக்கொள்ளும் அந்த 'நாம்' என்னும் சொல்லில் இத்தேசத்தார் அனைவரையும் என் கூட்டிக்கொள்ளுகிறீர்கள்? இது என்ன மரியாதை துரைகளே!"

ஒரே ஜாதியாருக்கே ஏகதேசத்தில் உரியவையென்று சொல்லத்தக்க நற்குணங்கள் கிடையாவென்பதை நாம் அறியவேண்டும். சில நற்குணங்கள் ஒரு மனிதனிடத்தில் குறைவாயும் மற்றொருவனிடத்தில் அதிகமாயும் இருப்பதுபோல் ஜாதிகள் விஷயத்திலும் ஒரு ஜாதியினிடத்தில் காணப்படுவதைவிட மற்றொரு ஜாதியினிடத்தில் சில நற்குணங்கள் விசேஷித்திருத்தல் இயல்பே.

நமக்கு மோக்ஷம் உத்தம புருஷார்த்தம். மேல்நாட்டாருக்கோ தர்மமே முக்கிய புருஷார்த்தமாம். நாம் மோக்ஷத்தை விரும்புகின்றோம். அவர்கள் தர்மத்தை விரும்புகின்றனர். இங்கே தர்மம் என்னும் பதத்தை மீமாம்ஸகர் கூறும் பொருளில் உபயோகிக்கின்றோம். தர்மமாவது யாது? இகத்திலேனும் பரத்திலேனும் சுகபோகத்தில் பிரவிர்த்தியை யுண்டாக்குவது எதுவோ அதுவே தர்மமாம். தர்மத்துக்கு மூலம் கர்மம். தர்மமானது மனிதனை இரவும் பகலும் சுகத்தை நாடி உழைக்கும்படித் தூண்டுகிறது. மோக்ஷமாவது யாது? இவ்வுலக சுகமும் அடிமைத்தனம், பரலோக சுகமும் அடிமைத்தனம், என்று எது கற்பிக்கின்றதோ அதுவே மோக்ஷம். பிரகிருதியின் நியமங்களுக்கு இவ்வுலகமும் மேற்பட்டதன்று, மறுமையுலகமும் மேற்பட்டதன்று. இவ்விரண்டுக்குமுள்ள பேதம் என்னவெனில், ஒன்று இருப்புச் சங்கிலி, மற்றது பொன் சங்கிலி,—இவ்வளவுதான் பேதம். அன்றியும் சுகபோகமென்பது எவ்விடத்திலிருந்தபோதிலும் பிரகிருதி நியமங்களுக்குட்பட்டிருப்பதால் அழிவுடைத்தாம்; ஆகவே சாசுவதமானதன்று. ஆதலால் ஒவ்வொருவரும் மோக்ஷத்தை அடைய முயலவேண்டும்; தேகபந்தத்தைக் கடந்து செல்லவேண்டும். அடிமைத்தனம் சரிப்படாது.

இந்த மோக்ஷமார்க்கம் கேவலம் பரதகண்டத்தில் உள்ளதேயன்றி வேறு நாடுகளில் கிடையாது. ஆதலால், "முக்தபுருஷர்கள் பரத கண்டத்தில் தான் இருக்கிறார்கள், வேறு தேசங்களில் இல்லை" என்று சொல்லுவது சரியேயாம். ஆனால் இனிமேல் வேறு நாடுகளிலும் உண்டாவார்கள். அது நமக்குச் சந்தோஷமே. பரதகண்டத்தில் முற்காலத்திலே தர்மமும் மோக்ஷமும் சமாஸமாய் இருந்து வந்தன. யுதிஷ்டிரன், அர்ஜுனன், துர்யோதநன், பீஷ்மன், கர்ணன் முதலிய தர்ம பராயணர்களுடன் வியாஸர், சுகர், ஜனகர் முதலிய மோக்ஷபராயணரும் இருந்தனர். பௌத்தமதம் ஏற்பட்டதும், தர்மம் அடியோடு அநாதரவு செய்யப்பட்டு, மோக்ஷமே முக்கியமாய்விட்டது. ஆனதுபற்றியே அக்நிபுராணமும் கயாசுரனென்பான்—அதாவது புத்தன்—அனைவருக்கும் மோக்ஷமார்க்கத்தைக்காட்டி உலகத்தை நாசம் செய்யத்தொடங்கினனென்றும், அதையுணர்ந்த தேவர்கள் ஒன்றுகூடி யாலோசித்து அவனை உபாயத்தால் நிரந்தரமாகச் சாந்தப்படுத்திவிட்டார்களென்றும் உருவக வகையில்கூறியது. அஃது எப்படியாயினும் ஆகுக. நமது தேசம் துர்க்கதியடைந்துவிட்டதென்று அனைவரும் பலகாலும் கூறிவருகின்றனரல்லவா? அதற்குக் காரணம் இந்தத்தர்மத்தின் சுபாவமேயாம். தேசமுழுவதும் மோக்ஷமார்க்கத்தை உள்ளபடியே அநுசரிப்பதாயிருந்தால் சரிதான்; ஆனால் அது சாத்தியமா? இல்லையே. போகமில்லாமல் தியாகம் ஒருபோதும் உண்டாகாது. முதலில் போகி, பிறகு தியாகி, முன்னால் காமி, பின்னால் மோக்ஷகாமி. அப்படிக்கின்றி உலக முழுவதும் ஒரே கணக்காய் திடீரென்று சந்நியாஸம் வாங்கிக்கொண்டால், இன்றுள்ள களாக்காயும் போய்விடுகிறது, நாளைய பலாக்காயும் வந்தபாடில்லை. பிறகு உள்ளதும் போச்சடா நொள்ளைக்கண்ணா என்ற கதையாகவல்லவோ முடியும்? பௌத்த ராஜ்யத்தில், ஒவ்வொரு மடத்திலும் லக்ஷக்கணக்கான ஸந்நியாஸிகள் கூடியிருந்தனரென்றால், நாடு முழுவதும் நாசமடைய நமன் வாயில் விழுந்துவிட்டதென்பதற்கு வேறென்ன வேண்டும். பௌத்தரும், கிறிஸ்தவர்களும், முஹம்மதியர்களும் ஒரே மாதிரியான விதியை எல்லோருக்கும் ஏற்படுத்துகிறார்கள். இது பெருந்தவறு. அவரவர்களின் ஜாதி, பிரகிருதி முதலிய வேற்றுமைகளையொட்டி கல்வி, வியவஹாரம், பழக்க வழக்கங்கள், விதிநியமங்கள்

முதலியன வெவ்வேறு ஜனங்களுக்கும் ஜாதிகளுக்கும் வெவ்வேறாகவே இருத்தல்வேண்டும். அவர்களெல்லோரையும் நிர்ப்பந்தத்தால் ஒரே தன்மையராய் ஆக்கிவிட முடியுமோ? "மோக்ஷத்தைவிடச் சிறந்தது வேறொன்றுங் கிடையாது, ஆசையால் ஒருவர் தப்பாமல் எல்லாரும் அதை அடைய வாருங்கள்" என்று பௌத்தர் சொல்லினர். ஆமாம், அது சாத்தியமானதா? "நீ கிருஹஸ்தன், உனக்கு அந்த சங்கதிகளின் ஜோலி ஒன்றும் வேண்டாம், உன் ஸ்வதர்மத்தை நீ அநுஷ்டி" என்று வேதசாஸ்திரங்கள் உபதேசிக்கின்றன. வாஸ்தவந்தானே அது. அது யுக்திக்குப் பொருந்துமா? உன்னுடைய குடும்பத்தையே போஷிக்க உன்னால் முடியவில்லை, பத்து பேருடன் கலந்து ஒரு சாமந்யமான உபகாரம் செய்யமுடியாது. நீயா மோக்ஷம் வேண்டுமென்று பறக்கிறாய்?

வேத சாஸ்திரங்கள் சொல்வதைக் கேள். "தர்மத்தை விட மோக்ஷம் எவ்வளவோ சிறந்ததென்பதற்கு சந்தேகமே கிடையாது. ஆனால் முதலில் தர்மத்தைச் செய்யவேண்டும்." பௌத்தர்கள் அந்தவிடத்தில் தான் ஏமாந்துபோய் இப்பொழுதுள்ள இவ்வெல்லா உத்பாதத்தையும் உண்டாக்கிவிட்டனர். அஹிம்ஸை நல்லது தான், நிர்வைரம் என்பதும் உயர்ந்த வார்த்தை தான்; இவையெல்லாம் உத்தமந்தான். ஆனால் சாஸ்திரம் சொல்வதென்னவெனில், "நீயோ கிருஹஸ்தன், உன்னை ஒரு அடி அடிக்க வந்தவனைப் பத்து அடி அடித்து துரத்திவிட்டால், நீ பாபம் செய்தவனாகிறாய்" என்பதே. "ஒருவன் உன்னைக் கொல்ல வரும்போது, அவன் பிராமணனாயிருந்தாலும் அவனைக் கொல்வதில் பாபமில்லை."

आततायिनमुयन्तम् ।

என்று மநு கூறுகின்றார். இது அவ்வளவு உண்மையானது. இதை ஒருகாலும் மறக்கவொண்ணாது. 'वीरभोग्यावसुन्धरा' 'வீரபோக்யாவஸுந்தரா' வீரர்களே உலகத்தை அநுபவிப்போர் என்றிருப்பதால், உங்கள் வீரத்தன்மையை வெளிப்படுத்துங்கள். ஸாம, தான, பேத தண்டமென்னும் சதுர்வித நீதிகளையும் பிரகாசப்படுத்திப் பூமியை அநுபவியுங்கள். அப்பொழுது தான் நீங்கள் தார்மிகர் ஆவீர். இல்லாவிடில் உங்கள் ஜன்மம் பயனற்றது; மானமற்றது. கண்டவர் காலிலும் மிதியுண்டு உதையுண்டு பிழைப்

பதும் ஒரு பிழைப்பா ? அப்படிப்பட்டவருக்கு இஹலோகத்திலும்
நரகம் பரலோகமும் நரக போகந்தான். இது தான் சாஸ்திரத்
தின் அபிப்பிராயம். உன் ஸ்வதர்மத்தைச் செய்யப்பா துரையே,—
இது தான் சத்தியம், சத்தியம், பரமசத்தியம். அந்யாயம் செய்ய
வேண்டாம், அக்கிரமம் செய்யவேண்டாம். உன்னால் சாத்திய
மான வரைக்கும் பரோபகாரம் செய். ஆனால் ஒருவன் செய்யும்
அந்யாயத்தைத் தடுக்காமல் பொறுமையாய் ஸஹித்திருப்பது கிரு
ஹஸ்தனுக்குப் பெரும் பாதகமாம். அவன் உடனுக்குடனே பழிக்
குப்பழி வாங்கவேண்டும். அவன் அதிக உற்சாகத்துடன் பொருள்
சம்பாதித்துத் தன் குடும்பத்தையும் தன்னைச்சேர்ந்த பந்து ஜனங்க
ளையும் ஸம்ரக்ஷித்துத் தன்னாலான நன்மையைப் பத்து பேருக்குச்
செய்யவேண்டும் அவ்வளவு மாத்திரம் செய்யாவிட்டால், நீ ஒரு
மனுஷனா? கிருஹஸ்தாசிரமத்துக்குக் கூட உனக்கு யோக்கியதை
யில்லையே,—மோக்ஷம் எங்கே உனக்கு வரப்போகிறது ?

தர்மத்துக்கு மூலம் கர்மம் என்று அடியில் சொன்னோமல்
லவா ? சதா கருமத்தில் கண்ணாயிருப்பதே தார்மிகனது லக்ஷணம்.
சில மீமாம்ஸகர்களது மதத்தின்படி, வேதத்தில் எவ்வெவ்விடங்க
ளில் கர்மத்தைச் செய்யும்படி விதிக்கப்படவில்லையோ. அவ்விடங்க
ளெல்லாம் வேதமல்லவென்பதே சித்தாந்தம். "आम्नायस्य क्रियार्थ-
त्वात् आनर्थक्यं अतदर्थानाम्" "வேதத்தின் தாற்பரியம் கிரியையான
மையின், கிரியையன்றிப் பேசாத வேதபாகங்கள் வேதமாகா"
என்றொரு ஜைமினி ஸூத்ரம் பிறந்திருக்கிறது.

இன்னும் வரும்.

கம்பன்.

அவரது சமயம்.

நம்புலவர் பெருமானைச் 'சைவர்' என்று சைவர்களும், 'வைஷ்ணவர்' என்று வைஷ்ணவர்களும் சாதிப்பர். இவர்கள் தாவாவைத் தீர்ப்பான் நிற்போன் அதலிறங்க அஞ்சி, அரனையும் அரியையும் ஒப்ப நினைக்கும் 'அத்வைதி' என்பன்போலும். இவர்கள் கூற்றில் உண்டான சாதக பாதகங்களை எடுத்துப் பார்க்குமுன்னர், இவ்வீண் காலக்ஷேபம் யாதுபற்றி என்று கேட்பீர். அவர் எம்மதத்தைச் சேர்ந்தவராயினும், எடுத்தக்கொண்ட நூலை ஒப்புயர்வின்றி அழகுகள் அலங்காரங்களுக்கு அளவின்றி மனுஷ்ய எத்தனத்தினால் கிட்ட நெருங்கவும் அஞ்சும்படிக்கு எழுதியுள்ளதை யார்தான் மறுக்கக்கூடும்? அவரது திவ்ய நூலைப்படித்து ஆனந்தமனுபவிக்க விரும்புவோன் அவரது மதக்கோட்பாட்டையும் வருணாசிரம தருமத்தையும் கவனிப்பனோ? நாமெல்லோரும் ஷேக்ஸ்பியரது நாடகங்களிலும், காளிதாஸனது சாகுந்தளத்திலும் ஈடுபடவும் முறையே அவரது சமயமும் வருணாச்சிரம தருமங்களுந்தான் உதவிக்கு நிற்கின்றனவோ அறிகிலேம். காளிதாசன் சுத்த சைவனாகவிருந்தாலும் அவனது திவ்ய நூல்களைப்படியாத ஸ்ரீ வைஷ்ணவர்களும் உளரோ? ஈடுபடாதவரும் உளரோ? திருக்குறள், பஞ்சகா

வ்யங்களைச் சகல மதஸ்தர்களும் ஆராதிக்கவில்லையா? திருவாசகத்தை டாக்டர்போப் எவ்வளவுஸ்தோத்தரிக்கிறார் பாருங்கள். ஆனது பற்றியேவிஷ்ணுவினிடம் பரம க்ஷாத்திரத்தையுடைய சுத்த சைவர்களும் இராமாயாணத்தில் ஈடுபடுகிறார்கள். அது கம்பனது மதத்திற்கன்று; வைஷ்ணவத்திற்கன்று; அந்நூலின் அழகுக்கே என்பதை அறியாதார் அறியாதார். ஆதலின் ஒருவரது கிரந்தங்களைப்படித்து ரஸிக்க அவரது மத விசாரணை வேண்டற்பாலதன்றென்று புலப்படும். அது நமது முன்வந்து அந்நூல்களைப் படிப்பதற்குத் தடையாயிருத்தலும் உசிதமன்று; இருந்தாலும் கம்பரைப்பற்றிக் கூறுவோர் அவரது சமயத்தைப்பற்றியும் இரண்டொன்று கூறுவதைச் சம்பிரதாயமாகவுடையர். ஆனதுபற்றி யாமும் சிறிதுகூறிப் போவோம்.

நம்புலவர் பெருமானைச் சைவர் என்றும் வைஷ்ணவர் என்றும் அத்வைதி என்றும் சாதிப்போர் தங்கள் தங்கள் கூற்றுக்குக் காரணமாய்ச் சிற்சில ஆதாரங்கள் காட்டுவர். சைவர்கள், அவரது பெயரும் அவரது குமாரரான அம்பிகாபதியின் பெயரும் சுத்த ஸாத்வீக ஸ்வரூபமான பரமசிவனது நாமதேயங்களாயிருக்கின்றனவன்றோ என்றும், அவரது குமாரர் சைவராயிருந்தது யாவருக்கும் தெரிந்திருந்தது என்றும், வைஷ்ணவர்கள் 'சடகோபரந்தாதி' பாடினகாரணம்பற்றி 'வைஷ்ணவர்' என்று சொல்வது பிசகு என்றும், அந்நூல் அவர்களது கட்டாயத்திற்காகப் பாடப்பட்டது என்றும் ஆதாரமும் சமாதானமும் சொல்வர்.

ஸ்ரீ வைஷ்ணவர்களோ என்றால், ஸ்ரீ வைஷ்ணவகுரு பரம்பரையிற் பிரதம ஆசாரியரான நம்மாழ்வாரைத் தனக்குக் குலதெய்வமாகவும், பரம ஆசாரியனாகவும் வைத்துக்கொண்டு அவரது திவ்யப் பிரபந்தத்தைத் தெளி

ந்து தெரிந்து ஈடுபட்டு அதனின்றும் தனது புத்தியாகிய மந்தரத்தில் பக்தியாகிய வாஸுகியைச் சுற்றி, விசிஷ்டாத்வைதமாகிய அமிர்தத்தைக் கடைந்தெடுத்து, ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய தங்களுக்கும் இவ்வுலகுக்கும் வித்தியா ஸமன்னியிற் கொடுத்துப் போந்த வள்ளலில் வள்ளல் என்றும், இவைகளுக்கெல்லாம் சான்றாக அவரது சடகோபரந்தாதியே தன்னந் தனியாக நிற்குமென்றும், தமிழ்ப்பாவின் லக்ஷணந் தெரிந்த ஒருவனும் அத்திவ்ய நூல் கட்டாயத்திற்காகப் பாடப்பட்டது என்று கூறத்துணியான் என்றும், இராமாயணத்தில் எடுத்தாண்டுள்ளப் பட்டவைகளில் பெரும்பாலும் திருவாய்மொழியே தென்படுதலின் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய கிரந்தங்களில் முக்கியமான அதைத் தன் சம்பிரதாயத்திற் கேற்பப் படித்துத் தேறினர் என்றும், ஆனதுபற்றியே தன்னையறியாதே திருவாய்மொழியின் சாரம் பூராவையும் ராமாயணத்தில் முக்கிய ஸ்தோத்திரப் பாக்களில் பொதிந்து வைத்திருக்கின்றனர் என்றும், வைஷ்ணவரல்லா திருப்பின் பகவதடியார்களான ஆழ்வாராசாரியர்களை ஸ்தோத்தரித்தல் எக்காரணம் பற்றி என்றும், அவ்வாழ்வார்களிற் பிரதானரான நம்மாழ்வாரை இராமாயணத்தின் முதற் கடவுள் வாழ்த்தில்

'தருகை நீண்ட தயரதன்றான் றரும்
இருகை வேழத்திராகவன் றன் கதை
திருகை வேலைத்தரை மிசைச்செப்பிடக்
குருகை நாதன் குரை கழல் காப்பதே,

என்றும், சிறிய திருவடியை ஆதியிலேயே

அஞ்சிலே யொன்று பெற்றானஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக வாரியர்க்காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்றவணங்கைக் கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தானவனெம்மையளித்துக் காப்பான்

என்றும், வைஷ்ணவருக்கு உத்தேசியரான அனந்த கருட விஷ்வக்ஸேனர் என்ற வைகுந்தபக்தர்களில் ஒருவரான பெரிய திருவடியை 'என்னை யாளுடையவன்' என்றும் அச்சம்பிரதாயத்தில் தமக்குள்ள சம்பந்தம் தோன்றக் கூறுவரோ என்றும், இராமாயணத்தில் அங்கங்கே ராமஸ்தோத்திரம் வருங்காலை ராமபிரானை 'ஆரா வமுதாயலை கடலிற் கண்வளரு, நாராயணனுடன்' என்று சேர்த்து

"உன்னவார் பெருந்தெய்வமுயர்ந்துளோ ரொழுக்கன்றே"

என்றும்

பனிநின்ற பெரும்பிறவிக் கடல் கடக்கும்படி பற்றி
நனி நின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனி நின்ற தத்துவத்தின்றகை மூர்த்தி நீயாகின்
இனி நின்ற முதற்றேவரென்கொண்டென் செய்வாரே.

என்றும்,

காரணங் கேட்டியாயின் கடையிலாமறையின் கண்ணும்
ஆரணங்காட்டமாட்டா வறிவினுக்கறிவுமன்னோன்
போரணங்கிடங்கர் கௌவப்போது நின்றமுதலேயென்ற
வாரணங்காக்கவந்தான் மரரைச்சாக்க வந்தான்.

என்றும், திருமூர்த்தி சுரூபமானபரப்பிரம்மமும் இவனே என்று பொருள்படும்படி

மூலமு நடுவு மீறுமில்லதோர்மும் மைத்தாய
காலமுங்கணக்கு நீத்தகாரணன் கைவிலேந்திச்
சூலமுந்திகிரி சங்குங் கரகமுந்துறந்து தொல்லை
ஆலமுமலரும் வெள்ளிப்பொருப்பும் விட்டயோத்திவந்தான்.

என்றும், மீட்சிப்படலத்தின்கண் சதுர்மறையோன் கூற்றாக.

என்னுருக் கொண்டிவ்வுலகினைப் பூணுதியிடையே
யுன்னுருக்கொண்டு புகுந்து நின்றேம் புதியுமையோன்
றன்னுருக்கொண்டு துடைத்தி மற்றிது தனியருக்கன்
முன்னுருக்கொண்டு பகற்செயும் தாத்தத முதலோய்.

என்றும்,

ஈன்றவனே வெப்பொருளும் எல்லை தீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் றனிப்பயனே
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி யிருவினையேன் சாபத்திடர் துடைத்தாய்

என்றும்,

ஆதிப் பிரமனும் நீ யாதிப்பரமனும் நீ
கெதியொருபொருளுக் கப்பாலுண்டாகிலும் நீ
சோதிச் சுடர்ப்பிழப்பும் நீ யென்றுசொல்லுகின்ற
வேதமுறை செய்தால் வேள்காரோ வேறுள்ளார்.

என்றும், இவனது அவதாரங்களும் பிறவுமே ஈசுவரன் பிரமா முதலியோர் என்றும்

"அம்போருகினாரனாறியார்
எம்போலிய ரெண்ணடினென் பலவாங்
கொம்போடடை பூக்கனி காயெனினும்
வம்போ மரமொன்றெனும் வாசகமே"

என்றும், அம்மூவர்க்குள் முதல்வனாகிய தன்மையைக் குறிக்குமிடத்து, இராவணன் வதத்தின் பின்னர் விபீஷணன் ழ்வான் கூற்றாக.

"மன்றன் மாமலரோனும் வடிமழுவாட் படையோனும், வரங்க [ளீய்ந்த
வொன்றலாதனவுடைய முடியோடும் பொடியாகி யுதிர்ந்துபோன
வன்று தானுணர்ந்திலையே யானலும் வானட்டையனுகா நின்ற
வின்று தானுணர்ந்தனையே யிராமனரி யாவருக்கு மிறைவனா [தல்."

என்றும், க்ஷீராப்தியில் அரக்கர் கொடுமையைப்பற்றிக் கூறுங்காலை, சிவபிரான் தேவர்களுடன் பகவானை அடிபணிந்தனர் என்றும், அப்பிரான்வாயாலேயே பன்னிடை மீட்சிப் படலத்தின்கண்

THE GRAMOPHONE.

கிராமோபோன்.

பேசும் பாடும் யந்திரங்கள் பல மாதிரி உண்டு, ஆனால்

"**கிராமோபோன்**" என்னும் பேர்கொண்ட ஒரு யந்திரமட்டுமே— மற்றைவைகளைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தது மட்டுமல்லாமல்; தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் சமஸ்கிருதம் முதலிய அநேக இனிமையான இராகங்களுள்ள பலகைகள், தென் இந்தியாவிலுள்ள பேர்போன பாகவதர்களாலும், தாசிகளாலும்பாடப்பட்டு, அடியிற்கண்ட மேல்விலாசத்திற்கு வந்திருக்கிறது.

கிராமோபோன் யந்திரம், யாவரும் வாங்கிபாடக் கேட்டு சந்தோஷமடையக்கூடியதாய், பல விலைகளிலும் இவ்விடத்தில் அகப்படும்.

No. 5 கிராமோபோன் புதியமாதிரி ரூபா 89—4—0

☞ காட்லாக்குகளுக்குப், விவரங்களுக்கும் அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜே. எச். பார்க்கர்,

199. மௌண்ட்ரோட்,

மதராஸ்.

கிராமொபோன்.

பாட்டுப்பலகைகள்.

அநேகம் உண்டு. எல்லாவற்றையும்
இங்கே சொல்லமுடியாது.

அவற்றில் சிலது:—

சேலம் கோதாவரி.

அருமருந்தோரு
இது நான்வரயின்னும்
வஞ்சியுன் மேல்
அறியானே—தேவாரம்
எப்போதுலேயும்

சேலம் பாப்பா.

கண்மணியே என்சாமி
இதைவிட இன்னும்

காஞ்சிபுரம்தனக்கோடி

மோகப்பகட்டுக்காரி
இஞ்னமுதுகனிபாகு
கற்கண்டு

சேலம்
அம்மாக்கண்ணு

என்னடிமெத்த
அப்பனே பழனியப்பனே

விகடகவி.

ரெயில்வண்டி
பட்டணத்துஜட்காவண்டி
க்காரன் சண்டை

இன்னும் அநேகம். கேட்லாக்குகளுக்கு அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜெ. எச். பார்க்கர்,
199 மௌண்ட் ரோட்,
மதராஸ்.

'உன்னை நீ யொன்று முணர்ந்திலை யாலுரவோய்
முன்னை யாதியாமூர்த்தி நீ மூவகையுலகின்
அன்னை சீதையாமாது நின்மார் பின் வந்தடைந்தாள்"

என்றும், பரதாழ்வான் கோசலையிடம் ஆருது கட்டுரை சொல்லுங்காலை

"தழைத்த தண்துளவி னேன் தலைவன் அல்லன்
என்றழைத்தவன்"
"நண்ணுமத்தீ யெரி நரகத்துக்கடிது செல்கயான்"

என்றும், தேவாதிதேவன் ஸ்ரீமந்நாராயணனல்லன் என்று கூறுவோர் ரௌரவாதி நரகங்களுக்குரியர் என்றும்,

நாகபாசபடலத்தில் பெரியதிருவடி ஸ்தோத்திரமாக

உன்னைக்க வைத்தவிருவர்க்கு மொத்தி யொருவர்க்கு
[முண்மையுரையாய்
முன்னைக்க நிற்றி யுலகொக்க வொத்தி முடிவொக்கி
[னென்றமுடியாய்
என்னைக்கு மின்ன செயலோ விதென்னிலிரு ளொக்கு
[மென்றவிடியாய்
அந்நொப்பமே கொல் பிறிதேகொலா ரிவ்விதிரேகமாயையறிவார்.

என்றும், திருவஷ்டாக்ஷர மகிமையைக் கூறுமிடத்து, திருமங்கையாழ்வார் "கண்டு கொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்று மகுடம் வைத்துப் பாடியருளிய பாடலின் சாயல்களை ஒருங்கே யமைத்து

"காமம் யாவதுந் தருவதுமப் பதங்கடந்தாற்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓம வேள்வி யினுறு பதமுய்ப்பது மொருவ
னம மன்னது கேண்மோ நாராயணாய"

என்றும், தன் அபிமானம் முன் பிடித்துந்தக் கூறிப் போந்தவைகள் கணக்கி லடங்குமோ என்றும், வேறொருவருக்கும் "ஆதிமூலம்" என்ற சப்தம் பொருந்காது இப்பிரானுக்கே பொருந்தி நின்ற அழகை நோக்கி,

கடுத்த கராங்கதப நிமிர்கை யெடுத்து மெய்கலங்கி
உடுத்த திசையனைத்திலுஞ் சென்ருேலி கொள்ளவுறுதுயரால்
அடுத்த பெருந்தனி மூலத்தரும் பரமே பரமே யென்
றெடுத் தொருவாரண மழைப்ப நீயோவன்றேனென்றய்''

கள்ளமாயுலகங் கொள்ளுங்கருணையான் மறையிற் கூறும்
எள்ளலாகாத மூலத்தியாதுக்கு முதலாயுள்ள
வள்ளலே காத்தி யென்ற மாகரி வருத்தந் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதன வேய்தபோற்றி''

என்றும், நம்புலவர் பெருமான் கூறியுள்ளவைகளையும் இன்னும் பல ஆதாரங்களையும் எடுத்துக் காட்டுவர்.

அத்வைதிகளோ எனின்,

அரனதிகனுலகளந்த வரியதிகனென்று மைக்கு மறிவிலார்க்குப்
பரகதி சென்றடைவரிய பரிசேபோற் புகலரிய பண்பிற்ருமால்

என்றதை மட்டுங் காட்டி நிறுத்துவர். இவைகளை யெல்லாம் ஒப்ப நோக்கி நமது அபிப்பிராயம் இன்ன வென்று கூறுதல் சால்புடைத்தோ வன்றே எனின், இது தீராக் கக்ஷியாதலின் அத்துணைச் சால்புடைத்தன்று என்பர். எனினும் அபிப்பிராயங்கள் மாறுபட்டு நிற்பன இவ்வுலக வியற்கையாதலின் இதனின்றும் பின் வாங்குவேமல்லேம்.

முதலில் கீழே கூறிய அவரவர்களது சித்தாந்தத்திற்குச் சமாதானமாய் இரண்டொன்று பார்ப்பாம். அவரது நாமதேயம் இடுகுறிப் பெயரன்று, காரணப்பெயர் என்பர். கம்பங்கொல்லையைக் காத்ததினுல் 'கம்பன்' என்றும், கம்புகொண்டு சோழனுக்கு முன் நின்றதினுல் 'கம்பன்' என்றும் அழைக்கப்பட்டனர் என்பர். இதுகாறும் ஆக்ஷேபிக்கப்படாத இக்கர்ண பரம்பரைக் கதையை ஒப்புக்கொள்ளுமிடத்து இவரது நாமதேயத்திற்கும் ஏகாம்ரேசுவரர் நாமதேயத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று புலப்படும். ஆயின் இவர் மகற்கு 'அம்பிகா

பதி' என்ற பெயர் வைத்ததற்குச்சமாதானம் என்ன கூறுவீர்! எனின்—கம்பரது தகப்பனர் பெயர் அங்ஙனமிருந்திருத்தல் கூடும். ஆயின் அப்பெயரைத் தன் மகற்கு இவ்வுலக வழக்கம்போன்று வைத்திருக்கலாம். அவன் சைவனுயிருந்தால் இவர் வைஷ்ணவரா யிருந்திருத்தல் கூடாதோ? தற்காலம் வைஷ்ணவ பரமாயிருக்கும் கீற்று நாமக்காரர்கள் தங்களுக்குப் பிரீதி யில்லாதுபோனுலும் நிர்ப்பந்தத்திற்காகவும், வேறு சில காரணங்களுக்காகவும் தங்கள் குமாரர்களை சைவப் பெயரால் அழைப்பதையும், அப்பெயருடையவர்கள் தங்கள் பிதாமார்களைப்போல ஸ்ரீமந் நாராயணனே சர்வோத்கிருஷ்டமான தெய்வம் என்று கூறுவதையும், சைவர்களில் சிலர் சுத்த வைஷ்ணவப் பெயரால் அழைக்கப்பட்டும் பரம சைவராய் சைவ சித்தாந்தத்தில் ஈடுபட்டு நிற்பதையும் பார்க்கவில்லையா? காலஞ்சென்ற மகா வித்வான் தாமோதரம் பிள்ளையவர்கள் பின்னர் கூறியவர்களிற் சேர்ந்தவரன்றே? இப்பவும் மதாபிமானங்களில் தகப்பனுக்கும் மகனுக்கும் மாறுபாடு ஏற்படவில்லையா? ஆகவே கம்பரது நாமதேயம் ஏகாம்ரேசுவரர் நாமதேயமே என்று வைத்துக்கொண்டபோதிலும், அந்நாமதேயத்தினுல் மட்டும், அவரை 'சைவர்' என்று சித்தாந்தப்படுத்தலில் விசேஷமாக இடர்ப்பாடு ஏற்படுதலையும், இவரது மகனது மதத்தினுல் இவரை 'சைவர்' என்று கூறுவது சால்புடைத்தன்று என்று எடுத்துக் காட்டினேமென்க.

வைஷ்ணவர்கள் தங்கள் கூற்றுக்கு ஆதாரமாய்க் காட்டியுள்ள பாடல்கள் பசுமரத்தாணி யறைந்தாற் போன்று ஸ்ரீமந்நாராயணனுக்குப் பரத்துவம் கூறிச் செல்லுமாயினும், அப்பாடல்கள் கவிக் கூற்றல்லவே. அவ்வவ்விடங்களில் வருமவர்கள் ஸ்தோத்தரித்ததே யன்றி

வேறன்று. ஆதலின் அப்பாடல்களை வைத்துக் கப்பரது மதத்தை சித்தாந்தப் படுத்தல் உசிதமன்றென்று சைவர்கள் கூறுநிற்பர். தங்கள் கூற்றிற்குத் திருஷ்டாந்தமாக நல்லாப்பிள்ளை பாரதத்தில் 'ஸ்ரீவாசுதேவன் அருச்சுனனுக்குக் 'கீதையை' உபதேசிக்குமிடந்து'

எத்தேயத் தெத்திறத்தோரெவ்வருணத்தரெவ்வுருவி னை
[ன்னையாய்ந்தார்
அத் தேயத்தத்திறத்தோரெ வருணத்தவ்வுருவோடவர்
[நேராவேன்
முத்தேவர் முத்தொழிலும் முக்குணமும் மாறி மாறி முடிகின்ற
வித்தாகி நின்ற பாப்பிருமப் பரம்பொருள்யான் மெய்க்
[கொள்வாயே.

என்று ஸ்ரீமந் நாராயணனுக்குப் பரம்பிரமத்துவம் கூறியுள்ளனரே, அதை ஒப்புக்கொண்டவரோ சைவராகிய நல்லாப்பிள்ளை என்பர்?

ஒருவடநூலை மொழிபெயர்ப்பதாய் சங்கற்பித்துக் கொண்டோரிற் சிலர் அந்நூலின் பேரிலேயே திருஷ்டியாயிருந்து தங்கள் காரியத்தை முடிப்பர். சிலர் அதின் சாரத்தை பட்டும் கிரகித்துச் சொந்த கற்பனை சக்தியை ஊட்டுவர். முற் கூறினவர்களுடன் சேருவர் நல்லாப்பிள்ளை. பிற் கூறினவர்களுடன் சேருவர் நம்புலவர் பெருமான். வடமொழி கீதையில் ஈசுவரனுக்குப் பரப்பிரம்மத்துவம் காட்டியிருப்பதால் அதை எழுதியுள்ளார் நல்லாப்பிள்ளை. ஆயின் நமகவி வால்மீகி ஸ்தோத்தரித்த பாகங்களைமட்டும் மொழிபெயர்த்ததுடன் விடாமல், எம்பெருமானது திருக்கல்யாண குணகணங்களாகிய பெருங்கடலில் ஆழ்ந்து நெஞ்சுருகும் வைஷ்ணவராதலால், அவ்வால்மீகி பகவான் கூறுது நின்றவிடத்தும் தன் வைஷ்ணவாபிமானம் முன் பிடித்துந்த ஸ்ரீமந் நாராயணனை 'ஸௌல

ப்யம், பரப்பிரமத்துவம், முதலிய குணங்களால் அலங்கரியா நிற்பர். இதுவே அதற்கு சமாதானம் என்க.

மேலும் ஒருவனது சமயத்தை அவன் பிறப்பு முதலிறப்பீறாக நடந்துள்ள அவன் வைபவங்களை நன்றாய்ப்பார்த்த பின்னரே திட்டமாகச் சொல்லக்கூடும். தற்காலம் இராம நாதபுரத்திற்குச் செல்லுமவர்கள் இவருக்கு வைஷ்ணவபரமாக சமாதி வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்வர். எக்காரணம்பற்றி என்று கேட்பாம்.

மேலும் இராமாயணத்தில் வால்மீகி நாதன் கூறுது நின்றவிடத்தும் 'திருமண்காப்பு' விஷயமாய் எவ்வளவழகாய் எழுதியுள்ளார் பாரீர்.

"என்று நான்முகன் முதல் யாரும் யாவையும்
நின்ற பேரிருளினை நீக்கி நீணெறி
சென்று மீளாக்குறி சேரச் சேர்த்திடும்
தன் திருநாமத்தைத் தானுஞ்சாத்தியே"

இதைப்பார்த்த பெரியோர் நம்புலவர்பெருமான் திருமண்காப்புத் தரித்து நின்ற வைணவர் என்பதை மறுப்பரோ? சன்னியாசி லக்ஷணம் கூறுங்காலை வைஷ்ணவபரமாக 'யக்ஞோபவீத' சகிதம் கூறுவர்.

'தாமரைக்கண்ணோடோர் தவத்தின் மாலையன்
ஆமையினிருக்கையன் வளைந்தவாக் கையன்
நாமநூன் மாரிபினன் னுகினனரோ
தூமன் த்தகுந்ததி யிருந்த சூழல்வாய்'

பரமபதத்தை வர்ணிக்குமிடத்துக் கம்பரது பாடல்களை உற்று நோக்குவீர்.

சிறுசாலையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம் வேறுபடா
வுறுகால் கிளர் பூதமெலாமுகினும்
மறுசா நெறியெய்துவன் வானுடையாய்

என்றும்,

சீதங்கொள் மலகுளோனும் மீதவருமென்பதென்னே
வேதங்கள் காண்கிலாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணிற் பார்த்தார்ன் படிவங்கொண்டிய பஞ்ச
பூதங்கள் விளியு நாளும் போக்கிலாவுலகம் புக்கான்.

என்றும் கவிக்கூற்றாகவே கூறியுள்ளார். இங்ஙனம் வைகுண்டத்தைப் பற்றிக் கூறுமிடத்து சாமானியமாகக்கூறாது தன் வைஷ்ணவ அபிமானம் தோன்றக் கூறியருளுவர்.

எம்பெருமானது திவ்ய தேசங்கள் 108ல் பிரதானமான கோயிலைப்பற்றியும் அங்குப் பள்ளிகொண்டிருக்குங் கொண்டல்வண்ணனைப்பற்றியும் திருவாய்மலருங்காலை நம் கவியினது ஆனந்தமான வார்த்தைகளைப் பார்ப்பாம். என்னப்பனையும், என்னப்பன் அங்கு எழுந்தருளின பிராபவத்தையும் வரலாற்றையும் பற்றிய விபரம் தெரியாதோர் அஞ்ஞானாந்தகாரத்தில் மூழ்கியுள்ளார் என்று பொருள் தொனிக்கும்படி வரைந்துள்ளார்.

பிணியரங்க வினையலகப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிப்படு
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந்தந்தானை அறியாதார் அறியாதார்.

இன்னும் வரும்.

வி. வி. ஸ்ரீனிவாஸாசாரியன் பீ. ஏ., பீ. எல்.

விகட ஸஞ்சீவினி.

2. ஆசாரம்.

(செல்லம்மாளும், அன்னம்மாளும் பிரவேசிக்கின்றார்கள்.)

செல்:—அம்மா, அன்னம்மா! இக்காலத்தவர்களுக்குச் சுத்தமாய் ஆசாரமென்கிற பேச்சேயில்லை. அதுவும் என் மருமகள் வீட்டுக்கு வந்தது முதல் வீட்டில் சுத்தப் பறைத்தீட்டுக் கலக்கிறது. இனி நம்மைப்போலொத்தவர்கள் இருக்கக்கூடாது. ஏதாவது சொன்னால் நேருக்குநேர் என்னையே வம்பு கூறுகிறார்கள்.

அன்ன:—செல்லம்மா! சொன்னால் நம்புவாயோ மாட்டாயோ அறுபது வயதான எங்ககத்துக்காரர் இப்பொழுதும் ஆசாரமென்கிற வார்த்தையை அறியார். நான் மாத்திரம் எப்படியெப்படியோ கொஞ்சம் ஆசாரம் நிறுத்திக்கொண்டு வருகிறேன். எங்கள் வீதியிலிருந்து தூரமானவர் போனால், அவர்களை இருநூறு திட்டுத்திட்டி, வீட்டில் உள்ள மண்பானைகளையெல்லாம் எடுத்துத்தூர எறிந்து விடுவேன். அரைவாசி முக்கால்வாசிப்பேர் என் வாய்க்குப் பயந்து, அவர்கள் குளிக்கும் துறைக்கு அடுத்த வீதி வழியாய்ச் சுற்றிப்போவார்கள். உப்பு முதல் சகல வஸ்துக்களையும் தினம் கழுவிச்சுத்தி செய்வேன். எங்களவர் வீதியிலிருந்து வரும்பொழுது எதிரே ஒரு செம்பு சாணி நீரைக் கரைத்துக் கொண்டுபோய் மேலே விட்டுச் சுத்தியான பிறகு உள்ளே வரவிடுவேன். போன குளிர்காலத்தில், இராத்திரிப் பனிபெய்யும்பொழுது மேலே சாணி நீர் விட்டேன் என்று என் புருஷர் மூன்று மாதம் வீட்டுக்கு வராமல் வெளியே போய்விட்டார்; போனால் போகட்டுமென்று

சும்மா இருந்துவிட்டேன். நமக்குக் கோமயம் போட்டா லொழிய ஒன்றும் சுத்தமாகாதல்லவா.

செல்ல:—நீ அதிர்ஷ்டமுள்ளவளாகையால், எப்படியோ ஒருமாதிரியாக ஆசாரம் நடத்திக்கொண்டு வருகிறாய். எனக்கு உன்னைப்போல் நடக்காது. அப்படியிருந்தும் நான் தினம் இருநூறுதரம் ஸ்நானம் செய்கிறேன். இன்று மாத்திரம் இதுவரை பத்து ஸ்நாநம் செய்தேன். உதயத்தில் எழுந்திருந்து கொட்டிலுக்குப் போனபொழுது, காலின்கீழ் ஏதோ மெத்தெனப்பட்டு அது எந்தத்துணியோ என்று தலைகுளித்தேன். பிறகு என் மருமகள் பக்கத்திலிருந்து போனபொழுது, கொய்சகம் பட்டாற்போல் சந்தேகம் வந்து திரும்ப ஸ்நாநம் செய்தேன். கோதாவரிக்குப்போய்க் குடமெடுத்துக் கொண்டு வருகையில் துணி தோய்க்கிறவர்கள் நீர்மேலே பட்டாற்போல் சந்தேகம் தோன்றித் திரும்ப ஸ்நாநம் செய்தேன். பின்பு கரைக்கு வந்தபொழுது, நீரில் காலில் ஏதோ இலைபட்டு, பற்றுப் பாத்திரங்கள் தேய்க்கிறவர்கள் போட்டபற்று இலையோ என்னவோ என்று நீரைத்தூரக் கொட்டிப்போய், திரும்பவும் ஸ்நாநம் செய்தேன். குடமெடுத்துக்கொண்டு பாதித்தூரம் வரும் பொழுது, இருபது கஜதூரத்தில் பறையன் தென்பட்டு, நீரை நடுவீதியில் கொட்டி, அவனை நாலு வசவுவைது, அவன் நாசமாய்ப் போகட்டுமென்று திரும்பவும் கோதாவரிக்குப் போய் ஸ்நாநம் செய்து, நீரெடுத்துக்கொண்டு வந்தேன். வீட்டுக்கு வந்த பிறகு, அடுப்பின்மேல் உலை நீர்வைத்து, வேலைக்காரி தேய்த்துக்கொண்டு வந்த கரண்டியை எடுத்துக்கொண்டு போய், அது சரிபோகாததினால் கிணற்றண்டையில் திரும்பவும் ஸ்நாநம் செய்தேன். அந்தப்பற்றுப் பாத்திரங்களில் ஒன்றை யெடுத்துக்கொண்டு போய் என் மருமகள் உள்ளே வைத்ததினால், வீட்டிலுள்ள சாமான்களை யெல்லாம் நனைத்துக்கொண்டு இருக்கும்பொழுது ஜாமமாய் விட்டது. திரும்பவும் பல்லிமேலே விழுந்து ஒருதரமும், சூத்திரர்கள் வார்த்தை காதுகேட்டு ஒருதரமும், இரண்டு ஸ்நாநம் செய்தேன்; இதற்குள் சாதம் அளிந்துபோய் விட்டது. சீக்கிரம் குளித்துவிட்டு வந்து அன்னப் பாத்திரத்தை இறக்கி, அந்த அடுப்பில் கறிக்குப்



மூடபக்தியானாலும் பக்தி சிறந்தது.

எனது சிறுநேசர்களே! வாருங்கள்; இப்படி உட்காருங்கள். பொழுது போகாமல் திரியும் உங்களுக்கு ஒரு சிறு கதை சொல்லுகிறேன்; கவனமாய்க் கேளுங்கள். ஸ்ரீரங்க மென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஓடும் மகாநதியாகிய காவிரியாற்றின் கரையில் ஒரு நாள் மாலை 6-மணிக்கு ரங்கன், சேஷன், கோபாலன் என மூன்று வைஷ்ணவப்பையன்கள் சேர்ந்து உல்லாஸமாய் அடியிற்கண்டபடிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ரங்கன். 'அடே! நமக்கு எதிரில் தெரியும் உச்சிப்பிள்ளையார் மலைமேலிருக்கும் பிள்ளையார் ரொம்ப சக்தியாம்டா. ஒரு தேங்காய்க்கும் இரண்டு கொழக்கட்டைக்கும் எவ்வளவோ காரியங்கள் முடித்துக்கொடுப்பாராம்டா!'

சேஷன். 'ஆமடா! இவருக்குக் காது ஏன் அப்படி தொங்குகிறதென்றால் ஒரு சமயம் இவர் தாயார் குளிக்கப்போகும்பொழுது சிவன் அவர் தலையிலிருக்கும் கங்காதேவியுடன் அதிகமாகப் பேசிப் பிரியமாய் விடுவாரோ என்று பயந்து, பிள்ளையாரைக் கூப்பிட்டு

நான் குளித்துவிட்டு வரும் வரையில் இவ்விடத்திலேயே அப்பாவைவிட்டு அசையாமலிரு என்று சொல்லிப்போனாளாம். உடனே ஈசுவரனும் நாலைந்து தேங்காய் மூடியை இவர் கையில் கொடுத்து தம்பியையும் அழைத்துப்போய் விளையாடு என்றாராம். இவரும் தீனியிலிருந்த பிரியத்தால் தாயின் சொல்லை மறந்து தம்பியையும் அதட்டி அழைத்துக்கொண்டு மற்றோரிடத்திற்குப் போய்விட்டாராம். அம்பாள் திரும்பிவந்த ஸமயத்தில் ஈசுவரன் கங்காதேவியுடன் ஸல்லாபம் செய்துகொண்டிருந்ததைக் கண்டு, பிள்ளையாரை அங்கு காணாமல் மிகுந்த கோபத்துடன் இவரைத்தேடிக்கொண்டு வந்தாள். ஸுப்ரமண்யரும் நடந்த சங்கதிகளைத் தாயாரிடம் சொல்லவே, அம்பாளும் கோபாவேசத்தால் பிள்ளையாரின் இருகாதுகளையும் பிடித்து யார் தீனி தருகிறேனென்றாலும் கேட்பது இந்தக் காதுதானே என்று கத்த கத்த இழுத்துவிட்டாளாம். அதனால்தானப்படி இருக்காம்டா!'

ரங்கன். 'அடே! இவர் தீனிக்காசைப்பட்டு நம்ம பெருமாள் கோவிலில் நிமிஷத்துக்கு நிமிஷம் நல்ல நெய்யில் திவ்ய நைவேத்தியங்கள் ஆவதைக்கண்டு தனக்குக்கிடைக்காமல் போனாலும் வாஸனையாவது பார்ப்போமென்று கோவில் உள்பிராகாரத்தில் வந்திருக்கிறார். அதைக்கூட நம்ம ஜாதியார் விடாமல் வாஸனை மோருங் கூலியாக அவர் நெத்தியில் ஒரு நாமத்தை சாத்திருக்கிறார்கள்டா.

சேஷன். 'அடே! இவருக்கு வயறு என் அப்படியிருக்கு என்றால் பிரார்த்தனை செய்கிறவர்கள் எல்லாரும் இவருக்குத் தேங்காயும் வெல்லமும்தான் பிடிக்குமென்று தேங்காய்க் கொழக்கட்டையே செய்து நைவேத்யம் செய்கிறார்கள். உப்புக்காரமென்பது கண்ணில்கூட காட்டுவதில்லை. அதனால்தான் மப்புதட்டி வயறு ஒப்புசமாயிருக்குடா!'

கோபாலன். 'எனக்கு இந்தவிசை பரீக்ஷை தேறினால் நான் உப்புக்கொழக்கட்டை செய்து நைவேத்யம் செய்கிறேன்!

சேஷன். 'அடே, இத்தனை நாளாய் வெல்லப்பசையிலிருந்தவரை நாம் முதலெடுப்பிலேயே முழுமோசமாயடிக்கக்கூடாது. எனக்குத்தேறினால் நான் தேங்காயைத்தள்ளிவிட்டு பால் கொழக் கட்டை பண்ணுகிறேன்.'

கோபாலன். 'உன் வீட்டில் பால் தபால்தான். குசேலக் குடிசைபோலிருக்கும் உன் வீட்டில் பால் எங்கிருந்து வரும். மேலும் நம்ம ஜாதிக்குச் சிவத்துவேஷம் ஜாஸ்தியானபடியால் நாம் இதுவரைபேசிவந்ததுகள் நம்ம ஜாதியார் யாராவதொருவர் காதில் பட்டால் இன்று நமக்கு சோறு சோறுதான். நானே மிகவும் பயந்து பிள்ளையார் சக்தியை பார்ப்பதற்காகவும், நாம் படித்த புத்தகங்களில் தெய்வமிகழேல் என்றும் எல்லா ஸ்வாமியும் ஒன்றுதான் என்றும் சொல்லிருப்பதாலும், வித்யாஸமில்லாமல், நமதடுத்த வீட்டு ஸ்மார்த்தக்கிழவியிடம் எனக்கு வேலையான வுடனே கூலி நிறையத்தருவதாகச்சொல்லி வீட்டிலிருந்து தெரியாமல் உப்பும் அரிசியும்கொண்டுபோய்க் கொடுத்து எப்படியாவது காரியத்தை ஆகப்பண்ணலாம் என்று பார்த்தேன். இதற்கே இவ்வளவு கூத்திருக்க இவன் பால் கொழக்கட்டைக்கு போய்விட்டான்.'

ரங்கன். 'அடே, என் வீட்டில் மாடு கறக்கிறது. எனக்கு பரீக்ஷை தேறி நான் பாலெடுக்கும் வரை எங்கம்மாவும் பாராதிருந்தால் நாலு சேர் பால் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன். நம் ஜாதியில் நாம்தான் முதல் முதலில் பிள்ளையாருக்கு நைவேத்யம் செய்கிறோம். ஆதலால் ஆரம்பிக்கும்பொழுதே முழுமோசமாய் செய்யலாகாது. இனிமேல் அடுத்ததடவை முதல் உப்புக் கொழக்கட்டைதான்.'

சேஷன். 'அடே, இவர் சிறுவயதில் அதிகமாக விக்கிக்கொண்டிருந்திருப்பர் போலிருக்கு. அதனால்தான் இவருக்கு விக்கின ஈசுவரனென்று பெயர் வந்திருக்கு.'

இவ்வாறு சற்றுநேரம் பேசியானதும் மூன்று சிறுவர்களும் அவரவர்கள் வீட்டுக்கு போய்விட்டார்கள். அந்த வருஷம் பிள்ளையார் அனுக்ரகத்தால் இவர்கள் மூவருக்கும் பரீக்ஷை தேறிவிட்டது. ஆனால் இவர்களுக்கு பரீக்ஷைதேறின ஸந்தோஷம் ஒருமடங்கும் பிள்ளையாருக்கு பிரார்த்தனை செலுத்தவேண்டிய கவலை ஒன்பதுமடங்குமாய் ஆய்விட்டது.

சேஷன். 'இவ்வளவு கவலை யென்னத்திற்கு? பிள்ளையார் நாம் சொன்னதை நேரிலா கேட்டார்? பிரார்த்தனையை நிறுத்திவிடுவோமே.'

கோபாலன். 'அட, சீ! வாயை மூடு. பிள்ளையாருக்குக் கோவில் கட்டி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு நிறுத்திவிட்டாலும் ஒன்றுமில்லையாம். கொழக்கட்டை பண்ணுகிறேனென்று சொல்லி நிறுத்திவிட்டாலோ அவருக்கு அஸாத்திய கோபம் வந்துவிடுமாம். ராத்திரியில் தூங்கும்பொழுது தேளாய் வந்து கடிப்பாராம். மலைமேலேத்தித் தள்ளிவிடுவராம். மேலும் காவிரியில் சுழலிலகப்பட்டுப் போகிறவர்களெல்லாம் பிள்ளையார் பிரார்த்தனைகளைச் செலுத்தாமல் அவர் கோபத்துக்குள்ளாகி அவருடைய தும்பிச்சங்கையால் சுழட்டித்தள்ளப் பட்டவர்களாம். நம்மால் ஒருநாளாவது காவிரியில் குளிக்காமலிருக்க முடியுமா? எண்ணெய் முறையன்று கூட நம்ம தாயார் ஒருசொம்பு வென்னீர் வைத்துக்கொடுக்காமல் நம்முடைய உச்சந்தலையில் ஒருகை எண்ணெயை வைத்து அரப்புருண்டையையும் உருட்டிக்கையில் கொடுத்து, ஓடு காவிரிக்கு என்கிறுளே. அப்பொழுது நாம் எப்படி பயமில்லாமல் குளிக்கிறது. இந்த வம்பே வேண்டாமப்பா. எனக்கு இந்த வருஷம் ஆவணியாவிட்ட நமஸ்காரத்தில் கால் ரூபாய் கிடைத்திருக்கு; அதற்கு சர்க்கரை வாங்கிக்கொடுத்து விடுகிறேன். ஒருத்தன் அரிசியும் ஒருத்தன் பாலும் கொண்டு வாருங்கள். இனி கிழவியை ஸரிப்படுத்தவேண்டியதுதான். எழுந்திருந்து வாருங்கள் போவோம்.' என்றுன்.

உடனே ஒவ்வொருவரும் தன் தன் வீட்டிற்குப்போய் எவ்வளவோ ஸாமர்த்தியமாய் ஒருவருக்கும் தெரியாமல் ஸாமான்களை எடுத்துக்கொண்டு கிழவி வீட்டிற்கு வந்தார்கள். அக்கிழவிக்கு ஆளுக்கொரு நமஸ்காரம் செய்துவிட்டு அவளிடம் தாங்கள் செய்துகொண்ட பிரார்த்தனையையும், அதன்படியே தங்களுக்குப் பரீக்ஷை தேறிவிட்டதையும், விஸ்தாரமாக சொல்லி, அவளைப் பின் வருமாறு கேட்டுக்கொண்டார்கள். 'பாட்டி! தயவுசெய்து இந்தக் கொழக்கட்டையைச் செய்துகொடுத்தாயானல் உனக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு. இன்னொருதரம் கொழக்கட்டை பண்ணுகிறேமென்று வேண்டிக்கொண்டால் பிள்ளையார் எங்களுக்கு அவசியம் வேலை செய்துவைப்பார். முதலில் வருகிற சம்பளத்தில் கூலி நிறையத் தருகிறோம்.' இதைக் கேட்டதும் கிழவிக்கு வந்த கோபத்திற்கோரளவில்லை. 'என்னடா, வைஷ்ணவப் பயல்களா! நீங்களாவது எங்கள் பிள்ளையாருக்கு நைவேத்யம் செய்யவாவது.

162006

போனால் போகிறது காசாப்பட்டால் பண்ணுவோமென்றால் இவன்களுக்கு எந்த ஜன்மாந்தரத்திலோ வேலையாகப் போகிறதாம்; அப்பொ கூலி கொடுக்கிறான்களாம். அதுவும் இன்னொருதரம் பண்ணினாலாம்' என்று இரைய ஆரம்பித்தாள். உடனே ரங்கன் எழுந்திருந்து அவள் வாயைப் பொத்திக்கொண்டு 'இரைச்சல்போடாதே. இது வெகு ரகஸியமாக நடக்கவேண்டிய காரியம். இன்னொருதடவை கொழக்கட்டை நைவேத்யம் செய்வதாக வேண்டிக் கொண்டால் பிள்ளையார் கட்டாயம் எங்களுக்கு வேலை செய்து கொடுப்பர். அதில் சந்தேகமேயில்லை. வேலையானதும் முதல் மாதச்சம்பளத்தில் உனக்கு ஆளுக்கொரு ரூபாய் கொடுத்துவிடுகிறோம். வேண்டுமானால் இப்பொழுதே எழுதித்தருகிறோம்' என்றான். இவர்கள் அவ்வாறு எழுதிக்கொடுத்ததாலும், சிறுவர்களுக்கே இவ்வளவு பக்தியிருக்கும்பொழுது ஸ்வாமி காரியத்தைத் தான் மாட்டேனென்று சொல்லக்கூடாது என்ற எண்ணத்துடனும் அந்தக் கிழவி பால்கொழக்கட்டையைச் செய்துகொடுத்தாள். செய்து முடிந்ததும் பையன்களுக்கு பலமான யோஜனை வந்துவிட்டது. இதைப் பகலில் கொண்டு போனாலோ ஊராருக்குத் தெரிந்துவிடும். தெரிந்தாலோ மண்டை உடைபட்டுவிடும். இருட்டில்போனாலோ கோவில் கதவு சாத்தியாய்விடும். இதற்கென்ன செய்கிறது. என்று பலவிதமாக யோசித்துக் கடைசியில் மண்டை யுடைபடுவதைவிட அன்றிராத்திரி வாத்தியார் வீட்டிற்குத் தங்களைப் படிக்கவரச் சொல்லியிருப்பதாகத் தங்கள் வீட்டில் சாக்குச் சொல்லிவிட்டு தாங்கள் பிரார்த்தித்துக்கொண்ட இடமாயும், உச்சிப் பிள்ளையார் மலைக்கு எதிரிலிருப்பதுமான காவிரிக் கரையிலேயே நைவேத்யம் செய்வதே மிகவும் நலமென்று தீர்மானித்தார்கள். அவ்வாறே அன்று அஸ்தமித்தவுடன் கொழக்கட்டை பாத்திரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். கொஞ்ச தூரம் போனதும் ஒரு போக்கிரிப்பயல் இவர்கள் இருட்டில் செல்லுவதைக்கண்டு, ஸமீபத்தில் வந்து இவர்களை அதட்டினான். உடனே சேஷு மிகவும் பயந்தவனாகையால் "ஒன்றுமில்லை, ஐயா! பிள்ளை—இல்லை—கொழ—" என்று உளர ஆரம்பித்தான். ரெங்கனுக்கு இவன்மேல் கோபம் வந்து 'கட்டை' என்னும் பின் பதத்தை அவஸரத்தில் உளரிவிட்டு அவன் கிடக்கிறான்.

ஒன்றுமில்லை. ஐயா' என்ருன். வந்தவனும் 'என்னடா பசங்களா! என்னவோ புரளி செய்கிறீர்கள்' என்று சொல்லிப் பாத்திரத்தை இழுத்தான். உடனே ரெங்கன் 'இரும் ஐயா! தொடாதேயும். நானே காட்டுகிறேன். கோட்டையிலிருக்கும் எங்க அக்காளுக்கு சங்காதோஷமானதால் இந்த மாவுருண்டைகளை ஒரு மாந்திரீகன் மந்திரித்துக் கொடுத்தான். நிலாவாயிருக்கிறபடியால் நாங்களும் இதைக்கொண்டு போய்க் கொடுத்து வரலாமென்று புறப்பட்டோம். நீர் இதைத்தொட்டால் உம்மையே நாசமாக்கிவிடும்!' என்ருன். வந்தவனும் மந்திரமென்றதற்கேற்ப, பாத்திரத்திற்குள்ளிருந்ததும் மாவுருண்டைபோலிருந்ததைப் பார்த்ததும், தலை தப்பியது தம்பிரான் புண்யம் என்றெண்ணி ஓடிவிட்டான். பிறகு இந்த மூன்று பையன்களுமாக காவிரியாற்றை யடைந்து கைகால்களை சுத்திசெய்துகொண்டு பின்வருமாறு யோசித்தார்கள். 'நாம் இவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டுவந்த கொழக்கட்டையைப் பிள்ளையார் நேரில் வந்து ஸாப்பிடாவிடில் என்ன பிரயோஜனம்? அப்படிப் பிள்ளையார் வராதபோனுல் நாமும் இன்று உபவாஸமாகவே என்ன வந்தாலும் ஸரி, இங்கே படுத்துவிடுவோம்' என்று தீர்மானித்து எல்லோரும் ஒரே மனதாய் 12 மணி வரையில் காத்திருந்தும் பிள்ளையார் வராததால், கொழக்கட்டைப் பாத்திரத்தை நடுவில் வைத்துச்சுற்றிலுமாக மூவரும் படுத்துத் தூங்கிவிட்டார்கள்.

பக்தவத்ஸலரான விநாயகரும் இச்சிறுவர்களது உறுதிக்கும் பக்திக்கும் ஈடுபட்டு மலையைவிட்டு இறங்கிவந்து "என் குழந்தைகளே! எழுந்திருங்கள். உங்கள் மனவுறுதியைப்பார்க்க மிகவும் ஸந்தோஷமாயிருக்கிறது. வாருங்கள்; இந்த நிலாவில், சல சலவென்று அரித்தோடும் ஜலத்தில் நின்றுகொண்டு வேடிக்கையாகக் கொழக்கட்டையைத் தின்போம்?' என்று சொல்லி அந்தப் பையன்களையும் அழைத்துக்கொண்டு நடு ஜலத்தில் போய் உல்லாஸமாக சிறிப்பு விளையாட்டுடன் கொழக்கட்டையை ஸாப்பிட்டார். பின்பு விடியற்காலஸமயமாயிருந்ததால் மூன்று பையன்களுக்கும் மூன்று ஜில்லாக்களில் உயர்ந்தவேலை கிடைக்கும்படி வரம் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார். கொஞ்சகாலத்திற்கெல்லாம் ஒருவனுக்கு மதுரையிலும், ஒருவனுக்கு சேலத்திலும், ஒருவனுக்கு தஞ்சையிலுமாக

வேலையாய்விட்டது. அப்பொழுது அவர்கள் கொழுக்கட்டைசெய்து கொடுத்த கிழவியை மறவாமல் அவளுக்கு எழுதிக்கொடுத்தபடி பணமும் கொடுத்து அவளையும் அவள் ஆயுஸ்பர்யந்தம் ஒருவர் மாற்றி ஒருவராக ஸம்ரக்ஷித்தார்கள். உச்சிப் பிள்ளையாரை அவர்கள் என்றும் மறப்பதில்லையென்று சொல்லவும் வேணுமோ? பார்த்தீர்களா பக்தியின் மகிமையை. இவ்வருமை ஸ்ரீ வாணீ விலாஸினீயை வாணியின் கிருபையால் வாசிக்கப்பெற்ற சிறுவர், சிறுமியர்களே! நீங்களும் இவ்வாறே ஈசனிடம் மன உறுதியுடனும் பக்தியுடனுமிருப்பீர்களாகில் உங்களுக்கும் மேன்மேலும் மங்களமே உண்டாகும். எழுந்திருங்கள் போவோம். நான் இவ்விடம் வரும்பொழுதெல்லாம் உங்களுக்கு சிறு கதைகள் கொண்டு வருகிறேன்.

உங்கள் பிரியமுள்ள

பார்வதி.

பணமில்லாமல் கஷ்டப்படுபவன்.—நான் இன்று பணங்கொடுக்க முடியாததைப்பற்றி மிகவும் வருத்தப்படுகிறேன். என்ன பார், இப்பொழுது தான் எண்ணெய்க் கடைக்காரன் வந்து விட்டுப்போனன். அவனுக்கு—

பலசரக்குக்கடைக்காரன்.—ஆம் இப்பொழுது தான் நான் அவனைச் சந்தித்தேன். எனக்குக் கொடுக்கவேண்டியிருப்பதால் அவனுக்குக் கொடுக்கக் கூடவில்லையென்று சொன்னீராம். ஆகையால் இந்தாரும் என்னுடைய கணக்கு.

புதிதாக வீட்டிற்குள் நுழையும் விருந்தாளி.—யாராவது சந்தேகப் படக்கூடிய மனிதர்கள் வந்தால் உனது நாய் குலைக்கிற வழக்கமுண்டோ?

வீட்டின் சொந்தக்காரன்.—ஆம். இப்பொழுது அது குலைக்கிறது காது கேழ்க்கவில்லையா.

தேசாபிமானம்.

"ஈதென் சொந்த ஊர் ஈதென் பிறப்பிடம்"
எனத்தன் னுள்ளே எப்போ தாயினும்
சொல்லுதற் கொண்ணு நல்லுணர் வில்லா
ஒருவனேனும் உயிருடன் உளனே?
அந்நிய நாட்டில் அலைந்தபின் தன்னூர்
நோக்கிக் காலடி போக்கிய காலையில்
உள்ளம் ஒளிரா ஒருவனும் உள்ளனே?
இத்தகை ஒருவன் இருப்பனே ஆயின்
சென்றவன் யாவன் என்று நன் றறிதி
உயரிய பட்டம் உடையோனுயினும்
பெயரால் அவன் மிகப் பெரியவனுயினும்
ஆசை விரும்பும் அளவிலா நிதியம்
படைத்தவனுயினும் பரவசத்துடன் எப்
பாணரும் அவன் புகழ் பாடுதல் ஒழிவர்
தன்னையே யாவுமாய் உன்னுமப் புன்மையோன்
இடம் பொருள் ஏவல் இவை எலாம் இருந்தும்
இருக்கையிலே நல் இசையெலாம் இழப்பன்
இவ்வாறிருமுறை இறந்திப்பதடி
புலம்புவாரற்றும் பூஜ்யதை யற்றும்
பாடல் பெறுதும் பண்டு தான் தோன்றிய
இழிய புன் புழுதிக் கிழிந்து செல்குவனே.

ம. கோபாலகிருஷ்ணயர்.